# பாரதியும் பாரத தேசமும்

செந்தமிழ்ச் செல்வர்
ம. ப. பெரியசாமித்தூரன்

வானதி பதிப்பகம்
தி. நகர் • சென்னை-17

முதற்பதிப்பு : மே, 1979
இரண்டாம் பதிப்பு : டிசம்பர், 1981

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 8-00

பாரத நாட்டிலுள்ள முப்பதுகோடி ஜனங்களும் ஒரு ஜாதி.

—பாரதி வாக்கு

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600 014.

# பாரதமும் பாரதியும்

மகாகவி பாரதி பாரத தேசத்தைப்பற்றி எவ்வாறெல்லாம் சிந்தித்திருக்கிறுன் என்பதை எடுத்துக்காட்ட எழுந்த நூலே 'பாரதியும் பாரத தேசமும்' என்ற நூல்.

பாரதத்தின் சிறப்புக்களை மட்டும் பாரதி மார்தட்டிச் சொல்லவில்லை. அதன் குறைகளையும் மக்களின் சோம்பரையும் துயரங்களையும் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறுன். மக்களுக்காகவும் இந்தத் தேசத்துக்காகவும் எவ்வளவு கவலைப்பட்டுக் கவிதைகளை யாத்திருக்கிறுன், கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறுன் என்பதை இந்நூலைப் படித்தால் தெள்ளத் தெளியத் தெரிந்துகொள்ளலாம். அவன் கவலைப்படுவதோடு நின்றுவிடவில்லை; எப்படியெல்லாம் பாரதம் மற்ற தேசங்களோடு போட்டியிட்டுச் சிறந்தோங்கி விளங்கவேண்டும்; மக்கள் முன்னேற வேண்டுமென்ற தன் கனவுகளை—அபிலாஷைகளை—அறிவுரைகளை எல்லாம் அள்ளி வழங்கியுள்ளான். அவற்றையெல்லாம் ஒன்றுவிடாது ஒன்றுதிரட்டி நமக்குத் தருகிறுர் தமிழறிஞர் பெ. தூரன் அவர்கள். பாரதியின் மணிமொழிகளை மட்டும் அள்ளி வழங்காது அவற்றுக்குத் தெளிவான திறனுய்வாக விரிவான முன்னுரையையும் தொகுப்பாசிரியர் திரு. தூரன் அவர்கள் இந்நூல் வாயிலாகத் தருகிறுர்கள்.

இந்நூலுக்குப் பாரத தேசத்தின் முன்னுள் நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம், M.P. அவர்கள் அணிந்துரை அளித்துள்ளார்கள்.

தொகுப்பாசிரியர் திரு. தூரன் அவர்களுக்கும், அணிந்துரை அளித்த திரு. சுப்பிரமணியம், M.P. அவர்களுக்கும், இந்நூலை வரவேற்கும் வாசகர்களுக்கும் நன்றி.

ஏ. திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்

# அணிந்துரை

## திரு. சி. சுப்பிரமணியம், M. P. அவர்கள்

பெரியசாமித்தூரனும் நானும் நெடுங்கால நண்பர்கள். சென்னை பிரசிடென்சி காலேஜில் ஒரே சமயத்தில் மாணவர்களாக இருந்தோம். நான் 1926-ல் கல்லூரியில் சேர்ந்தேன். தூரன் 1927-ல் சேர்ந்தார். விக்டோரியா மாணவர் விடுதியில் சில வருஷங்கள் வாசம் செய்தோம். இக்காலத்தில்தான் எங்கள் இருவருக்கும் அறிமுகமாயிற்று. அது நட்பாக முற்றியது.

இந்த உறவு ஒரு தனிப்பட்ட முறையில் ஏற்பட்டதல்ல; தேசிய இயக்க அடிப்படையில் அமைந்தது. மகாத்மா காந்தியடிகளின் தலைமையில் சுதந்திர இயக்கம் மக்களின் இதயத்தைக் கவர்ந்து கொண்டிருந்த காலம் அது. மாணவர் இந்த இயக்கத்தில் பலவகைகளில் கலந்து கொண்டனர். அதற்கு அன்றைய அரசு பல முட்டுக்கட்டைகள், கட்டுப்பாடுகள் ஏற்படுத்தி உணர்ச்சி வெள்ளத்தைத் தடுக்க முயற்சி செய்துவந்தது.

தூரன் போன்ற தேசிய நோக்குக்கொண்ட பல மாணவர்கள் ஒன்றுசேர்ந்து வனமலர்ச்சங்கம் என்ற ஒரு குழுவை ஏற்படுத்தினோம். அக்குழுவில் பங்குகொண்ட பலர் சுதந்திர இந்தியாவில் பல்வேறு துறைகளில் பெரும் பதவிகளை ஏற்று நாட்டுக்குப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றனர். இந்தக்

குழுவினர் கூடினால் நாட்டுக்கு எவ்வாறு பிற்காலத்தில் சேவை செய்வது என்பது பற்றிப் பல்வேறு கனவு காண்பார்கள். பலருடைய கனவுகள் ஓரளவு நனவாக மலரும் பாக்கியம் பெற்றனர்கள். அதில் தூரன்தான் தம் கனவுகளில் பெரும் பகுதியில் வெற்றிகண்டு வாழ்க்கை நிறைவு பெற்றவராக இன்று விளங்குகிறார். அவர் கண்ட கனவெல்லாம் தமிழைப் பற்றியது. தமிழிலே கவிதைகள் இயற்றவேண்டும்; கருத்துக்கள் ததும்பக் கட்டுரைகள் எழுதவேண்டும்; தமிழிலே புதுமணம் மணக்கச் செய்யவேண்டும்—இவ்வாறு அவர் விரும்பினார்.

பிற்காலத்தில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் பொறுப் பேற்று, தமிழ்க் கலைக்களஞ்சியத்தையும் தமிழ் மக்களுக்கு வழங்கினார். புதிய புதிய கவிதைகள் புனைந்து தமிழுக்குச் சேவை செய்தார். குழந்தை இலக்கியத்திலே ஒரு புதிய சகாப்தத்தையே ஏற்படுத்தி எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாக விளங்குகிறார். தமிழிலே புதிய சாகித்யங்களைத் தோற்றுவித்துத் தமிழ் இசை வளர்ச்சிக்குப் பெரும் சேவை செய்து பல பெருஞ் சிறப்புக்களைப் பெற்றார்.

இவ்வாறு பிற்காலத்தில் மலரவிருக்கும் தூரன் மாணவனாக இருந்த காலத்திலேயே அவருடைய திறமை வெளிப்படலாயிற்று.

வனமலர்ச் சங்கத்தின் ஆதரவில் பித்தன் என்ற ஒரு பத்திரிகையை நடத்திவந்தோம். அதன் ஆசிரியராக அமைந்த தூரன் தம்முடைய எழுத்து வன்மையின் மூலம் எங்களுடைய பெருமதிப்பைப் பெற்றிருந்தார். 'பித்தன்' மூலமாகச் சுப்பிரமணிய பாரதியாரை எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அக்காலத்தில் பாரதி பாடல்கள் முழங்காத காங்கிரஸ் கூட்டங்களே இல்லை. அந்தப் பாரதியாரின் வாழ்க்கைச் சரிதையை அவர் இயற்றி அதுவரையிலும் மறைந்து கிடந்த கவிதைகளை, உரைநடை இலக்கியங்களை, தேனீயைப் போல் பல இடங்களுக்குச் சென்று சேகரித்து எங்களுக்கு வழங்குவார். அந்தப் பணியைத் தொடர்ந்து

தமது வாழ்க்கை முழுதும் பாரதியாரின் உண்மைத் தாசனாகப் பாரதியின் சிறப்புகளைப் பல்வேறு கோணங்களிலிருந்து மக்களுக்கு எடுத்து விருந்தாக அளித்துவருகிறார். இப்போது பாரதியைப்பற்றிய ஒரு நூல் வரிசையை உருவாக்க முன் வந்துள்ளார். பாரதியும் பாட்டும், பாரதியும் தமிழகமும் என்ற இரண்டு நூல்கள் ஏற்கெனவே வெளியாகியுள்ளன. முதல் நூல் இசை சம்பந்தமானது. இரண்டாவது பாரதி, தமிழ் மக்களை எவ்வாறு தட்டியெழுப்பினார், தமிழில் மறுமலர்ச் சியைத் தோற்றுவித்தார் என்பதைப் பற்றியது.

பாரதியும் பாரத தேசமும் என்ற இந்த மூன்றாவது நூல் அவர் பாரத தேசத்தின் பெருமைகளைக் குறித்தும், பாரத மக்களை விடுதலை இயக்கத்தில் பங்குகொள்ள எவ்வாறு ஊக்கினார் என்பது பற்றியும், இந்தியாவின் ஒருமைப்பாட்டை மக்களுக்கு வலியுறுத்தி நம் நாட்டு மக்கள் ஒற்றுமையுடன் வாழச் சாதிமத பேதங்களைத் தகர்த்தெறிய எவ்வாறு வழி காட்டினார் என்பதைப்பற்றியும் விளக்குவதாகும்.

பாரதியார் ஓர் தீர்க்கதரிசி. நம் நாடு விடுதலை பெற்று சுதந்திர நாடாக விளங்கப்போகிறதென்பதை மக்களுக்கு உணர்ச்சி மிக்க கவிதைகளின் மூலம் அறிவித்து நம்பிக்கையை ஊட்டினார். சுதந்திர இந்தியாவைத் தம் ஞானக்கண் முன்னால் கண்டு பாடுகிறார்:

"ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திர மடைந்துவிட் டோமென்று"

என்று ஆனந்தக் கூத்தாடுகிறார்.

பல மதங்கள், பல சாதிகள், பல மொழிகள் இருந்தாலும் அவற்றின் காரணமாக இந்தியாவின் ஒற்றுமை சீர்குலைய வேண்டியதில்லை என்பதை விளக்கிப் பாரத மக்களுக்குச் சங்கநாதம் செய்கிறார்.

"எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் இந்நாட்டு மன்னர்"— இந்த ஒற்றுமை உணர்ச்சி எவ்வளவு அவசியம் என்பதை நாம் இன்று உணருகிறோம்.

"செப்பு மொழிபதி னெட்டுடையாள்எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்."

என முழங்குகிறார்.

சுதந்திர இந்தியா எந்தெந்தத் துறையில் எவ்வாறு முன்னேறவேண்டும் என்று இவைகளையெல்லாம் ஒரு பெரிய பொருளாதார நிபுணரைப்போல் வரையறுத்துத் தம்முடைய கவிதைகளின் மூலம் மக்களுக்கு வழி காட்டுகிறார் :

"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்"

என்றொரு பாட்டிலும்,

"தனியொருவனுக் குணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்"

என்று இன்னொரு கவிதையிலும் பாடுவதோடு,

"சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்
வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்."

என்றும் பாடி, கங்கையையும் காவிரியையும் இணைக்கும் பெருந்திட்டத்திற்கு உருக் கொடுத்துள்ளார்.

இவ்வரிய கருத்துக்களைக் கொண்ட பாக்களையெல்லாம் இந்நூலில் தொகுத்துக் கொடுக்கிறார் தூரன்.

தமிழ்மொழிப் பற்றுள்ளவர்கள் பெரும்பாலும் சமஸ்கிருதத்தை வெறுக்கிறார்கள். அல்லது உதாசீனம் செய்கிறார்கள்; பாரதியாரின் தமிழ்ப்பற்றை யாரும் குறை கூற முடியாது. கம்பனைப்போல் வள்ளுவன்போல் இவ்வுலகில் எவரையுங் காணமுடியாதெனப் பாடிய பாரதியார், 'எங்கள் நாடு' என்ற பாட்டில்,

"பன்னரும் உபநிடத நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூல்இது போலே"

என்று கூறி மகிழ்கிறார். தமிழையும் சமஸ்கிருதத்தையும் இரண்டு கண்களைப்போலப் பாவிக்கிறார் கவிஞர்.

இந்தியர்கள் அனைவரையும் ஒரே பாரத ஜாதி என ஒன்றுபடுத்துகிறார் பாரதியார். கங்கையிலே வந்து சேரும் வாய்க்கால்களெல்லாம் கங்கையாகவே மாறிவிடும். பாரத தேசத்தில் வந்து குடியேறித் 'தலைமுறை தலைமுறை'யாக இங்கு வாழ்பவர்கள் எல்லாம் நமது ஜனக்கூட்டத்தைச் சேர்ந்தவராகின்றனர்.

ஆரிய சம்பத்தைப்பற்றிப் பாரதியார் குறிப்பிடுவதை இக் காலத்தில் இளைஞர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். "நமது வேதம், நமது சாஸ்திரம், நமது ஜனக்கட்டு, நமது பாஷைகள், நமது கவிதை, நமது சிற்பம், நமது ஸங்கீதம், நமது நாட்டியம், நமது தொழில் முறைகள், நமது கோபுரங்கள், நமது மண்டபங்கள், நமது குடிசைகள் இவை அனைத்துக்கும் பொதுப் பெயர் ஆரிய ஸம்பத்து. காளிதாசன் செய்த சாகுந்தல நாடகம், ஹிந்தி பாஷையிலே துளஸீதாசர் செய்திருக்கும் ராமாயணம், கம்ப ராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், ஆண்டாள் திருமொழி-இவை யனைத்துக்கும் பொதுப் பெயராவது ஆர்ய ஸம்பத்து. தஞ்சாவூர்க் கோவில், திருமலை நாயக்கர் மஹால், தியாகையர் கீர்த்தனங்கள், எல்லோராவிலுள்ள குகைக் கோயில், ஆக்ரா விலுள்ள தாஜ்மஹால், சரப சாஸ்திரியின் புல்லாங்குழல்— இவை அனைத்துக்கும் புதுப்பெயர் ஆர்ய ஸம்பத்து, எனவே ஆர்ய ஸம்பத்தாவது ஹிந்துஸ்தானத்தின் நாகரிகம். இந்த ஸம்பத்தைப் பாதுகாக்கும் வரையில் இந்த ஜாதிக்கு உயிருண்டு. இந்த ஸம்பத்திலே துருப்பிடிக்க இடம் கொடுத்து விட்டால் இந்த 'ஜாதியைச் செல் அரித்துவிடும்." எவ்வளவு அரிய சொற்கள்-அரிய் கருத்துக்கள்! இக்காலத்தில் தடம்புரண்டு எங்கு செல்லுகிறோம்... என்று அறியாமல்

தத்தளிக்கும் பாரத சமுதாயத்திற்கு வழி காட்டும் சொற்கள்!

புதிய கோணங்கியைக் கொண்டு நமக்குப் புத்தி புகட்டு கிறார், நம்பிக்கையூட்டுகிறார் பாரதியார்.

"சாத்திரம் வளருது, சாதி குறையுது,
நேத்திரம் திறக்குது, நியாயந் தெளியுது,
பழைய பயித்தியம் படீலென்று தெரியுது,
வீரம் வருகுது, மேன்மை கிடைக்குது,
சொல்லடி சக்தி, மலையாள பகவதி,
தர்மம் பெருகுது, தர்மம் பெருகுது."

இந்தியா மேன்மையுற, நம்மிடையேயுள்ள குறைகள் நீங்க, மக்கள் க்ஷேமமுற்று வாழ வழிகாட்டும் பாரதியின் அரிய கருத்துக்களை—கவிதைகளை, வசனக் கட்டுரைகளைத் தொகுத்து வழங்கியிருப்பதோடு சிந்தனையைத் தூண்டும் கருத்தாழமுள்ள ஆராய்ச்சி போன்ற முன்னுரையும் எழுதியுள்ள தூரன் அவர்களுக்கு நம் நாடு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

தமிழர் மட்டும் இக் கருத்துக்களை உணர்ந்தால் போதாது. மற்ற இந்திய மொழிகளிலும் இந்நூல் வெளிவருவது சாலச் சிறந்தது. இந்த முயற்சியும் எடுக்கப்படும் என நம்புகிறேன்.

# பொருளடக்கம்


பக்கம்

அணிந்துரை—திரு. சி. சுப்பிரமணியம், M. P. ... 3
முன்னுரை—ம. ப. பெரியசாமித்தூரன் ... 9

பாரதியார் கவிதைகள்

1. வந்தே மாதரம் ... 29
2. நாட்டு வணக்கம் ... 30
3. பாரத நாடு ... 31
4. பாரத தேசம் ... 32
5. எங்கள் நாடு ... 34
6. ஜய பாரத! ... 35
7. பாரத மாதா ... 36
8. எங்கள் தாய் ... 38
9. வெறிகொண்ட தாய் ... 40
10. பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி ... 40
11. பாரத மாதா நவரத்தின மாலை ... 42
12. பாரத தேவியின் திருத்தசாங்கம் ... 45
13. தாயின் மணிக்கொடி பாரீர்! ... 47
14. பாரத ஜனங்களின் தற்கால நிலைமை ... 49
15. போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும் ... 51
16. பாரத சமுதாயம் ... 53
17. ஜாதீய கீதம் ... 55
18. ஜாதீய கீதம் (புதிய மொழிபெயர்ப்பு) ... 56
19. யோக சக்தி ... 57
20. வங்கமே வாழிய ... 60
21. வந்தே மாதரம் ... 61
22. என்னே கொடுமை ... 62

23. எனது தாய்நாட்டின் முன்னாட்
பெருமையும் இந்நாட் சிறுமையும் ... 63
24. சத்ரபதி சிவாஜி ... 63
25. கோக்கலே சாமியார் பாடல் ... 71
26. தொண்டு செய்யும் அடிமை ... 71
27. வெள்ளைக்கார விஞ்ச் துரை கூற்று ... 73
28. தேசபக்தர் சிதம்பரம்பிள்ளை மறுமொழி ... 74
29. நடிப்புச் சுதேசிகள் ... 75
30. வாழ்க நீ எம்மான் ... 77
31. வாழிய செந்தமிழ்! ... 78
32. சுதந்திரப் பெருமை ... 78
33. சுதந்திரப் பயிர் ... 79
34. சுதந்திர தாகம் ... 81
35. சுதந்திர தேவியின் துதி ... 81
36. விடுதலை ... 83
37. சுதந்திரப் பள்ளு ... 84

பாரதியார் உரைநடை

38. புனர் ஜென்மம் ... 86
39. வேதரிஷிகளின் கவிதையின் முகவுரை ... 91
40. ஸ்வாமி அபேதாநந்தர் ... 93
41. பாரத தேசத்தில் ஒவ்வொருவனும்
செய்வதற்குரிய தியானம் ... 96
42. தைரியம் ... 99
43. கொள்கைக்கும் செய்கைக்குமுள்ள தூரம் ... 101
44. லோக குரு ... 106
45. அழுத பிள்ளை பால் குடிக்கும் ... 117
46. நமது மகமதிய சகோதரர்கள் ... 118
47. ப்ரிட்டிஷ் அநீதிகளை ப்ரயன் தகர்த்தெறிதல் ... 120
48. அப்படிப் பேசும்போது அவர் மூச்சு முட்டிப்
போய்விடவில்லையே யென்று நான்வியப்
படைகிறேன். ... 122

49. இந்தியர்களுக்கு இன்னும் ஒரு ரொட்டித்
துண்டம் ... 126
50. சுயாட்சிக்குத் தகுதியாவதெப்படி? ... 129
51. நமது ஞாபகத்திற்கு ... 131
52. சென்னை வாசிகளின் நிதானமும் விபின சந்திர
பாலரின் சந்நிதானமும் ... 135
53. பால பாரத சங்கம்-முதலாவது பிரகடனம்
பத்தாம் அவதாரம் ... 137
54. கிச்சடி ... 139
55. ஜப்பான் தொழிற்கல்வி ... 141
56. சுய ஆட்சியைப்பற்றி ஒரு யோசனை ... 142
57. தெலுங்க மஹாசபை ... 142
58. கூடித் தொழில் செய் ... 145
59. ஹிந்து மகம்மதிய ஒற்றுமை ... 147
60. ஸ்வராஜ்யம் ... 148
61. இதன் பெயரென்ன? ... 152
62. ஐர்லாந்தும் இந்தியாவும் ... 154
63. நெல்லிக்காய் கதை ... 157
64. இருள் ... 160
65. புதிய கோணங்கி ... 164
66. லார்டு கர்ஸனும் ஹிந்துக்களின் ஒழுக்கமும் ... 168
67. புதிய வருஷம் ... 170

# முன்னுரை

தமிழகத்தை அதன் உறக்க நிலையிலிருந்து விழிப்புறச் செய்தவர் பாரதியார் என்று கண்டோம். தமிழ் நாட்டிலே ஒரு புதிய வேகம்; தமிழிலே ஒரு புதிய வலிமைமிக்க மலர்ச்சி—இவற்றை உண்டாக்குவதற்குப் பாரதியார் முக்கிய காரணமாக இருந்தார் என்றும் கண்டோம். தமிழா உனக்கு நல்ல காலம் வருகிறது. உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர்கள் பிறந்திருக்கிறார்கள்; தெய்வங்கண்ட கவிகள், பல தொழில் வல்லோர், பல மணிகள் தோன்றுகிறார்கள். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதராக அவதரித்திருக்கிறார்கள் என்று முழங்கினார் அல்லவா?

இவ்வாறு முழங்கும் போதே பாரதியார் ஓர் உண்மையை மட்டும் மறக்கவே இல்லை. அவருடைய திருஷ்டி வடவேங்கடம் தென்குமரி என்ற எல்லைக்குள் ஒருநாளும் அடங்கியிருக்கவில்லை. அவருடைய பரந்த உள்ளம் பாரத சமுதாயத்தை என்றும் எண்ணிக் கொண்டே இருந்தது.

வாழிய செந்தமிழ் என்று பாடினார்; மெய்தான். வாழ்க நற்றமிழர் என்று ஆழ்ந்த அன்போடு வாழ்த்தினார்; அதுவும் மெய்தான்.

ஆனால் அடுத்த கணத்திலே என்ன கூறுகின்றார் என்பதைக் கூர்ந்து நோக்க வேண்டும்.

அடுத்த வரியிலேயே வாழிய பாரத மணித்திருநாடு என்று பாடுகின்ருர். இதை நாம் மறந்துவிடக் கூடாது.

வாழிய செந்தமிழ் என்றபோது அவர் முதல்முதலிலே மழலை பேசிய தாய்மொழியை நினைக்கிருர்; வாழ்க நற்றமிழர் என்றபோது அவர் இளமைப் பருவத்தே தவழ்ந்து விளையாடி ஆடியோடித் திரிந்த தம் தோழர் களாகிய தமிழர்களை நினைக்கிருர்.

தாய்மொழியையும், தாம் புழுதியளைந்த தமிழ்த்திரு நாட்டையும் நினைப்பது இயற்கைதானே? ஆனல் அதே சமயத்தில் அவர் பாரத சமுதாயத்தை எண்ணுகிருர். பாரத சமுதாயத்தில் தமிழ்நாடு பிரிக்க முடியாத ஒரு பகுதி என்பதை அவர் போதிக்கிருர். தமிழ் ஜாதியின் மேலுள்ள அளவற்ற அன்பினல் அதை ஆர்ய ஜாதி என்ற குடும்பத்திலே தலைக்குழந்தை என்று நெல்லையப் பருக்கு எழுதிய கடிதத்திலே கூறிக்கொள்கிருர். ஆர்ய ஜாதியை அவர் மறந்து தமிழ் ஜாதியை அவர் நினைக்கவே இல்லை. இதைத்தான் நாம் நன்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆர்ய ஜாதி என்று சொல்லும்போது பாரதியார் என்ன பொருளை உள்ளத்தில் கொண்டிருக்கிருர் என்பதைத் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும். 'ஆர்ய' என்ற சொல் சிலருக்குக் குழப்பத்தைத் தருகின்றது.

பாரதியாருக்கு அந்தக் குழப்பம் என்றும் இருந்த தில்லை. ஆர்ய ஸம்பத்து என்று சொல்லும்போது, அது இந்துஸ்தானத்தின் நாகரீகம் என்று தெளிவாக அவர் சொல்லுகிருர்.

புனர்ஜன்மம் என்ற கட்டுரையிலே அவர் எழுதி யுள்ளதைப் படித்தீர்களா?

"நமது வேதம், நமது சாஸ்திரம், நமது ஜனக்கட்டு, நமது பாஷைகள், நமது கவிதை, நமது சிற்பம், நமது ஸங்கீதம், நமது நாட்டியம், நமது தொழில்முறைகள், நமது கோபுரங்கள், நமது மண்டபங்கள், நமது குடிசைகள்—இவையனைத்துக்கும் பொதுப்பெயர் ஆர்ய ஸம்பத்து. காளிதாஸன் செய்த சாகுந்தல நாடகம், ஹிந்தி பாஷையிலே துளஸீதாஸர் செய்திருக்கும் ராமாயணம், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், ஆண்டாள் திருமொழி—இவையனைத்துக்கும் பொதுப் பெயராவது ஆர்ய ஸம்பத்து. தஞ்சாவூர்க் கோயில், திருமலை நாய்க்கர் மஹால், தியாகையர் கீர்த்தனங்கள், எல்லோராவிலுள்ள குகைக்கோயில், ஆக்ராவிலுள்ள தாஜ்மஹால், சரப சாஸ்திரியின் புல்லாங்குழல்—இவையனைத்துக்கும் பொதுப் பெயர் ஆர்ய ஸம்பத்து. எனவே, ஆர்ய ஸம்பத்தாவது ஹிந்துஸ்தானத்தின் நாகரீகம். இந்த ஸம்பத்தைப் பாது காக்கும்வரையில் இந்த ஜாதிக்கு உயிருண்டு. இந்த ஸம்பத்திலே துருப்பிடிக்க இடம் கொடுத்துவிட்டால் இந்த ஜாதியைச் செல் அரித்துவிடும்."

இவ்வாறு பாரதியார் வெட்ட வெளிச்சமாக எழுதியிருக்கிறார்.

தமது கவிதையிலே பாரதியார் 'ஆரிய' என்ற சொல்லைப் பல இடங்களிலே கையாண்டிருக்கிறார். எடுத்துக் காட்டாகச் சிலவற்றைப் பார்ப்போம்.

"ஆரிய பூமியில் நாரிய ரும்நர
சூரிய ரும்சொலும் வீரிய வாசகம்—வந்தேமாதரம்"

—ஜய வந்தே மாதரம்

"முன்னை இலங்கை அரக்கர் அழிய
முடித்தவில் யாருடைவில்?—எங்கள்

அன்னை பயங்கரி பாரத தேவிநல்
ஆரிய ராணியின் வில்"

—பாரதமாதா

"அணிஅணி யாயவர் நிற்கும்—இந்த
ஆரியக் காட்சியோர் ஆனந்தம் அன்றோ?"
—தாயின் மணிக்கொடி பாரீர்

"ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக"

—வாழிய செந்தமிழ்

"ஆரிய நீயும்நின் அறம்மறந் தாயோ?"

—சுதந்திர தாகம்

"ஐவரன் னோர்தமை அருளினன் ஆரியன்"
—குரு கோவிந்தர்

இங்கெல்லாம் 'ஆரிய' என்ற சொல்லை உன்னதமான அல்லது ஒப்பற்ற என்ற பொருளிலேயே பாரதியார் பயன் படுத்தியிருக்கிறார்.

குயிற்பாட்டினிலே இந்தச் சொல்லின் ஆட்சி பெரிதும் கவனத்திற்குரியது.

குரங்கினைப் பார்த்துக் குயில் பேசுகிறது :

"தேவரீர் காதல்பெறும் சீர்த்திகொண்டேன்; தம்மிடத்தே
ஆவலினால் பாடுகின்றேன், ஆரியரே கேட்டருள்வீர்"

இப்படிப் பேசிய குயில் அடுத்த நாள் மாட்டினைப் பார்த்துச் சொல்லுகின்றது—

"காளையர் தம்முள்ளே கனமிகுந்தீர், ஆரியரே
நீள முகமும், நிமிர்ந்திருக்கும் கொம்புகளும்

காதல் மொழி இவ்வாறு பேசிவிட்டு நான்காம் நாளில் கவிஞனின் சினமொழி கேட்ட குயில் கூறுகின்ற சொற்கள் மேலும் சிந்தனைக்குரியனவாய் அமைகின்றன.

குயிலின் பேச்சில் வரும் ஒரு பகுதியைப் பார்ப்போம்.

"தேவர் சினந்துவிட்டால் சிற்றுயிர்கள் என்னாகும்?
ஆவற் பொருளே! அரசே!என் ஆரியரே!"

ஆகவே ஒப்பற்றவர் என்ற பொருளே எங்கும் தொனிக்கின்றது.

பாரதியார் கொண்டுள்ள பொதுநோக்காலும் இவருடைய கருத்தை அறிந்துகொள்ளலாம்.

நிற்க, 'பாப்பாப்பாட்டு' ஒரு சிறந்த வைரமணி போன்றது என்று முன்பே குறிப்பிட்டிருக்கிறேன்.

பாரதியும் தமிழகமும் என்ற தொகுப்பிலே தமிழகத்தைப் பற்றிய வரிகளை மட்டும் இப்பாடலிலிருந்து எடுத்துக் காட்டினேன். ஆனால் எவ்வாறு தமிழகத்தையும் பாரத தேசத்தின் மற்றப் பகுதிகளையும் ஒருங்கிணைத்துப் பாடுகின்றார் என்பதற்குப் பாப்பாப்பாட்டு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும் என்பதைப் பார்ப்போம்.

"தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா''

என்று சொல்லி வாய் மூடுமுன்,

"அமிழ்தில் இனியதடி பாப்பா—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா''

என்று முடிக்கிறார்.

"சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா''

என்று சொல்லிய அதே மூச்சில்,

"செல்வம் நிறைந்தஹிந்து ஸ்தானம்—அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா"

என்று கூறி நிறுத்துகிறார்.

மேலும்,

"வடக்கில் இமயமலை பாப்பா—தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா
கிடக்கும் பெரியகடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா

வேத முடையதிந்த நாடு—நல்ல
வீரர் பிறந்ததிந்த நாடு
சேதமில் லாதஹிந்து ஸ்தானம்—இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா''

என்று பாப்பாவுக்கு உபதேசிப்பதுபோல நமக்கும் தெளிவாக உணர்த்திவிடுகிறார்.

அவருடைய பரந்த உள்ளம் பாரத தேசத்தை ஒரே நோக்கிலே இமயம் முதல் குமரிமுனைவரை பார்க்கிறது. பார்க்கும்போது பாரததேசம் அன்னையாகக் காட்சி அளிக்கிறது. எங்கள் தாய் என்று பரவசமெய்திப் பாடுகிறார் பாரதியார் :

"தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடும்
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத
இயல்பின ளாம்எங்கள் தாய்''

என்று ஆனந்த மேலீட்டால் பாடிக் களிக்கிறார்.

இங்கே உள்ள முப்பதுகோடி மக்கள், அவர்கள் பேசும் பலவேறு மொழிகள் எல்லாம் ஐக்கியப்பட்டு ஓர் உயிர், ஓர் உள்ளம் என்றாகிவிடுகின்றன.

"முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள் எனில்
சிந்தனை ஒன்றுடையாள்"

என்று கவிஞர் பாடும்போது நாமும் அந்த உண்மையைப் பளிச்சென்று உணர்ந்து மெய் சிலிர்க்கின்றோம்.

பாரதியாரின் கவிதை வாக்கு அந்த ரசவாதத்தைச் செய்துவிடுகிறது.

"முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பி லாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை"

என்ற உணர்வு நம்முள்ளே கொந்தளித்து எழுந்து, பாரத சமுதாயம் வாழ்கவே என்று கவிஞரோடு சேர்ந்து முழங்கும்படி செய்து விடுகிறது.

"எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்"

என்று மார் தட்டுகிறோம்.

பாரத தேசம் என்னும் மற்றொரு அற்புதமான கவிதையிலே நமது நாட்டை எப்படிப் பாரதியார் ஒருங்கிணைத்துக் காண்கிறார் என்பது மிக நன்றாக வெளிப்படுகின்றது.

"வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்; அடி
மேலைக் கடல்முழுதும் கப்பல் விடுவோம்"

என்று ஆனந்தத் தாண்டவம் ஆடுகின்றார்.

"கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்
சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்"

இவ்வாறு ஏகமாக, எவ்விதப் பிரிவும் இன்றி இருக்கும் பாரத தேசத்தை நமக்குக் காட்டுகிறார்.

"சாதி இரண்டொழிய வேறில்லை என்றே
தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்தமென்போம்
நீதி நெறியினின்று பிறர்க் குதவும்
நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர்"

குறுகிய பார்வை, குறுகிய எண்ணம், குறுகிய சாதிப் பிரிவுகள், குறுகிய மனப்பான்மை எல்லாவற்றையும் இந்தக் கவிதை தகர்த்துத் தூளாக்கிவிடுகின்றது.

அதே வேளையில்,

"ஆயுதம் செய்வோம்நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம்கல்விச் சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம்தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம்பல வண்மைகள்
செய்வோம்"

என்று மறுமலர்ச்சி இந்தியாவை உருவாக்கும் வேகத்தையும் பாரதியார் குறிப்பிட்டுவிடுகிறார்.

ஒளிமிக்க பாரததேசத்தைப் பாரதியார் தமது கவிதைக் கண்ணால் கண்டதோடு மட்டும் நின்றுவிடவில்லை. அந்தப் பாரதத்தை நமக்குக் காட்டி, மகத்தான சாதனை செய்துவிடுகிறார்.

ஆனால் பாரதியார் தம் காலத்தில் கண்ட இழிநிலைகளையும் எடுத்துக் காட்டி வன்மையாக அவற்றைச் சாடாமல் விட்டுவிடவில்லை. பாரத தேசத்தின் பழங்கால,

வருங்காலப் பெருமைகளைக் காட்டும்போதே அன்றிருந்த குறைபாடுகளையும் இடித்துக் காண்பிக்காமல் இருந்த தில்லை.

பாரத தேசத்தின் பெருமைகளைக் கூறித் தலை நிமிரச் செய்வார். அதே வேளையில் நமக்குள் மலிந்து கிடக்கும் குறைகளின்மீது இடியேறு போலப் பாய்வார். எள்ளி நகையாடியும், இகழ்ந்து கூறியும் மக்களைத் திருத்த முயல்வார்.

"நெஞ்சு பொறுக்கு திலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
அஞ்சி அஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே"

என்று கோழைகளாக அடிமை இருளிலே வகையறியாது கிடந்த இந்திய மக்களைப் பார்த்து இவ்வாறு பேசுகிறார். இதுமட்டுமா? இந்த மக்களின் பயங்கொள்ளித்தனத்தை மேலும் அம்பலப்படுத்துகிறார் :

"சிப்பாயைக் கண்டஞ்சுவார்—ஊர்ச்
சேவகன் வருதல்கண்டு மனம்பதைப்பார்
துப்பாக்கி கொண்டொருவன்—வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்
அப்பால் எவனோ செல்வான்—அவன்
ஆடையைக் கண்டுபயந் தெழுந்துநிற்பார்"

இவ்வாறு கோழைத்தனத்தை விடும்படி எள்ளி நகையாடி,

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்துநின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே"

என்று கர்ஜித்து அச்சத்தை ஓட்டுகிறார். அத்துடன் பாரதியார் நின்றுவிடவில்லை.

நெஞ்சில் உரம் இல்லாதவர்களை அவர் இடித்துப் பேசுகிறார். பழித்துப் பேசியும் அறிவுறுத்த அவர் முனைகின்றார்.

"நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடீ—கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடீ

அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும்
உச்சத்தில் கொண்டாரடீ—கிளியே
ஊமைச் சனங்களடீ"

அன்றிருந்த ஊமைச் சனங்களை இவ்வாறெல்லாம் தட்டி எழுப்பப் பாரதியார் முயன்றிருக்கிறார்.

இந்தியாவை ஆண்ட அந்நியரின் வாய்ப் பேச்சாகவும் இந்திய மக்களை இடித்துக் காண்பிப்பதில் அவர் தயங்கியதில்லை. ஆங்கிலேய அதிகாரி கூறியதாக வரும் பாட்டைப் பாருங்கள்.

"தொண்டு செய்யும் அடிமை—உனக்குச்
சுதந்திர நினைவோடா?
பண்டு கண்டதுண்டோ?—அதற்குப்
பாத்திர மாவாயோ?

ஜாதிச் சண்டை போச்சோ?—உங்கள்
சமயச் சண்டை போச்சோ?
நீதி சொல்ல வந்தாய்!—கண்முன்
நிற்கொணுது! போடா!

அச்சம் நீங்கினுயோ?—அடிமை
ஆண்மை தாங்கினுயோ?
பிச்சை வாங்கிப் பிழைக்கும்—ஆசை
பேணுதல் ஒழித்தாயோ?"

என்று இவ்வாறு நம்மிடையே அன்றிருந்த குறைகளை யெல்லாம் எடுத்துக் காட்டுகிறார். (அக்குறைகளில் பல இன்னும் சுதந்திர இந்தியாவில் இருப்பதையும் வருத்தத்தோடு எடுத்துக் காட்டவேண்டியிருக்கிறது.)

பாரதியார் தம்முடைய கவிதைகளையும் கட்டுரை களையும் எழுதிய காலம் 1920ஆம் ஆண்டிற்கும் முற் பட்டது என்பதை நாம் நினைவிற் கொள்ளவேண்டும். அன்று விடுதலைப் போராட்டம் அவ்வளவு தீவிரமாக இருக்கவில்லை.

திலகர் அதற்கு ஓரளவு வேகம் கொடுத்தார். வங்காளத்திலே விபின சந்திரபாலர், தமிழ்நாட்டிலே கப்பலோட்டிய தமிழன் சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா, பாரதியார் மூவரும் திலகர் வழியிலே சுதந்திரக் கிளர்ச்சிக்கு விதை விதைத்தனர். வேறு பல பகுதிகளிலும் லஜபத்ராய் போன்றவர்கள் சுதந்திரப் பயிரை வளர்ப்பதில் முனைந்திருந்தார்கள். இருந்தாலும் காந்தி அடிகள் இதில் ஈடுபடும் வரையில் அவ்வளவு வேகமாகச் சுதந்திரப் போர் நடந்ததாகக் கூறமுடியாது. திலகரும் அவரைப் பின் பற்றிய மற்ற தலைவரும் மேற்கொண்ட வழி வேறு; அண்ணல் காந்தி அடிகளின் வழி வேறு.

தாம் வகுத்துக்கொண்ட வழியைவிட அண்ணலின் வழியே உகந்தது என்பதைப் பாரதியார் தமது நுட்பமான அறிவால் உணர்ந்துகொண்டதைக் காட்டவே,

“வாழ்கநீ எம்மான் இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்

பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மாநீ வாழ்க வாழ்க"

என்று போற்றுகின்றார்.

ஆனால் காந்தி அடிகள் தலைமை ஏற்று விடுதலை இயக்கத்தை நடத்துவதற்கு முன்பாகவே இந்த நாட்டை, முக்கியமாகத் தமிழ்நாட்டைப் பாரதியார் அந்த இயக்கத்திற்குத் தயார்செய்ய முனைகின்றார். அவருடைய எழுத்துத் திறம் பலவிதமான இடைஞ்சல்களையும் மீறி அந்த நல்ல பணியைச் செய்ய முற்படுகிறது.

இதை எண்ணிப் பார்க்கும்போதுதான் பாரதியாருடைய தொண்டின் சிறப்பு நமக்கு நன்கு புலப்படும்.

விடுதலை இயக்கம் ஓங்குகின்ற காலத்தில் அதற்கு உதவுவன போல இவருடைய பாடல்கள் பொது மேடைகளிலே எங்கும் ஒலிக்கின்றன. இவருடைய பாடல்களைக் கேட்ட மக்கள்:

ஜயமுண்டு பயமில்லை என்று எழுச்சி கொண்டார்கள்.

அச்சத்தைப் போக்குவதையே, குழந்தைக்கும் "அச்சம் தவிர், ஆண்மை தவறேல்" என்று அவர் போதித்தார். பெரியவர்களுக்கும் இதையே "பயமெனும் பேய்தன்னை அடித்தோம்" என்பது போன்ற கவிதை வரிகளாலும் தைரியம், புதிய உயிர் முதலிய கட்டுரைகளாலும் எடுத்துச் சொல்லுகிறார்.

பாரத தேசத்தில் ஒவ்வொருவனும் செய்வதற்குரிய தியானம் என்ற கட்டுரையில் இவர் சொல்லுவதாவது:

"தெய்வ பக்தி உள்ளவர்களாயினும், நாஸ்திகர் களாயினும், எந்த மார்க்கஸ்தராயிருந்தாலும் அவர் களுக்குத் தியானம் அவசியம். பாரத தேசத்தில் ஒவ்வொரு வனுக்கும் தற்காலத்தில் நல்ல தியானம், உணவைக் காட்டி லும் இன்றியமையாதது. சோற்றை விட்டாலும் விடு. ஒரு தனியிடத்தே போயிருந்து உயர்ந்த சிந்தனைகள், அமைதி கொடுக்கக்கூடிய சிந்தனைகள், பலம் தரக்கூடிய சிந்தனைகள், துணிவும் உறுதியும் தரக்கூடிய சிந்தனைகள் இவற்ருல் அறிவை நிரப்பிக்கொண்டு தியானம் செய்வதை ஒரு நாளேனும் தவற விடாதே......சோர்வும் தைரியமும் விளைவிக்கத் தக்க எண்ணங்களுக்கு இடங்கொடாதே. ஊற்றிலிருந்து நீர் பெருகுவதுபோல உனக்குள்ளிருந்து தெளிந்த அறிவும், தீரத் தன்மையும் பொங்கி வரும். உனது இஷ்ட சித்திகளெல்லாம் நிறைவேறும். இது சத்தியம், அனுபவத்திலே பார்."

அச்சங் கூடாது, சோர்வு கூடாது, ஜாதிப் பிரிவினைகள் கூடாது, ஒற்றுமையே வேண்டும் என்று பலவழிகளிலும் வலியுறுத்துகிருர் பாரதியார்.

சோர்வு கூடாது என்பதை இருள் போன்ற கதை களிலும் இவர் எடுத்துக் காண்பிக்கிருர்.

கரோமி, கரோமி, கரோமி (செய், செய், செய்) என்று தாய் தனக்கு உபதேசித்த மந்திரத்தைக் கொண்டே ராஜ குமாரன் குகையினின்றும் விடுதலை பெறுகிருன். இது ஓர் அழகிய உருவகக் கதையாகும்.

முக்கியமாக, இந்துக்களும், இஸ்லாமியரும் ஒருங் கிணைந்து வாழ்வதில்தான் இந்த நாட்டின் கதிமோட்சம் இருக்கிறது என்பதைப் பாரதியார், தெளிவாக அன்றே உணர்கிருர். சமயத்தால் இவர் யாரையும் பிரித்துவைக்க நினைக்கவில்லை. இந்த இருபெரும் சமயங்களையும், மற்று

சமயங்களையும் சேர்ந்த பாரத மக்கள் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்கிறார்.

சத்ரபதி சிவாஜி தன் சைன்யத்தை நோக்கிக் கூறுவதாக எழுதியுள்ள கவிதைக்கு அவர் தமது 'இந்தியா' வார இதழில் எழுதியுள்ள குறிப்புப் பெரிதும் கவனத்திற்குரியது.

வரலாற்று நோக்கிலேயே அக்கவிதையைப் படிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறார். "இந்தச் செய்யுளிலே நமது மகமதிய சஹோதரர்களுக்கு விரோதமாகச் சில வசனங்கள் உபயோகிக்க நேர்ந்திருப்பது பற்றி விசனமடைகின்றோம். இக்காலத்து மகமதியர்கள் பாரத பூமியின் சொந்தப் புத்திரர்கள் என்பதையும், ஹிந்துக்களும் மகமதியர்களும் ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகள் போல் நடந்துகொள்ளவேண்டும் என்பதையும் பலமுறை வற்புறுத்தி யிருக்கிறோம்" என்று அதில் ஐயத்திற்கிடமில்லாமல் எழுதியுள்ளார்.

இந்தியா வார இதழ் பாரதியாரின் துணிச்சலையும், அதன்மூலம் எவ்வாறு தேசபக்தியை மக்களுக்கு ஊட்டினார் என்பதையும் நன்கு வெளிப்படுத்துகிறது.

சூரத் காங்கிரஸ் 1907, டிசம்பர் 27-ஆம் தேதி தொடங்கிற்று. மிதவாதிகளுக்கும், திலகர், வ. உ. சி. போன்ற தீவிரவாதிகளுக்கும் ஏற்பட்ட மோதலின் விளைவால் அது குழப்பத்தில் முடிந்தது.

இந்தக் காங்கிரசுக்குச் சென்று திரும்பிய பாரதியார் மேலும் தீவிரமாக இந்தியா வார இதழில் எழுதத் தொடங்கினார். "பாரதியாரின் இந்தியா பத்திரிகை, சட்ட வரம்பை மீறி நெருப்பு மழை பொழியத் தொடங்கிற்று" என்று எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு குறிப்பிடுகின்றார்.

அதில் வந்த கட்டுரைகளுக்கு எடுத்துக்காட்டாகச் சிலவற்றை இந்த நூலில் இணைத்திருக்கிறேன். 'பாரதி தரிசனம்' என்ற தலைப்பில் சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீட்டகம் அரிதில் முயன்று இதுவரை இரண்டு பாகங்களாக இந்தியா வார இதழ் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. அவர்களுடைய அன்பான அனுமதியுடன் இக் கட்டுரைகள் நன்றியறிதலோடு இந்த நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இக்கட்டுரைகள் எழுதியவர் பெயர் குறிக்கப்படாமல் வெளியாகி யிருப்பினும் பாரதியாரின் வேகத்தையும், தேசப் பற்றையும் இவை நன்கு வெளிப்படுத்துவனவாக இருக்கின்றன. பாரதியாரே எழுதியவை என்று கொள்வதிலும் தவறில்லை என்று கருதலாம்.

பாரத தேசத்தின் மீதிருந்த அளவு கடந்த பக்தியையும், வேகமாக நமது மக்கள் துணிந்து விடுதலைப் போரை நடத்தவில்லையே என்ற ஆத்திரத்தையும், இந்தியாவின் உயர்வையும், லோக குருவாக விளங்கக்கூடிய தகுதியையும் காட்டக்கூடிய கவிதைகள், கட்டுரைகள், கதைகள் ஆகியவற்றையெல்லாம் திரட்டி இந்நூலில் கொடுத்திருக்கிறேன். சேர்க்கப்பெறுமல் உள்ளவையும் உண்டு. ஆனல், மாதிரிக்கு ஒவ்வொன்ருக எடுத்துத் தரவேண்டும் என்று பெரிதும் முயன்றிருக்கிறேன். பாரத தேசத்தைப் பற்றிப் பாரதியாரின் உள்ளத்திலே ஏதாவது ஒரு முக்கியமான அம்சத்தைக் காட்டும் எந்த எழுத்தாவது விட்டுப் போயிருந்தால் அதை அடுத்த பதிப்பில் சேர்ப்பேன் என்பதையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மக்கள் கிளர்ந்து எழவில்லையே, மந்த கதியில் தூங்கி நடைபோடுகின்ருர்களே என்பதைப் பார்க்கும்போது பாரதியாருக்கு அடங்காத கோபம் பொங்கி எழுகின்றது.

இந்த உணர்ச்சியை மட்டும் எடுத்துக் காண்பித்து இம் முன்னுரையை முடித்துக் கொள்கின்றேன்.

“இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே
யந்தி ரங்கள் வகுத்திடு வீரே
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே”

என்று அடிமை வாழ்வில் சோர்ந்து கிடக்கும் மக்களைக் கூவி அழைக்கிறார்.

சுதந்திரம் வந்துவிட்டது என்று முழங்கிப் பள்ளுப் பாடுகின்றார்.

புதிய பாரதத்தில் இருக்கத் தகுதியற்றவர்களை போ போ என்று வெறுத்துரைக்கிறார். தகுதியுள்ளவர்களை வா வா வா என்று அன்புடன் வரவேற்கிறார்.

இப்படிச் சொன்னால் போதாது. பாரதியாருடைய கவிதையாகவே பார்ப்போம் :

“வலிமை யற்ற தோளினாய் போ போ போ
மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ
பொலிவிலா முகத்தினாய் போ போ போ
பொறியிழந்த விழியினாய் போ போ போ

* * *

ஜாதி நூறு சொல்லுவாய் போ போ போ
தருமமொன் றியற்றிலாய் போ போ போ
நீதி நூறு சொல்லுவாய் காசொன்று
நீட்டினால் வணங்குவாய் போ போ போ”

போ போ போ என்று சொல்லும்போது பாரதியாரின் அழல் தெறிக்கும் கண்களையும், முறுக்கு மீசையையும் கற்பனை செய்துபாருங்கள். அவருடைய இடிக் குரல் காதில் விழவில்லையா?

"தெளிவுபெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமைகண் டிரங்குவாய் வா வா வா
ஏறுபோல் நடையினாய் வா வா வா"

* * *

"கற்றலொன்று பொய்க்கிலாய் வா வா வா
கருதிய தியற்றுவாய் வா வா வா
ஒற்றுமைக்கு ளுய்யவே நாடெல்லாம்
ஒருபெருஞ் செயல்செய்வாய் வா வா வா"

புன்சிரிப்புத் தவழப் பாரதியார் அழைக்கின்றார்; மறைந்தும் மறையாமல் தமது அமர எழுத்துக்களின் மூலமாக அழைக்கின்றார்.

நாம்தாம் இன்னும் அவருடைய எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்றாமல் இருப்பதை நெஞ்சு விம்மி நாணத்தோடு சொல்லிக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஜாதி நூறு சொல்லுவாய் போ போ போ. போய் விட்டார்களா? ஜாதிகள் மறைந்தனவா?

பாரதியார் வருக வருக வருக என்று அழைக்கும் இளையபாரதமும் வந்துவிட்டதா? நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?

எண்ணிப் பாருங்கள். விடுதலை கிடைத்த பிறகும் நமது போக்கு எப்படி இருக்கிறது?

இளைஞர்களே, வருங்காலப் பாரதத்தை உருவாக்கும் பொறுப்புள்ள இளைய சமுதாயமே—நன்கு சிந்தித்துப் பாருங்கள்.

பாரதியார் தமது காலத்து மக்கள், தாம் எதிர்பார்த்தது போல முன்வரவில்லையே என்று கவலைப்பட்டதுண்டு. அந்தக் கவலையினால் தமக்கே இந்த நாட்டை ஒரு புதிய விழிப்புக் கொள்ளும்படி செய்யக்கூடிய வல்லமையை அருளுமாறு வரங் கேட்கிறார்.

"விண்ணும் மண்ணும் தனியாளும்—எங்கள்
வீரை சக்தி நினதருளே"

என்று தொடங்கும் பாடலில் தமது இஷ்ட தெய்வமாகிய பராசக்தியிடம் வரங் கேட்கிறார். அவர் வரம் கேட்கும் விதமே தனி; கெஞ்சவில்லை. "தாராய் எனில் உயிரைத் தீராய்" என்றுதான் கேட்கிறார்.

"கல்லை வயிரமணி ஆக்கல்—செம்பைக்
கட்டித் தங்கமெனச் செய்தல்—வெறும்
புல்லை நெல்லெனப் புரிதல்—பன்றிப்
போத்தைச் சிங்க ஏருக்கல்"

இவ்வாறெல்லாம் செய்து "இந்த நாட்டோர் கீர்த்தியெங்கும் ஓங்க"ச் செய்யவேண்டும் என்றுதான் காளி தேவியைப் பார்த்துக் கேட்கிறார்.

பாரதியாருடைய நண்பரும், இவருடைய கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுபவருமான குவளை கிருஷ்ணமாசாரியார் ஒரு சமயம், "ஜனங்களில் பலர் நாம் தப்பிதமான கொள்கைகளை வைத்திருப்பதாகச் சொல்லுகிறார்களே, அதற்கென்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டாராம். அதற்குப் பாரதியார் "நாம் இன்னும் நானூறு வருஷங்

களுக்குப் பின்னாலே தோன்ற வேண்டியவர்கள்; முன்னாலேயே தோன்றிவிட்டோம், அதற்கென்ன செய்வது?'' என்று பதிலளித்தாராம்.

விடுதலை பெற்ற பாரத தேசத்தில் வாழும் நாம் இவர் கூறுகிற முன்னேற்றங்கள் வர நானூறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமா? நான்கு ஆண்டுகளில் இவற்றைச் செய்துமுடிக்க முடியாதா? அடிமையாக வாழ்ந்தபோது அந்நியர் ஆதிக்கத்தின்மீது குறை சொல்லிக்கொண்டிருந்தோம். இப்பொழுது யார்மீது குறை சொல்வது?

எண்ணிப் பாருங்கள்.

வணக்கம்

ம. ப. பெரியசாமித்தூரன்

# பாரதியார் கவிதைகள்

## 1. வந்தே மாதரம்

பல்லவி-

வந்தே மாதரம் என்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம் (வந்தே)

சரணங்கள்

ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே (வந்தே)

ஈனப் பறையர்க ளேனும்—அவர்
எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவர் அன்றோ?
சீனத்த ராய்விடு வாரோ?—பிற
தேசத்தர் போற்பல தீங்கிழைப் பாரோ? (வந்தே)

ஆயிரம் உண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகல்என்ன நீதி?—ஓர்
தாயின் வயிற்றில் பிறந்தோர்—தம்முள்
சண்டைசெய் தாலும் சகோதரர் அன்றோ? (வந்தே)

ஒன்றுபட் டால்உண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம்வந் தாற்பின் நமக்கெது வேண்டும்? (வந்தே)

எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கும் அந்த நிலைபொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம் (வந்தே)

புல்லடி மைத்தொழில் பேணிப்—பண்டு
போயின நாட்களுக் கினிமனம் நாணித்
தொல்லை இகழ்ச்சிகள் தீர—இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி (வந்தே)

## 2. நாட்டு வணக்கம்

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே—இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்திஎன்
வாயுற வாழ்த்தேனோ?—இதை
'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ? (1)

இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்தருள்
ஈந்ததும் இந்நாடே—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே—அவர்
கன்னிய ராகி நிலவினி லாடிக்
களித்ததும் இந்நாடே—தங்கள்
பொன்னுடல் இன்புற நீர்விளை யாடி, இல்
போந்ததும் இந்நாடே—இதை
'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ? (2)

மங்கைய ராயவர் இல்லறம் நன்கு
வளர்த்ததும் இந்நாடே—அவர்
தங்க மதலைகள் ஈன்றமு தூட்டித்
தழுவிய திந்நாடே—மக்கள்
துங்கம் உயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்ததும் இந்நாடே—பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்ததும் இந்நாடே—இதை
'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ? (3)

## 3. பாரத நாடு

பல்லவி

பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு.

சரணங்கள்

ஞானத்தி லேபர மோனத்தி லே—உயர்
மானத்தி லேஅன்ன தானத்திலே
கானத்தி லேஅமு தாக நிறைந்த
கவிதையி லேஉயர் நாடு—இந்தப் (பாருக்)

தீரத்தி லேபடை வீரத்திலே—நெஞ்சில்
ஈரத்தி லேஉப காரத்திலே
சாரத்தி லேமிகு சாத்திரங் கண்டு
தருவதி லேஉயர் நாடு—இந்தப் (பாருக்)

நன்மையி லேஉடல் வன்மையிலே—செல்வப்
பன்மையி லேமறத் தன்மையிலே
பொன்மயி லொத்திடும் மாதர்தம் கற்பின்
புகழினி லேஉயர் நாடு—இந்தப் (பாருக்)

ஆக்கத்தி லேதொழில் ஊக்கத்திலே—புய
வீக்கத்தி லேஉயர் நோக்கத்திலே
காக்கத் திறல்கொண்ட மல்லர்தம் சேனைக்
கடலினி லேஉயர் நாடு—இந்தப் (பாருக்)

வண்மையி லேஉளத் திண்மையிலே—மனத்
தண்மையி லேமதி நுண்மையிலே
உண்மையி லேதவ றாத புலவர்
உணர்வினி லேஉயர் நாடு—இந்தப் (பாருக்)

யாகத்தி லேதவ வேகத்திலே—தனி
யோகத்தி லேபல போகத்திலே
ஆகத்தி லேதெய்வ பக்திகொண் டார்தம்
அருளினி லேஉயர் நாடு—இந்தப் (பாருக்)

ஆற்றினி லேசுனை யூற்றினிலே—தென்றல்
காற்றினி லேமலைப் பேற்றினிலே
ஏற்றினி லேபயன் ஈந்திடுங் காலி
இனத்தினி லேஉயர் நாடு—இந்தப் (பாருக்)

தோட்டத்தி லேமரக் கூட்டத்திலே—கனி
ஈட்டத்தி லேபயிர் ஊட்டத்திலே
தேட்டத்தி லேஅடங் காத நிதியின்
சிறப்பினி லேஉயர் நாடு—இந்தப் (பாருக்)

## 4. பாரத தேசம்

பல்லவி

பாரத தேசமென்று பெயர்சொல்லு வார்—மிகப்
பயங்கொள்ளு வார்துயர்ப் பகைவெல்லு வார்

சரணங்கள்

வெள்ளிப் பனிமலையின் மீதுலவு வோம்; அடி
மேலைக் கடல்முழுதும் கப்பல் விடுவோம்;
பள்ளித் தலமனைத்தும் கோயில்செய்கு வோம்; எங்கள்
பாரத தேசமென்று தோள்கொட்டுவோம் (பாரத)

சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்;
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்;
வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர்செய்குவோம் (பாரத)

வெட்டுக் கனிகள்செய்து தங்கம் முதலாம்
வேறு பலபொருளும் குடைந்தெடுப்போம்;
எட்டுத் திசைகளிலுஞ் சென்றிவை விற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டு வருவோம்
(பாரத)

முத்துக் குளிப்பதொரு தென்கடலிலே;
மொய்த்து வணிகர்பல நாட்டினர்வந்தே,
நத்தி நமக்கினிய பொருள்கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே. (பாரத)

சிந்து நதியின்மிசை நிலவினி லே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டிவிளை யாடிவரு வோம். (பாரத)

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்பண்டம்;
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள் ளுவோம்;
சிங்க மராட்டியர்தம் கவிதைகொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம். (பாரத)

காசி நகர்ப்புலவர் பேசும்உரை தான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய் வோம்;
ராசபுத் தானத்து வீரர்தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்கம் அளிப்போம். (பாரத)

பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்;
கட்டித் திரவியங்கள் கொண்டுவரு வார்
காசினி வணிகருக்கு அவைகொடுப்போம். (பாரத)

ஆயுதம் செய்வோம்நல்ல காகிதம்செய் வோம்;
ஆலைகள்வைப் போம்கல்விச் சாலைகள் வைப்போம்;
ஓயுதல்செய் யோம்தலை சாயுதல்செய் யோம்;
உண்மைகள்சொல் வோம்பல வண்மைகள்
செய்வோம். (பாரத)

குடைகள்செய் வோம்உழு படைகள்செய் வோம்;
கோணிகள்செய் வோம்இரும் பாணிகள் செய்வோம்;
நடையும் பறப்புமுணர் வண்டிகள்செய் வோம்;
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம். (பாரத)

மந்திரம்கற் போம்வினைத் தந்திரம்கற் போம்;
வானையளப் போம்கடல் மீனையளப் போம்;
சந்திரமண் டலத்தியல் கண்டுதெளி வோம்;
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம். (பாரத)

காவியம் செய்வோம் நல்ல காடுவளர்ப் போம்;
கலைவளர்ப் போம்கொல்ல ருலைவளர்ப் போம்;
ஓவியம்செய் வோம்நல்ல ஊசிகள்செய் வோம்;
உலகத் தொழிலனைத்து முவந்துசெய்வோம். (பாரத)

'சாதி இரண்டொழிய வேறில்லை' யென்றே
தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்த மென்போம்;
நீதி நெறியினின்று பிறர்க்கு தவும்
நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர். (பாரத)

## 5. எங்கள் நாடு

மன்னும் இமயமலை யெங்கள் மலையே
மாநில மீதிது போற்பிறி திலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே?
பன்னரும் உபநிடத நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூல்இது போலே?
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவம் இஃதை எமக்கிலை ஈடே. 1

மாரத வீரர் மலிந்தநன் னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்தபொன் னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையும் நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்தநன் னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரும் நாடே
பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே. 2

இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழைய ராகி இனிமண்ணில் துஞ்சோம்
தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடெனில் இனிக்கையை விரியோம்
கன்னலும் தேனும் கனியும்இன் பாலும்
கதலியும் செந்நெலும் நல்கும்எக் காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே
ஓதுவம் இஃதை எமக்கிலை ஈடே. 5

## 6. ஜய பாரத!

1. சிறந்து நின்ற சிந்தையோடு
தேயம் நூறு வென்றிவள்
மறந்த விர்ந்தந் நாடர் வந்து
வாழி சொன்ன போழ்தினும்
இறந்து மாண்பு தீர மிக்க
ஏழ்மை கொண்ட போழ்தினும்
அறந்த விர்க்கி லாது நிற்கும்
அன்னை வெற்றி கொள்கவே!

2. நூறு கோடி நூல்கள் செய்து
நூறு தேய வாணர்கள்
தேறும் உண்மை கொள்ள இங்கு
தேடி வந்த நாளினும்
மாறு கொண்டு கல்வி தேய
வண்மை தீர்ந்த நாளினும்
ஈறு நிற்கும் உண்மை யொன்று
இறைஞ்சி நிற்பள் வாழ்கவே!

3. வில்லர் வாழ்வு குன்றி ஓய
வீர வாளும் மாயவே
வெல்லு ஞானம் விஞ்சி யோர்செய்
மெய்ம்மை நூல்கள் தேயவும்

சொல்லும் இவ்வ னைத்தும் வேறு
சூழு நன்மை யுந்தர
வல்ல நூல்கெ டாது காப்பள்
வாழி அன்னை வாழியே!

4. தேவ ருண்ணும் நன்ம ருந்து
சேர்ந்த கும்பம் என்னவும்
மேவு வார்க டற்கண் உள்ள
வெள்ள நீரை ஒப்பவும்
பாவ நெஞ்சினோர் நிதம்
பறித்தல் செய்வ ராயினும்
ஓவி லாத செல்வம் இன்னும்
ஓங்கும் அன்னை வாழ்கவே!

5. இதந்த ரும்தொ ழில்கள் செய்து
இரும்பு விக்கு நல்கினள்
பதந்தரற் குரிய வாய
பன்ம தங்கள் நாட்டினள்
விதம்பெ றும்பல் நாட்டி னர்க்கு
வேறொ ருண்மை தோற்றவே
சுதந்தி ரத்தி லாசை இன்று
தோற்றி னள்மன் வாழ்கவே!

## 7. பாரத மாதா

முன்னை இலங்கை அரக்கர் அழிய
முடித்தவில் யாருடை வில்?—எங்கள்
அன்னை பயங்கரி பாரத தேவிநல்
ஆரிய ராணியின் வில். 1

இந்திர சித்தன் இரண்டு துண்டாக
எடுத்தவில் யாருடை வில்?—எங்கள்
மந்திரத் தெய்வம் பாரத ராணி
வயிரவி தன்னுடை வில். 2

'ஒன்று பரம்பொருள் நாம்அதன் மக்கள்
உலகின்பக் கேணி என்றே—மிக
நன்றுபல் வேதம் வரைந்தகை பாரத
நாயகி தன்திருக் கை. 3

சித்த மயமிவ் வுலகம் உறுதிநம்
சித்தத்தில் ஓங்கி விட்டால்—துன்பம்
அத்தனை யும்வெல்ல லாமென்று சொன்னசொல்
ஆரிய ராணியின் சொல். 4

சகுந்தலை பெற்றதோர் பிள்ளைசிங் கத்தினைத்
தட்டி விளையாடி—நன்று
உகந்ததோர் பிள்ளைமுன் பாரத ராணி
ஒளியுறப் பெற்ற பிள்ளை. 5

காண்டிவம் ஏந்தி உலகினை வென்றது
கல்லொத்த தோள்எவர் தோள்?—எம்மை
ஆண்டருள் செய்பவள் பெற்று வளர்ப்பவள்
ஆரிய தேவியின் தோள். 6

சாகும் பொழுதில் இருசெவிக் குண்டலம்
தந்த தெவர்கொடைக் கை?—சுவைப்
பாகு மொழியிற் புலவர்கள் போற்றிடும்
பாரத ராணியின் கை. 7

போர்க்களத் தேபர ஞானமெய்க் கீதை
புகன்ற தெவருடை வாய்?—பகை
தீர்க்கத் திறந்தரு பேரினள் பாரத
தேவி மலர்த்திரு வாய். 8

தந்தை இனிதுறத் தான்அர சாட்சியும்
தையலர் தம்முறவும்—இனி
இந்த உலகில் விரும்புகி லேன்என்றது
எம்அன்னை செய்தஉள் ளம். 9

அன்பு சிவம்உல கத்துயர் யாவையும்
அன்பினிற் போகும் என்றே—இங்கு
முன்பு மொழிந்துல காண்டதோர் புத்தன்
மொழிஎங்கள் அன்னை மொழி. 10

மிதிலை எரிந்திட வேதப் பொருளை
வினவும் சனகன் மதி—தன்
மதியினிற் கொண்டதை நின்று முடிப்பது
வல்லநம் அன்னை மதி. 11

தெய்விகச் சாகுந் தலமெனும் நாடகம்
செய்த தெவர்கவி தை?—அயன்
செய்வ தனைத்தின் குறிப்புணர் பாரத
தேவி அருட்கவி தை. 12

## 8. எங்கள் தாய்

(காவடிச்சிந்தில் 'ஆறுமுகவடி வேலவனே' என்ற மெட்டு)

தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத
இயல்பின ளாம்எங்கள் தாய். 1

யாரும் வகுத்தற் கரிய பிராயத்த
ளாயினு·மேயெங்கள் தாய்—இந்தப்
பாருள்எந் நாளுமோர் கன்னிகை என்னப்
பயின்றிடு வாள்எங்கள் தாய். 2

முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
மொய்ம்புற வொன்றுடை யாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடை யாள்எனிற்
சிந்தனை ஒன்றுடை யாள். 3

நாவினில் வேத முடையவள் கையில்
நலந்திகழ் வாளுடை யாள்—தனை
மேவினர்க் கின்னருள் செய்பவள் தீயரை
வீட்டிடு தோளுடை யாள். 4

அறுபது கோடி தடக்கைக ளாலும்
அறங்கள் நடத்துவள் தாய்—தனைச்
செறுவது நாடி வருபவ ரைத்துகள்
செய்து கிடத்துவள் தாய். 5

பூமி யினும்பொறை மிக்குடை யாள்பெரும்
புண்ணிய நெஞ்சினள் தாய்—எனில்
தோமிழைப் பார்முன் நின்றிடுங் காற்கொடுந்
துர்க்கை யனையவள் தாய். 6

கற்றைச் சடைமதி வைத்த துறவியைக்
கைதொழு வாள்எங்கள் தாய்—கையில்
ஒற்றைத் திகிரிகொண் டேழுல காளும்
ஒருவனை யுந்தொழு வாள். 7

யோகத்தி லேநிக ரற்றவள் உண்மையும்
ஒன்றென நன்றறி வாள்—உயர்
போகத்தி லேயும் நிறைந்தவள் எண்ணரும்
பொற்குவை தானுடை யாள். 8

நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி
நயம்புரி வாள்எங்கள் தாய்—அவர்
அல்லவ ராயின் அவரைவி ழுங்கிப்பின்
ஆனந்தக் கூத்திடு வாள். 9

வெண்மை வளரிம யாசலன் தந்த
விறன்மக ளாம்எங்கள் தாய்—அவன்
திண்மை மறையினும் தான்மறை யாள்நித்தஞ்
சீருறு வாள்எங்கள் தாய். 10

## 9. வெறிகொண்ட தாய்

1. பேயவள் காண்எங்கள் அன்னை—பெரும்
 பித்துடை யாள்எங்கள் அன்னை
காயழல் ஏந்திய பித்தன்—தனைக்
 காதலிப் பாள்எங்கள் அன்னை. (பேயவள்)

2. இன்னிசை யாம்இன்பக் கடலில்—எழுந்து
 எற்றும் அலைத்திரள் வெள்ளம்
தன்னிடம் மூழ்கித் திளைப்பாள்—அங்குத்
 தாவிக் குதிப்பாள்எம் அன்னை. (பேயவள்)

3. தீஞ்சொற் கவிதையஞ் சோலை—தனில்
 தெய்வீக நன்மணம் வீசும்
தேஞ்சொரி மாமலர் சூடி—மதுத்
 தேக்கி நடிப்பள்எம் அன்னை (பேயவள்)

4. வேதங்கள் பாடுவள் காணீர்—உண்மை
 வேல்கையிற் பற்றிக் குதிப்பாள்
ஓதருஞ் சாத்திரம் கோடி—உணர்ந்
 தோதி யுலகெங்கும் விதைப்பாள். (பேயவள்)

5. பாரதப் போரெனில் எளிதோ?—விறற்
 பார்த்தன்கை வில்லிடை ஒளிர்வாள்
மாரதர் கோடிவந் தாலும்—கணம்
 மாய்த்துக் குருதியில் திளைப்பாள். (பேயவள்)

## 10. பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி

1. பொழுது புலர்ந்தது, யாம்செய்த தவத்தால்;
 புன்மை யிருட்கணம் போயின யாவும்;
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
 எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி;

தொழுதுனை வாழ்த்தி வணங்குதற்கு இங்குஉன்
 தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்துநிற் கின்றோம்
விழிதுயில் கின்றனை இன்னும்எம் தாயே!
 வியப்பிது காண்! பள்ளி யெழுந்தரு ளாயே!

2. புள்ளினம் ஆர்த்தன; ஆர்த்தன முரசம்;
 பொங்கியது எங்குஞ் சுதந்திர நாதம்;
வெள்ளிய சங்கம் முழங்கின, கேளாய்!
 வீதியெ லாம்அணு குற்றனர் மாதர்;
தெள்ளிய அந்தணர் வேதமும், நின்றன்
 சீர்த்திரு நாமமும் ஓதிநிற் கின்றார்;
அள்ளிய தெள்ளமு தன்னைஎம் அன்னை!
 ஆருயி ரே!பள்ளி யெழுந்தரு ளாயே!

3. பருதியின் பேரொளி வானிடைக் கண்டோம்;
 பார்மிசை நின்னொளி காணுதற்கு அலந்தோம்;
கருதிநின் சேவடி, அணிவதற்கு என்றே
 கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம்;
சுருதிகள் பயந்தனை; சாத்திரம் கோடி
 சொல்லரு மாண்பினை ஈன்றனை, அம்மே!
நிருதர்கள் நடுக்குறச் சூல்கரத்து ஏற்றாய்!
 நிர்மலை யே!பள்ளி யெழுந்தரு ளாயே!

4. நின்னெழில் விழியருள் காண்பதற்கு எங்கள்
 நெஞ்சகத்து ஆவலை நீயறி யாயோ?
பொன்னனை யாய்! வெண் பனிமுடி, யிமயப்
 பொருப்பின்ன் ஈந்த பெருந்தவப் பொருளே!
என்ன தவங்கள்செய்து எத்தனை காலம்
 ஏங்குவம் நின்னருட்கு ஏழையம் யாமே?
இன்னமும் துயிலுதி யேல்இது நன்றோ?
 இன்னுயி ரே!பள்ளி யெழுந்தரு ளாயே!

5. மதலையர் எழுப்பவும் தாய்துயில் வாயோ?
 மாநிலம் பெற்றவள் இஃதுண ராயோ?
குதலை மொழிக்கிரங் காதொரு தாயோ?
 கோமக ளே!பெரும் பாரதர்க் கரசே!

விதமுறு நின்மொழி பதினெட்டும் கூறி
வேண்டிய வாறுஉனைப் பாடுதும் காணாய்;
இதமுற வந்துஎமை ஆண்டருள் செய்வாய்!
ஈன்றவ ளே!பள்ளி எழுந்தரு ளாயே!

## 11. பாரத மாதா நவரத்தின மாலை

(இப்பாடல்களில், முறையே ஒன்பது இரத்தினங்களின் பெயர்கள், இயற்கைப் பொருளிலேனும், சிலேடைப் பொருளிலேனும் வழங்கப் பட்டிருக்கின்றன.)

காப்பு

வீரர்முப் பத்திரண்டு கோடி விளைவித்த
பாரதமா தாவின் பதமலர்க்கே—சீரார்
நவரத்ன மாலையிங்கு நான்சூட்டக் காப்பாம்
சிவரத்ன மைந்தன் திறம்.

வெண்பா

1. திறமிக்க நல்வயிரச் சீர்திகழும் மேனி
அறமிக்க சிந்தை அறிவு—பிறநலங்கள்
எண்ணற் றனபெறுவார் 'இந்தியா' என்றநின்றன்
கண்ணொத்த பேருரைத்தக் கால்.

(கட்டளைக் கலித்துறை)

2. காலன் எதிர்ப்படிற் கைகூப்பிக்
கும்பிட்டுக் கம்பனமுற்
றோலமிட் டோடி,மறைந்தொழி
வான்; பகை யொன்றுளதோ?
நீலக் கடலொத்த கோலத்தி
னுள்மூன்று நேத்திரத்தாள்
காலக் கடலுக்கோர் பாலமிட்
டாள்அன்னை காற்படினே.

(எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்)

3. அன்னையே, அந்நாளில் அவனிக் கெல்லாம்
ஆணிமுத்துப் போன்றமணி மொழிக ளாலே
பன்னிநீ வேதங்கள், உபநிட தங்கள்,
பரவுபுகழ்ப் புராணங்கள், இதிகா சங்கள்;
இன்னும்பல் நூல்களிலே இசைத்த ஞானம்
என்னென்று புகழ்ந்துரைப்போம் அதனை இந்நாள்
மின்னுகின்ற பேரொளிகாண்! காலங் கொன்ற
விருந்துகாண்! கடவுளுக்கோர் வெற்றி காணே.

(ஆசிரியப்பா)

4. வெற்றி கூறுமின்! வெண்சங் கூதுமின்!
கற்றவ ராலே உலகுகாப் புற்றது;
உற்றதிங் கிந்நாள்! உலகினுக் கெல்லாம்
இற்றைநாள் வரையினும், அறமிலா மறவர்,
குற்றமே தமது மகுடமாக் கொண்டோர்,
மற்றை மனிதரை அடிமைப் படுத்தலே
முற்றிய அறிவின் முறையென்று எண்ணுவார்;
பற்றை அரசர் பழிபடு படையுடன்
சொற்றை நீதி தொகுத்துவைத் திருந்தார்
இற்றைநாள்
பாரி லுள்ள பலநாட் டினர்க்கும்
பாரத நாடு புதுநெறி பழக்கல்
உற்றதிங் கிந்நாள்; உலகெலாம் புகழ
இன்பவ ளம்செறி பண்பல பயிற்றும்
கவீந்திர னாகிய ரவீந்திர நாதன்
சொற்றது கேளீர்! 'புவிமிசை யின்று
மனிதர்க் கெல்லாம் தலைப்படு மனிதன்,
தர்மமே உருவாம், மோஹன தாஸ
கரம்சந்திர காந்தி' யென் றுரைத்தான்.
அத்தகைய காந்தியை அரசியல் நெறியிலே

தலைவனைக் கொண்டு புவிமிசைத் தருமமே
அரசிய லதனிலும், பிறஇய லனைத்திலும்,
வெற்றி தருமென வேதம் சொன்னதை
முற்றும் பேண முற்பட்டு நின்றார்,
பாரத மக்கள்; இதனால் படைஞர்தம்
செருக்கொழிந் துலகில் அறந்திறம் பாத
கற்றோர் தலைப்படக் காண்போம் விரைவிலே.
(வெற்றி கூறுமின்; வெண்சங் கூதுமின்)

(தரவு கொச்சகக் கலிப்பா)

5. ஊதுமினோ வெற்றி! ஒலிமினோ வாழ்த்தொலிகள்!
ஓதுமினோ வேதங்கள்! ஓங்குமினோ! ஓங்குமினோ!
தீதுசிறி தும்பயிலாச் செம்மணிமா நெறிகண்டோம்.
வேதனைகள் இனிவேண்டா; விடுதலையோ திண்ணமே.

(வஞ்சி விருத்தம்)

6. திண்ணங் காணீர்! பச்சை
வண்ணன் பாதத் தாணை;
எண்ணம் கெடுதல் வேண்டா!
திண்ணம், விடுதலை திண்ணம்.

(கலிப்பா)

7. "விடுத லைபெறு வீர்விரை வாநீர்
வெற்றி கொள்வீர்" என்றுரைத் தெங்கும்
கெடுத லின்றிநந் தாய்த்திரு நாட்டின்
கிளர்ச்சி தன்னை வளர்ச்சிசெய் கின்றான்;
"சுடுத லும்குளி ரும்உயிர்க் கில்லை;
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக் கில்லை;
எடுமி னோஅறப் போரினை" என்றான்
எங்கோ மேதகம் ஏந்திய காந்தி!

(அறுசீர் விருத்தம்)

8. காந்திசேர் பதும ராகக் கடிமலர் வாழ்ஸ்ரீ தேவி
போந்துநிற் கின்றாள் இன்று பாரதப் பொன்னா டெங்கும்;
மாந்தரெல் லோரும் சோர்வை அச்சத்தை மறந்து விட்டார்
காந்திசொற் கேட்டார், காண்பார் விடுதலை கணத்தி னுள்ளே.

(எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்)

9. கணமெனு மென்றன் கண்முனே வருவாய்.
பாரத தேவியே கனல் கால்
இணைவிழி வால வாய மாஞ்சிங்க
முதுகினில் ஏறிவீற் றிருந்தே;
துணைநினை வேண்டும் நாட்டினர்க் கெல்லாம்
துயர்கெட விடுதலை யருளி
மணிநகை புரிந்து திகழ்திருக் கோலம்
கண்டுநான் மகிழ்ந்திடு மாறே.

# 13. பாரத தேவியின் திருத் தசாங்கம்

நாமம்

பச்சை மணிக்கிளியே! பாவியெனக் கேயோகப்
பிச்சை யருளியதாய் பேருரையாய்!—இச்சகத்தில்
பூரணமா ஞானப் புகழ்விளக்கை நாட்டுவித்த
பாரதமா தேவியெனப் பாடு. 1

நாடு

தேனார் மொழிக்கிள்ளாய்! தேவியெனக் கானந்த
மானாள்பொன் னாட்டை அறிவிப்பாய்!—வானாடு
பேரிமய வெற்புமுதல் பெண்குமரி ஈறாகும்
ஆரியநா டென்றே அறி. 2

நகர்

இன்மழலைப் பைங்கிளியே! எங்கள் உயிரானாள்
நன்மையுற வாழும் நகரெதுகொல்—சின்மயமே
நானென் றறிந்த நனிபெரியோர்க் கின்னமுது
தானென்ற காசித் தலம். 3

ஆறு

வன்னக்கிளி! வந்தே மாதரமென் றோதுவரை
இன்னலறக் காப்பா ளியாறுரையாய்!—நன்னர்செயத்
தான்போம் வழியெலாம் தன்மமொடு பொன்விளைக்கும்
வான்போந்த கங்கையென வாழ்த்து. 4

மலை

சோலைப் பசுங்கிளி! தொன்மறைகள் நான்குடையாள்
வாலை வளரும் மலைகூறாய்!—ஞாலத்துள்
வெற்பொன்றும் ஈடிலதாய் விண்ணில் முடிதாக்கும்
பொற்பொன்று வெள்ளைப் பொருப்பு. 5

ஊர்தி

சீரும் சிறப்புமுயர் செல்வமுமோ ரெண்ணற்றாள்
ஊரும் புரவி உரைதத்தாய்!—தேரின்
பரிமிசையூர் வாளல்லள் பாரனைத்தும் அஞ்சும்
அரிமிசையே ஊர்வாள் அவள். 6

படை

கருணை யுருவானாள் காய்ந்தெழுங்காற் கிள்ளாய்!
செருநரைவீழ்த் தும்படையென் செப்பாய்!
—பொருபவர்மேல்
தண்ணளியால் வீழாது, வீழின் தகைப்பரிதாம்
திண்ணமுறு வான்குலிசம் தேறு. 7

முரசு

ஆசை மரகதமே! அன்னைதிரு முன்றிலிடை
ஓசை வளர்முரசம் ஓதுவாய்!—'பேசுகவோ
சத்தியமே, செய்க தருமமே' என்றொலிசெய்
முத்திதரும் வேத முரசு. 8

தார்

வாராய் இளஞ்சுகமே! வந்திப்பார்க் கென்றுமிடர்
தாராள் புனையுமணித் தார்கூறாய்—சேராரை
முற்றாக் குறுநகையால் முற்றுவித்துத் தாளொளிர்வாள்
பொற்றா மரைத்தார் புனைந்து. 9

கொடி

கொடிப்பவள வாய்க்கிள்ளாய்! குத்திரமும் தீங்கும்
மடிப்பவளின் வெல்கொடிதான் மற்றென்?—
அடிப்பணிவார்
நன்றாரத் தீயார் நலிவுறவே வீசுமொளி
குன்றா வயிரக் கொடி. 10

## 13. தாயின் மணிக்கொடி பாரீர்!

(தாயுமானவர் ஆனந்தக்களிப்பு மெட்டு)

பல்லவி

தாயின் மணிக்கொடி பாரீர்!—அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!

சரணங்கள்

1. ஓங்கி வளர்ந்ததோர் கம்பம்—அதன்
உச்சியின் மேல் 'வந்தே மாதரம்' என்றே
பாங்கின் எழுதித் திகழும்—செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்! (தாயின்)

2. பட்டுத் துகிலென லாமோ?—அதில்
பாய்ந்து சுழற்றும் பெரும்புயற் காற்று
மட்டு மிகுந்தடித் தாலும்—அதை
மதியாதவ் வுறுதிகொள் மாணிக்கப் படலம்
(தாயின்)

3. இந்திரன் வச்சிரம் ஓர்பால்—அதில்
எங்கள் துருக்கர் இளம்பிறை ஓர்பால் (தாய்)
மந்திரம் நடுவுறத் தோன்றும்—அதன்
மாண்பை வகுத்திட வல்லவன் யானோ? (தாயின்)

4. கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர்—எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரியர்அவ்வீரர்;—தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர் (தாயின்)

5. அணியணி யாயவர் நிற்கும்—இந்த
ஆரியக் காட்சியோர் ஆனந்தம் அன்றோ?
பணிகள் பொருந்திய மார்பும்—விறல்
பைந்திரு வோங்கும் வடிவமும் காணீர்! (தாயின்)

6. செந்தமிழ் நாட்டுப் பொருநர்—கொடுந்
தீக்கண் மறவர்கள், சேரன்றன் வீரர்,
சிந்தை துணிந்த தெலுங்கர்,—தாயின்
சேவடிக் கேபணி செய்திடு துளுவர்.

7. கன்னடர் ஒட்டிய ரோடு—போரில்
காலனும் அஞ்சக் கலக்கும் மராட்டர்,
பொன்னகர்த் தேவர்க ளொப்ப—நிற்கும்
பொற்புடை யார்இந்து ஸ்தானத்து மல்லர்.

8. பூதலம் முற்றிடும் வரையும்—அறப்
போர்விறல் யாவும் மறப்புறும் வரையும்,
மாதர்கள் கற்புள்ள வரையும்—பாரில்
மறைவரும் கீர்த்திகொள் ரஜபுத்ர வீரர்,

9. பஞ்ச நதத்துப் பிறந்தோர்—முன்னைப்
பார்த்தன் முதற்பலர் வாழ்ந்தநன் னாட்டார்,
துஞ்சும் பொழுதினும் தாயின்—பதத்
தொண்டு நினைந்திடும் வங்கத்தி னோரும்,

10. சேர்ந்ததைக் காப்பது காணீர்!—அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க!
தேர்ந்தவர் போற்றும் பரத—நிலத்
தேவி துவஜம் சிறப்புற வாழ்க! (தாயின்)

## 14. பாரத ஜனங்களின் தற்கால நிலைமை

நொண்டிச் சிந்து

1. நெஞ்சு பொறுக்கு திலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்,
அஞ்சி யஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே;
வஞ்சனைப் பேய்கள் என்பார்—இந்த
மரத்தில்என் பார்;அந்தக் குளத்தில்என்பார்;
துஞ்சுவது முகட்டில் என்பார்—மிகத்
துயர்ப்படு வார்எண்ணிப் பயப்படுவார் (நெஞ்சு)

2. மந்திர வாதி என்பார்—சொன்ன
மாத்திரத்தி லேமனக் கிலிபிடிப்பார்;
யந்திர சூனி யங்கள்—இன்னும்
எத்தனை ஆயிரம் இவர்துயர்கள்!
தந்த பொருளைக் கொண்டே—ஜனம்
தாங்குவர் உலகத்தில் அரசரெல்லாம்;
அந்த அரசியலை—இவர்
அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்சம் அயர்வார்
(நெஞ்சு)

3. சிப்பாயைக் கண்டு அஞ்சுவார்—ஊர்ச்
சேவகன் வருதல்கண்டு மனம்பதைப்பார்;
துப்பாக்கி கொண்டொருவன்—வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்,
அப்பால் எவனோ செல்லுவான்—அவன்
ஆடையைக் கண்டுபயந் தெழுந்துநிற்பார்;
எப்போதும் கைகட்டுவார்—இவர்
யாரிடத்தும் பூனைகள்போல் ஏங்கிநடப்பார் (நெஞ்சு)

4. நெஞ்சு பொறுக்கு திலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்,
கொஞ்சமோ பிரிவினைகள்?—ஒரு
கோடிஎன் றால்அது பெரிதாமோ?
ஐந்துதலைப் பாம்பென்பான்—அப்பன்
ஆறுதலை யென்றுமகன் சொல்லிவிட்டால்,
நெஞ்சு பிரிந்திடு வார்—பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார். (நெஞ்சு)

5. சாத்திரங்கள் ஒன்றும் காணார்—பொய்ச்
சாத்திரப் பேய்கள்சொல்லும் வார்த்தை நம்பியே
கோத்திரம் ஒன்று யிருந்தாலும்—ஒரு
கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்திகழ் வார்!
தோத்திரங்கள் சொல்லி அவர்தாம்—தமைச்
சூதுசெய்யும் நீசர்களைப் பணிந்திடுவார்;
ஆத்திரங் கொண்டே இவன் சைவன்—இவன்
அரிபக்தன் என்றுபெருஞ் சண்டையிடுவார்! (நெஞ்சு)

6. நெஞ்சு பொறுக்கு திலையே—இதை
நினைந்து நினைந்திடினும் வெறுக்குதிலையே;
கஞ்சி குடிப்பதற் கிலார்—அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சம் என்றே—நிதம்
பரிதவித்தே உயிர் துடிதுடித்துத்
துஞ்சி மடிகின் றாரே—இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே. (நெஞ்சு)

7. எண்ணிலா நோயுடையார்—இவர்
எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்
கண்ணிலாக் குழந்தை கள்போல்—பிறர்
காட்டிய வழியிற்சென்று மாட்டிக் கொள்வார்;
நண்ணிய பெருங்கலைகள்—பத்து
நாலா யிரங்கோடி நயந்துநின்று,
புண்ணிய நாட்டினிலே—இவர்
பொறியற்ற விலங்குகள் போல் வாழ்வார். (நெஞ்சு)

## 15. போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும்

[போகின்ற பாரதத்தைச் சபித்தல்]

1. வலிமை யற்ற தோளினாய் போ போ போ
மார்பி லேஒ டுங்கினாய் போ போ போ
பொலிவி லாமு கத்தினாய் போ போ போ
பொறியி ழந்த விழியினாய் போ போ போ
ஒலியி ழந்த குரலினாய் போ போ போ
ஒளியி ழந்த மேனியாய் போ போ போ
கிலிபி டித்த நெஞ்சினாய் போ போ போ
கீழ்மை யென்றும் வேண்டுவாய் போ போ போ

2. இன்று பார தத்திடை நாய்போலே
ஏற்ற மின்றி வாழுவாய் போ போ போ
நன்று கூறில் அஞ்சுவாய் போ போ போ
நாணி லாது கெஞ்சுவாய் போ போ போ
சென்று போன பொய்யெலாம் மெய்யாகச்
சிந்தை கொண்டு போற்றுவாய் போ போ போ
வென்று நிற்கும் மெய்யெலாம் பொய்யாக
விழிம யங்கி நோக்குவாய் போ போ போ

3. வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ
நூறு நூல்கள் போற்றுவாய், மெய்கூறும்
நூலி லொத்தி யல்கிலாய் போ போ போ

மாறு பட்ட வாதமே ஐந்நூறு
வாயில் நீள ஓதுவாய் போ போ போ
சேறு பட்ட நாற்றமும் தூறுஞ்சேர்
சிறிய வீடு கட்டுவாய் போ போ போ

4. ஜாதி நூறு சொல்லுவாய் போ போ போ
தரும மொன்றி யற்றிலாய் போ போ போ
நீதி நூறு சொல்லுவாய் காசொன்று
நீட்டினுல் வணங்குவாய் போ போ போ
தீது செய்வ தஞ்சிலாய் நின்முன்னே
தீமை நிற்கி லோடுவாய் போ போ போ
சோதி மிக்க மணியிலே காலத்தால்
சூழ்ந்த மாசு போன்றனே போ போ போ

[வருகின்ற பாரதத்தை வாழ்த்தல்]

5. ஒளிப டைத்த கண்ணினுய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினுய் வா வா வா
களிப டைத்த மொழியினுய் வா வா வா
கடுமை கொண்ட தோளினுய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினுய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா
ஏறுபோல் நடையினுய் வா வா வா

6. மெய்ம்மை கொண்ட நூலையே அன்போடு
வேத மென்று போற்றுவாய் வா வா வா
பொய்ம்மை கூற லஞ்சுவாய் வா வா வா
பொய்ம்மை நூல்க ளெற்றுவாய் வா வா வா
நொய்ம்மை யற்ற சிந்தையாய் வா வா வா
நோய்க ளற்ற உடலினுய் வா வா வா
தெய்வ சாபம் நீங்கவே நாங்கள் சீர்த்
தேசமீது தோன்றுவாய் வா வா வா

7. இளைய பார தத்தினாய் வா வா வா
எதிரிலா வலத்தினாய் வா வா வா
ஒளியி ழந்த நாட்டிலே நின்றேறும்
உதய ஞாயி றொப்பவே வா வா வா
களையி ழந்த நாட்டிலே முன்போலே
கலைசி றக்க வந்தனை வா வா வா
விளையு மாண்பு யாவையும் பார்த்தன்போல்
விழியினால் விளக்குவாய் வா வா வா

8. வெற்றி கொண்ட கையினாய் வா வா வா
விநயம் நின்ற நாவினாய் வா வா வா
முற்றி நின்ற வடிவினாய் வா வா வா
முழுமை சேர்மு கத்தினாய் வா வா வா
கற்ற லொன்று பொய்க்கிலாய் வா வா வா
கருதிய தியற்றுவாய் வா வா வா
ஒற்று மைக்கு ளுய்யவே நாடெல்லாம்
ஒருபெ ருஞ்செயல் செய்வாய் வா வா வா

## 16. பாரத சமுதாயம்

### பல்லவி

பாரத சமுதாயம் வாழ்கவே!—வாழ்க வாழ்க!
பாரத சமுதாயம் வாழ்கவே!—ஜய ஜய ஜய! (பாரத)

### அனுபல்லவி

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பி லாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை—வாழ்க! (பாரத)

## சரணங்கள்

1. மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ?—புலனில்
வாழ்க்கை இனியுண்டோ?—நம்மி லந்த
வாழ்க்கை இனியுண்டோ?
இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெருநாடு;
கனியும் கிழங்கும் தானி யங்களும்
கணக்கின் றித்தரு நாடு—இது
கணக்கின் றித்தரு நாடு—நித்தநித்தம்
கணக்கின் றித்தரு நாடு—வாழ்க! (பாரத)

2. இனியொரு விதிசெய் வோம்—அதை
எந்த நாளும் காப்போம்;
தனியொருவனுக் குணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடு வோம்—வாழ்க! (பாரத)

3. "எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன்"
என்றுரைத்தான் கண்ணபெருமான்;
எல்லாரும் அமரநிலை எய்தும்நன் முறையை
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம் ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்—வாழ்க! (பாரத)

4. எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—வாழ்க! (பாரத)

# 17. ஜாதீய கீதம்

(பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயர் எழுதிய
"வந்தே மாதரம்" கீதத்தின் மொழிபெயர்ப்பு)

1. இனியநீர்ப் பெருக்கினை! இன்கனி வளத்தினை!
தனிநறு மலயத் தண்காற் சிறப்பினை!
பைந்நிறப் பழனம் பரவிய வடிவினை! (வந்தே)

2. வெண்ணிலாக் கதிர்மகிழ் விரித்திடும் இரவினை!
மலர்மணிப் பூத்திகழ் மரன்பல செறிந்தனை!
குறுநகை யின்சொலார் குலவிய மாண்பினை!
நல்குவை இன்பம், வரம்பல நல்குவை! (வந்தே)

3. *முப்பது கோடிவாய் (நின்னிசை) முழங்கவும்
அறுபது கோடிதோ ளுயர்ந்துனக் காற்றவும்
திறனிலாள் என்றுனை யாவனே செப்புவன்?
அருந்திற லுடையாய்! அருளினைப் போற்றி!
பொருந்தலர் படைபுறத் தொழித்திடும் பொற்பினை!
(வந்தே)

4. நீயே வித்தை, நீயே தருமம்!
நீயே இதயம், நீயே மருமம்!
உடலகத் திருக்கும் உயிருமன் நீயே! (வந்தே)

5. தடந்தோ ளகலாச் சக்திநீ அம்மே!
சித்தம்நீங் காதுறு பக்தியும் நீயே!
ஆலயந் தோறும் அணிபெற விளங்கும்
தெய்விக வடிவமும் தேவியிங் குனதே! (வந்தே)

6. ஒருபது படைகொளும் உமையவள் நீயே!
கமலமெல் லிதழ்களிற் களித்திடுங் கமலைநீ!
வித்தைநன் கருளும் வெண்மலர்த் தேவிநீ! (வந்தே)

---

* மூலப் பாடலில் ஏழு கோடி என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அது வங்காளத்தை மட்டுமே குறித்தது,

7. போற்றிவான் செல்வீ! புரையிலை, நிகரிலை!
இனியநீர்ப் பெருக்கினை, இன்கனி வளத்தினை!
சாமள நிறத்தினை, சரளமாந் தகையினை!
இனியபுன் முறுவலாய்! இலங்குநல் லணியினை!
தரித்தெமைக் காப்பாய், தாயே! போற்றி! (வந்தே)

## 18. ஜாதீய கீதம்

(புதிய மொழி பெயர்ப்பு)

1. நளிர்மணி நீரும், நயம்படு கனிகளும்
குளிர்பூந் தென்றலும் கொழும்பொழிற் பசுமையும்
வாய்ந்துநன் கிலகுவை வாழிய அன்னை! (வந்தே)

2. தெண்ணில வதனிற் சிலிர்த்திடும் இரவும்
தண்ணியல் விரிமலர் தாங்கிய தருக்களும்
புன்னகை ஒளியும் தேமொழிப் பொலிவும்
வாய்ந்தனை, இன்பமும் வரங்களும் நல்குவை. (வந்தே)

3. கோடி, கோடி, குரல்கள் ஒலிக்கவும்
கோடி, கோடி புயத்துணை கொற்றமார்
நீடு பல்படை தாங்கிமுன் னிற்கவும்
'கூடு திண்மை குறைந்தனை' என்பதென்?
ஆற்றலின் மிகுந்தனை, அரும்பதங் கூட்டுவை,
மாற்றலர் கொணர்ந்த வன்படை யோட்டுவை (வந்தே)

4. அறிவுநீ தருமம்நீ உள்ளம்நீ, அதனிடை
மருமம்நீ; உடற்கண் வாழ்ந்திடும் உயிர்நீ;
தோளிடை வன்புநீ, நெஞ்சகத்து அன்புநீ,
ஆலயந் தோறும் அணிபெற விளங்கும்
தெய்வச் சிலையெலாம் தேவிஇங் குனதே. (வந்தே)

5. பத்துப் படைகொளும் பார்வதி தேவியும்
கமலத் திதழ்களிற் களித்திடும் கமலையும்
அறிவினை யருளும் வாணியும் அன்னைநீ! (வந்தே)

6. திருநி றைந்தனை, தன்னிக ரொன்றிலை!
தீது தீர்ந்தனை, நீர்வளஞ் சார்ந்தனை!
மருவு செய்களின் நற்பயன் மல்குவை,
வளனின் வந்ததோர் பைந்நிறம் வாய்ந்தனை;
பெருகு மின்ப முடையை குறுநகை
பெற்றொ ளிர்ந்தனை, பல்பணி பூண்டனை;
இருநி லத்துவந் தெம்முயிர் தாங்குவை,
எங்கள் தாய்நின் பதங்கள் இறைஞ்சுவாம்! (வந்தே)

## 19. யோக சித்தி

### வரங் கேட்டல்

விண்ணும் மண்ணும் தனியாளும்—எங்கள்
வீரை சக்தி நினதருளே—என்றன்
கண்ணும் கருத்தும் எனக்கொண்டு—அன்பு
கசிந்து கசிந்து கசிந்துருகி—நான்
பண்ணும் பூசனை கள்எல்லாம்—வெறும்
பாலை வனத்தில்இட்ட நீரோ?—உனக்
கெண்ணுஞ் சிந்தை யொன்றிலையோ?—அறி
வில்லா தகிலம் அளிப்பாயோ? 1

நீயே சரணமென்று கூவி—என்றன்
நெஞ்சிற் பேருறுதி கொண்டு—அடி
தாயே! எனக்குமிக நிதியும்—அறந்
தன்னைக் காக்குமொரு திறனும்—தரு
வாயே என்றுபணிந் தேத்திப்—பல
வாறு நினதுபுகழ் பாடி—வாய்
ஓயே னுவதுண ராயோ?—நின
துண்மை தவறுவதோர் அழகோ? 2

காளீ வலியசா முண்டி—ஓங்
காரத் தலைவியென் னிராணி—பல
நாளிங் கெனையலைக்க லாமோ?—உள்ளம்
நாடும் பொருளடைதற் கன்றோ?—மலர்த்

தாளில் விழுந்தபயங் கேட்டேன்—அது
　　தாரா யெனிலுயிரைத் தீராய்—துன்பம்
நீளில் உயிர்தரிக்க மாட்டேன்—கரு
　　நீலியென் னியல்பறி யாயோ? 3

தேடிச் சோறுநிதந் தின்று—பல
　　சின்னஞ் சிறுகதைகள் பேசி—மனம்
வாடித் துன்பமிக உழன்று—பிறர்
　　வாடப் பலசெயல்கள் செய்து—நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி—கொடுங்
　　கூற்றுக் கிரையெனப்பின் மாயும்—பல
வேடிக்கை மனிதரைப் போலே—நான்
　　வீழ்வே னென்றுநினைத் தாயோ? 4

நின்னைச் சிலவரங்கள் கேட்பேன்—அவை
　　நேரே இன்றெனக்குத் தருவாய்—என்றன்
முன்னைத் தீயவினைப் பயன்கள்—இன்னும்
　　மூளா தழிந்திடுதல் வேண்டும்—இனி
என்னைப் புதியவுயி ராக்கி—எனக்
　　கேதுங் கவலையறச் செய்து—மதி
தன்னை மிகத்தெளிவு செய்து—என்றும்
　　சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய். 5

தோளை வலியுடைய தாக்கி—உடற்
　　சோர்வும் பிணிபலவும் போக்கி—அரி
வாளைக் கொண்டுபிளந் தாலும்—கட்டு
　　மாறு வுடலுறுதி தந்து—சுடர்
நாளைக் கண்டதோர் மலர்போல்—ஒளி
　　நண்ணித் திகழுமுகந் தந்து—மத
வேளை வெல்லுமுறை கூறித்—தவ
　　மேன்மை கொடுத்தருளல் வேண்டும். 6

எண்ணுங் காரியங்க ளெல்லாம்—வெற்றி
　　யேறப் புரிந்தருளல் வேண்டும்—தொழில்
பண்ணப் பெருநிதியம் வேண்டும்—அதிற்
　　பல்லோர் துணைபுரிதல் வேண்டும்—சுவை

நண்ணும் பாட்டினொடு தாளம்—மிக
நன்று வுளத்தழுந்தல் வேண்டும்—பல
பண்ணிற் கோடிவகை இன்பம்—நான்
பாடத் திறனடைதல் வேண்டும். 7

கல்லை வயிரமணி யாக்கல்—செம்பைக்
கட்டித் தங்கமெனச் செய்தல்—வெறும்
புல்லை நெல்லெனப் புரிதல்—பன்றிப்
போத்தைச் சிங்கவே றாக்கல்—மண்ணை
வெல்லத் தினிப்புவரச் செய்தல்—என
விந்தை தோன்றிடஇந் நாட்டை—நான்
தொல்லை தீர்த்துயர்வு கல்வி—வெற்றி
சூழும் வீரவறி வாண்மை 8

கூடுந் திரவியத்தின் குவைகள்—திறல்
கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள்—இவை
நாடும் படிக்குவினை செய்து—இந்த
நாட்டோர் கீர்த்தியெங்கு மோங்கக்—கலி
சாடுந் திறனெனக்குத் தருவாய்—அடி,
தாயே! உனக்கரிய துண்டோ?—மதி
மூடும் பொய்ம்மையிரு ளெல்லாம்—எனை
முற்றும் விட்டகல வேண்டும். 9

ஐயம் தீர்ந்துவிடல் வேண்டும்—புலை
அச்சம் போயொழிதல் வேண்டும்—பல
பையச் சொல்லுவதிங் கென்னே!—முன்னைப்
பார்த்தன் கண்ணனிவர் நேரா—எனை
உய்யக் கொண்டருள வேண்டும்—அடி
உன்னைக் கோடிமுறை தொழுதேன்—இனி
வையத் தலைமையெனக் கருள்வாய்—அன்னை
வாழி! நின்னதருள் வாழி! 10

ஓம் காளி! வலிய சாமுண்டீ!
ஓங்காரத் தலைவி! என் இராணி!

## 20. வங்கமே வாழிய

அங்கமே தளர்வெய்திய காலையும்
அங்கோர் புன்னரி தந்திடு மூனுணுச்
சிங்கமே யெனவாழ்தல் சிறப்பெனுச்
செம்மை கூறிநந் தாய்ப்பெருந் தேயத்தைப்
பங்கமே பெறு மிந்நிலை நின்றுயர்
பண்டை மாண்பிடைக் கொண்டினி துய்த்திடும்
வங்கமே யென வந்தனை வாழிநீ
வங்கமே நனி வாழிய வாழிய! 1

கற்பகத் தருப்போலெது கேட்பினும்
கடிது நல்கிடும் பாரத நாட்டினிற்
பொற்புறப் பிறந்தோம், நமக்கோர் விதப்
பொருளு மன்னிய ரீதல் பொறுக்கிலேம்
அற்பர் போலப் பிறர்கர நோக்கியாம்
அவனி வாழ்தலா காதென நன்கிதை
வற்புறுத்திடத் தோன்றிய தெய்வமே
வங்கமே நனி வாழிய வாழிய! 2

கண்ணினீர் துடைப்பாய் புன்னகை கொள்வாய்
கவினுறும்பர தப்பெருந் தேவியே
உண்ணி கழ்ந்திடுந் துன்பம் களைதியால்
உன்றன் மைந்தர்கள் மேனெறி யுற்றனர்.
பெண்ணி னெஞ்சிற் கிதமென லாவது
பெற்ற பிள்ளைகள் பீடுறவே யன்றோ?
மண்ணிநீ புகழ் மேவிட வாழ்த்திய
வங்கமே நனி வாழிய வாழிய! 3

15-9-1905

## 21. வந்தே மாதரம்

ஆரிய மென்ற பெரும்பெயர் கொண்டவெ
    மன்னையின் மீதுதிகழ்
அன்பெனு மென்கொடி வாடிய காலை
    யதற்குயிர் தந்திடுவான்
மாரி யெனும்படி வந்து சிறந்தது
    வந்தே மாதரமே
மாணுயர் பாரத தேவியின் மந்திரம்
    வந்தே மாதரமே
வீரிய ஞான மரும்புகழ் மங்கிட
    மேவிநல் ஆரியரை
மிஞ்சி வளைந்திடு புன்மை யிருட்கணம்
    வீவுற வங்கமகா
வாரிதி மீதி லெழுந்த இளங்கதிர்
    வந்தே மாதரமே
வாழிந லாரிய தேவியின் மந்திரம்
    வந்தே மாதரமே. 1

காரடர் பொன்முடி வானி மயந்தரு
    கங்கை வரம்பினிலும்
கன்னியை வந்தொரு தென்றிசை யார்கலி
    காதல் செயாயிடையும்
வீரர்கள் மிஞ்சி விளங்கு புனைமுதல்
    வேறுள வூர்களிலும்
விஞ்சை யெனும்படி யன்புடன் யாரும்
    வியந்திடு மந்திரமும்
பாரத தேச விரோதிகள் நெஞ்சு
    பதைத்திடு மந்திரமும்
பாதக ரோதினு மேதக வுற்றிடு
    பண்புயர் மந்திரமும்

வார முறுஞ்சுவை யின்னற வுண்கனி
வான மருந்தெனவே
மாணுயர் பாரத தேவி விரும்பிடும்
வந்தே மாதரமே. 2

24-2-1906

## 22. என்னே கொடுமை

மல்லார் திண்டோட் பாஞ்சாலன்
மகள்பொற் கரத்தின் மாலுற்ற
வில்லால் விஜயன் அன்றிழைத்த
விந்தைத் தொழிலை மறந்திலரால்
பொல்லா விதியால் நீவிரவன்
போர்முன் னிழைத்த பெருந்தொழில்கள்
எல்லா மறந்தீ ரெம்மவர்காள்
என்னே கொடுமை யீங்கிதுவே. 1

வீமன் திறலு மவற்கிளைய
விஜயன் திறலும் விளங்கிநின்ற
சேம மணிப்பூந் தடநாட்டில்
சிறிய புழுக்கள் தோன்றி வெறுங்
காம நுகர்தல் இரந்துண்டல்
கடையாம் வாழ்க்கை வாழ்ந்துபினர்
ஈமம் புகுத லிவைபுரிவார்
என்னே கொடுமை யீங்கிதுவே! 2

4-4-1906

## 23. எனது தாய்நாட்டின் முன்னாட்பெருமையும் இன்னாட் சிறுமையும்

### கண்ணிகள்

*புன்னகையு மின்னிசையு மெங்கொளித்துப் போயினவோ*
*இன்னலொடு கண்ணீ ரிருப்பாகி விட்டனவே!*
*ஆணெலாம் பெண்ணாய் அரிவையரெலாம் விலங்காய்*
*மாணெலாம் பாழாகி மங்கிவிட்ட திந்நாடே!*
*ஆரியர்கள் வாழ்ந்துவரும் அற்புதநா டென்பதுபோய்ப்*
*பூரியர்கள் வாழும் புலைத்தேச மாயினதே!*
*வீமாதி வீரர் விளிந்தெங்கு போயினரோ!*
*ஏமாறி நிற்கு மிழிஞர்களிங் குள்ளாரே!*
*வேத வுபநிடத மெய்நூல்க ளெல்லாம்போய்*
*பேதைக் கதைகள் பிதற்றுவரிந் நாட்டினிலே!*
*ஆதி மறைக்கீதம் அரிவையர்கள் சொன்னதுபோய்*
*வீதி பெருக்கும் விலையடிமை யாயினரே!*
*செந்தேனும் பாலும் தெவிட்டிநின்ற நாட்டினிலே*
*வந்தே தீப்பஞ்ச மரபாகி விட்டதுவே!*
*மாமுனிவர் தோன்றி மணமுயர்ந்த நாட்டினிலே*
*காமுகரும் பொய்யடிமைக் கள்வர்களும் சூழ்ந்தனரே!*
*பொன்னு மணியுமிகப் பொங்கிநின்ற விந்நாட்டில்*
*அன்னமின்றி நாளு மழிவார்க ளெத்தனைபேர்?*

11-4-1906

## 24. சத்ரபதி சிவாஜி

(தன் சைனியத்திற்குக் கூறியது)

*ஜயஜய பவானி! ஜயஜய பாரதம்!*
*ஜயஜய மாதா! ஜயஜய துர்க்கா!*
*வந்தே மாதரம்! வந்தே மாதரம்!*
*சேனைத் தலைவர்காள்! சிறந்தமந் திரிகாள்!*
*யானைத் தலைவரும் அருந்திறல் வீரர்காள்!*

அதிரத மன்னர்காள்! துரகத் ததிபர்காள்!
எதிரிகள் துணுக்குற இடித்திடு பதாதிகாள்!
வேலெறி படைகாள்! சூலெறி மறவர்காள்!
கால னுருக்கொளும் கணைதுரந் திடுவீர்.
மற்றுமா யிரவிதம் பற்றலர் தம்மைச்

செற்றிடுந் திறனுடைத் தீரரத் தினங்காள்!
யாவிரும் வாழிய! யாவிரும் வாழிய!
தேவிநுந் தமக்கெலாம் திருவருள் புரிக!
மாற்றலர் தம்புலை நாற்றமே யறியா
ஆற்றல்கொண் டிருந்ததிவ் வரும்புகழ் நாடு!

வேதநூல் பழிக்கும் வெளித்திசை மிலேச்சர்
பாதமும் பொறுப்பளோ பாரத தேவி?
வீரரும் அவரிசை விரித்திடு புலவரும்
பாரெலாம் பெரும்புகழ் பரப்பிய நாடு!
தர்மமே உருவமாத் தழைத்தபே ரரசரும்

நிர்மல முனிவரும் நிறைந்தநன் னாடு!
வீரரைப் பெருத மேன்மைதீர் மங்கையை
ஊரவர் மலடியென் றுரைத்திடு நாடு!
பாரதப் பூமி பழம்பெரும் பூமி;
நீரதன் புதல்வர்; இந் நினைவகற் றாதீர்!

பாரத நாடு பார்க்கெலாம் திலகம்
நீரதன் புதல்வர்; இந் நினைவகற் றாதீர்!
வானக முட்டும் இமயமால் வரையும்
ஏனைய திசைகளில் இருந்திரைக் கடலும்
காத்திடு நாடு! கங்கையும் சிந்துவும்

தூத்திரை யமுனையும் சுனைகளும் புனல்களும்
இன்னரும் பொழில்களும் இணையிலா வளங்களும்
உன்னத மலைகளும் ஒளிர்தரு நாடு!
பைந்நிறப் பழனம் பசியிலா தளிக்க
மைந்நிற முகில்கள் வழங்குபொன் னாடு!

தேவர்கள் வாழ்விடம் திறலுயர் முனிவர்
ஆவலோ டடையும் அரும்புகழ் நாடு!
ஊனமொன் றறியா ஞானமெய்ப் பூமி!
வானவர் விழையும் மாட்சியார் தேயம்!
பாரத நாட்டிசை பகரயான் வல்லனோ?

நீரதன் புதல்வர் இந் நினைவகற் றாதீர்!
தாய்த்திரு நாட்டைத் தறுகண் மிலேச்சர்,
பேய்த்தகை கொண்டோர், பெருமையும் வண்மையும்,
ஞானமும் அறியா நவைபுரி பகைவர்
வானகம் அடக்க வந்திடும் அரக்கர்போல்

இந்நாள் படைகொணர்ந்து இன்னல்செய் கின்றார்!
ஆலயம் அழித்தலும் அருமறை பழித்தலும்
பாலரை விருத்தரைப் பசுக்களை ஒழித்தலும்
மாதர்கற் பழித்தலும் மறையவர் வேள்விக்கு
ஏதமே சூழ்வதும் இயற்றிநிற் கின்றார்!

சாத்திரத் தொகுதியைத் தாழ்த்துவைக் கின்றார்
கோத்திர மங்கையர் குலங்கெடுக் கின்றார்,
எண்ணில துணைவர்காள்! எமக்கிவர் செயுந்துயர்;
கண்ணியம் மறுத்தனர்; ஆண்மையுங் கடிந்தனர்;
பொருளினைச் சிதைத்தனர்; மருளினை விதைத்தனர்;

திண்மையை யழித்துப் பெண்மையிங் களித்தனர்;
பாரதப் பெரும்பெயர் பழிப்பெய ராக்கினர்;
சூரர்தம் மக்களைத் தொழும்பராய்ப் புரிந்தனர்;
வீரியம் அழிந்து மேன்மையும் ஒழிந்துநம்
ஆரியர் புலையருக் கடிமைக ளாயினர்.

மற்றிதைப் பொறுத்து வாழ்வதோ வாழ்க்கை?
வெற்றிகொள் புலையர்தாள் வீழ்ந்துகொல் வாழ்வீர்?
மொக்குள்தான் தோன்றி முடிவது போல
மக்களாய்ப் பிறந்தோர் மடிவது திண்ணம்!
தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடு மிலேச்சரை

மாய்த்திட விரும்பார் வாழ்வுமோர் வாழ்வுகொல்?
மானமென் றிலாது மாற்றலர் தொழும்பராய்
ஈனமுற் றிருக்க எவன்கொலோ விரும்புவன்?
தாய்பிறன் கைப்படச் சகிப்பவ னாகி
நாயென வாழ்வோன் நமரில்இங் குளனோ?

பிச்சைவாழ் வுகந்து பிறருடை யாட்சியில்
அச்சமுற் றிருப்போன் ஆரிய னல்லன்.
புன்புலால் யாக்கையைப் போற்றியே தாய்நாட்டு
அன்பிலா திருப்போன் ஆரிய னல்லன்.
மாட்சிதீர் மிலேச்சர் மனப்படி யாளும்

ஆட்சியி லடங்குவோன் ஆரிய னல்லன்
ஆரியத் தன்மை அற்றிடுஞ் சிறியர்
யாரிவண் உளரவர் யாண்டேனும் ஒழிக!
படைமுகத்து இறந்து பதம்பெற விரும்பாக்
கடைபடு மாக்களென் கண்முனில் லாதீர்!

சோதரர் தம்மைத் துரோகிகள் அழிப்ப
மாதரார் நலத்தின் மகிழ்பவன் மகிழ்க;
நாடெலாம் பிறர்வசம் நண்ணுதல் நினையான்
வீடுசென் றொளிக்க விரும்புவோன் விரும்புக!
தேசமே நலிவொடு தேய்ந்திட மக்களின்

பாசமே பெரிதெனப் பார்ப்பவன் செல்க!
நாட்டுளார் பசியினால் நலிந்திடத் தன்வயிறு
ஊட்டுதல் பெரிதென உன்னுவோன் செல்க!
ஆணுருக் கொண்ட பெண்களும் அலிகளும்
வீணில்இங் கிருந்தெனை வெறுத்திடல் விரும்பேன்.

ஆரியர் இருமின்! ஆண்கள்இங்கு இருமின்!
வீரியம் மிகுந்த மேன்மையோர் இருமின்!
மானமே பெரிதென மதிப்பவர் இருமின்!
ஈனமே பொருத இயல்பினர் இருமின்!
தாய்நாட் டன்புறு தனையர்இங்கு இருமின்!

மாய்நாட் பெருமையின் மாய்பவர் இருமின்!
புலையர்தம் தொழும்பைப் பொறுக்கிலார் இருமின்!
கலையறு மிலேச்சரைக் கடிபவர் இருமின்!
ஊரவர் துயரில்நெஞ் சுருகுவீர் இருமின்!
சோர நெஞ்சிலாத் தூயவர் இருமின்!

தேவிதாள் பணியுந் தீரர்இங்கு இருமின்!
பாவியர் குருதியைப் பருகுவார் இருமின்!
உடலினைப் போற்றா உத்தமர் இருமின்!
கடல்மடுப் பினும்மனம் கலங்கலர் உதவுமின்;
வம்மினோ துணைவீர்? மருட்சிகொள் ளாதீர்!

நம்மனோ ராற்றலை நாழிகைப் பொழுதெனும்
புல்லிய மாற்றலர் பொறுக்கவல் லார்கொல்?
மெல்லிய திருவடி வீறுடைத் தேவியின்
இன்னருள் நமக்கோர் இருந்துணை யாகும்.
பன்னருள் புகழுடைப் பார்த்தனும் கண்ணனும்

வீமனும் துரோணனும் வீட்டுமன் றானும்
ராமனும் வேறுள இருந்திறல் வீரரும்
நற்றுணை புரிவர்; வானக நாடுறும்;
வெற்றியே யன்றி வேறெதும் பெறுகிலேம்.
பற்றறு முனிவரும் ஆசிகள் பகர்வர்

செற்றினி மிலேச்சரைத் தீர்த்திட வம்மின்!
ஈட்டியாற் சிரங்களை வீட்டிட எழுமின்!
நீட்டிய வேல்களை நேரிருந்து எறிமின்!
வாளுடை முனையினும் வயந்திகழ் சூலினும்,
ஆளுடைக் கால்க ளடியினுந் தேர்களின்

உருளையி னிடையினும், மாற்றலர் தலைகள்
உருளையிற் கண்டுநெஞ் சுவப்புற வம்மின்!
நம்இதம் பெருவளம் நலிந்திட விரும்பும்
வன்மியை வேரறத் தொலைத்தபின் னன்றோ
ஆணெனப் பெறுவோம்; அன்றிநாம் இறப்பினும்

வானுறு தேவர் மணியுல கடைவோம்;
வாழ்வமேற் பாரத வான்புகழ்த் தேவியைத்
தாழ்வினின் றுயர்த்திய தடம்புகழ் பெறுவோம்!
போரெனில் இதுபோர்! புண்ணியத் திருப்போர்;
பாரினில் இதுபோற் பார்த்திடற் கெளிதோ?

ஆட்டினைக் கொன்று வேள்விகள் இயற்றி
வீட்டினைப் பெறுவதை விரும்புவார் சிலரே;
நெஞ்சகக் குருதியை நிலத்திடை வடித்து
வஞ்சக மழிக்கும் மாமகம் புரிவம்யாம்
வேள்வியில் இதுபோல் வேள்வியொன் றில்லை;

தவத்தினில் இதுபோல் தவம்பிறி தில்லை;
முன்னையோர் பார்த்தன் முனைத்திசை நின்று
தன்னெதிர் நின்ற தளத்தினை நோக்கிட,
மாதுலர் சோதரர் மைத்துனர் தாதையர்
காதலின் நண்பர் கலைதரு குரவரென்று

இன்னவர் இருத்தல்கண்டு இதயம்நொந் தோனாய்த்
தன்னருந் தெய்விகச் சாரதி முன்னர்
"ஐயனே! இவர்மீ தம்பையோ தொடுப்பேன்?
வையகத் தரசும் வானக ஆட்சியும்
போயினும் இவர்தமைப் போரினில் வீழ்த்தேன்.

மெய்யினில் நடுக்கம் மேவுகின் றதுவால்;
கையினில் வில்லும் கழன்றுவீழ் கின்றது;
வாயுலர் கின்றது; மனம்பதைக் கின்றது;
ஓய்வுறுங் கால்கள்; உலைந்தது சிரமும்;
வெற்றியை விரும்பேன்; மேன்மையை விரும்பேன்;

சுற்றமிங் கறுத்துச் சுகம்பெறல் விரும்பேன்;
எனையிவர் கொல்லினும் இவரையான் தீண்டேன்;
சினையறுத் திட்டபின் செய்வதோ ஆட்சி?"
எனப்பல கூறியவ் விந்திரன் புதல்வன்
கனப்படை வில்லைக் களத்தினில் எறிந்து

சோர்வொடு வீழ்ந்தனன்; சுருதியின் முடிவாய்த்
தேர்வயின் நின்றநம் தெய்விகப் பெருமான்
வில்லெறிந் திருந்த வீரனை நோக்கி,
"புல்லிய அறிவொடு புலம்புகின் றனையால்,
அறத்தினைப் பிரிந்த சுயோதனா தியரைச்

செறுத்தினி மாய்ப்பது தீமையென் கின்றாய்,
உண்மையை அறியாய்; உறவையே கருதிப்
பெண்மைகொண் டேதோ பிதற்றிநிற் கின்றாய்,
வஞ்சகர், தீயர் மனிதரை வருத்துவோர்
நெஞ்சகத் தருக்குடை நீசர்கள்; இன்னோர்

தம்மொடு பிறந்த சகோதர ராயினும்,
வெம்மையோ டொறுத்தல் வீரர்தஞ் செயலாம்.
ஆரிய நீதிநீ அறிகிலை போலும்!
பூரியர் போல்மனம் புழுங்குற லாயினை
அரும்புகழ் தேய்ப்பதும் அனாரியத் தகைத்தும்

பெரும்பதத் தடையுமாம் பெண்மையெங் கெய்தினை?
பேடிமை யகற்று! நின் பெருமையை மறந்திடேல்!
ஈடிலாப் புகழினாய்! எழுகவோ எழுக!"
என்றுமெய்ஞ் ஞானம்நம் இறைவர் கூறக்
குன்றெனும் வயிரக் கொற்றவான் புயத்தோன்

அறமே பெரிதென அறிந்திடு மனத்தனாய்
மறமே உருவுடை மாற்றலர் தம்மைச்
சுற்றமும் நோக்கான் தோழமை மதியான்
பற்றலர் தமையெலாம் பார்க்கிரை யாக்கினன்.
விசயனன் றிருந்த வியன்புகழ் நாட்டில்

இசையுநற் றவத்தால் இன்றுவாழ்ந் திருக்கும்
ஆரிய வீரர்காள்! அவருடை மாற்றலர்,
தேரில்இந் நாட்டினர், செறிவுடை உறவினர்;
நம்மையின் றெதிர்க்கும் நயனிலாப் புல்லோர்
செம்மைதீர் மிலேச்சர், தேசமும் பிறிதாம்,

*பிறப்பினில் அன்னியர், பேச்சினில் அன்னியர்.*
*சிறப்புடை யாரியச் சீர்மையை யறியார்.*

குறிப்பு :—இப்பாடல் 'இந்தியா' வார இதழில் முதன் முதலாக வெளிவந்துள்ளது. இதை எழுதிய தன் நோக்கத்தைப் பற்றியும், இதை வரலாற்றுக் கண்கொண்ட பார்க்க வேண்டுமே யல்லாது இன்று நமது இஸ்லாமிய சகோதரர்கள் இதைப் படித்து விரோத மனப்பான்மை கொள்ளக் கூடாது என்பது பற்றியும் அவ்வார இதழில் கீழ்க்கண்ட குறிப்புக் காணப்படுகிறது. அதையும் சேர்த்துப் பதிப்பித்தல் பொருத்தமாக இருக்குமென்று இங்கே தருகின்றேன்.

"மற்றொரு பக்கத்தில் சிவாஜி மகாராஜா தமது படைகளை நோக்கிக் கூறியதாகக் கற்பனை புரிந்து ஒரு செய்யுள் பிரசுரமடைந்திருக்கிறது. சரித்திர சம்பந்தமான செய்யுட்கள் புனைவதில் இக் காலத்துத் தமிழர்கள் சாதாரணமாகப் பிரவேசிப்பதில்லை. எனினும், சுதேசப்பற்று மிகுதிப்படுவதற்கு மேற்கூறிய விதமான செய்யுட்கள் மிகவும் அவசியமானவை. இந்தச் செய்யுளிலே நமது மகமதிய சஹோதரர்களுக்கு விரோதமாகச் சில வசனங்கள் உபயோகிக்க நேர்ந்திருப்பது பற்றி விசனமடைகின்றோம். இக்காலத்து மகமதியர்கள் பாரத பூமியின் சொந்தப் புத்திரர்கள் என்பதையும், ஹிந்துக்களும், மகமதியர்களும் ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகள் போல் நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் பலமுறை வற்புறுத்தியிருக்கிறோம் என்ற போதிலும், சிவாஜி மஹாராஜா காலத்தில் ஹிந்துக்களுக்கும், மகமதியர்களுக்கும் விரோதமிருந்தபடியால், அவர்களைப்பற்றி மஹாராஜா சிவாஜி சில கோபமான வார்த்தைகள் சொல்லியிருப்பது வியப்பாகமாட்டாது. மேற்படி செய்யுளிலே மகமதியர்களைப்

பற்றி வந்திருக்கும் பிரஸ்தாபங்களில் வீர ரஸத்தை மட்டும் கவனிக்க வேண்டுமே யல்லாமல், மகமதிய நண்பர்கள் தமது விஷயத்தில் உதாஸீனம் இருப்பதாக நினைக்கக்கூடாதென்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி—பாரதி தரிசனம்
முதல் பாகம்—நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-2.
தொகுப்பாசிரியர் இளசை மணியன்.

## 25. கோக்கலே சாமியார் பாடல்

(இராமலிங்க சுவாமிகள் "களக்கமறப் பொதுநடம்நான் கண்டு கொண்ட தருணம்" என்று பாடிய பாட்டைத் திரித்துப் பாடியது)

களக்கமுறும் மார்லிநடம் கண்டுகொண்ட தருணம்
கடைச்சிறியேன் உளம்பூத்துக் காய்த்ததொரு காய்தான்.
விளக்கமுறப் பழுத்திடுமோ? வெம்பிவிழுந் திடுமோ?
வெம்பாது விழினுமென்றன் கரத்திலகப் படுமோ?
வளர்த்தபழம் கர்சானென்ற குரங்குகவர்ந் திடுமோ?
மற்றிங்ஙன் ஆட்சிசெய்யும் அணில்கடித்து விடுமோ?
துளக்கமற யான்பெற்றிங் குண்ணுவனே அல்லால்
தொண்டைவிக்கு மோ, ஏதும் சொல்லரிய தாமோ?

## 26. தொண்டு செய்யும் அடிமை

(சுயராஜ்யம் வேண்டுமென்ற பாரதவாசிக்கு ஆங்கிலேய உத்தியோகஸ்தன் கூறுவது)

நந்தனார் சரித்திரத்திலுள்ள "மாடுதின்னும் புலையா! - உனக்கு மார்கழித் திருநாளா?" என்ற பாட்டின் வர்ணமெட்டு.

1. தொண்டு செய்யும் அடிமை!—உனக்குச்
சுதந்திர நினைவோடா?
பண்டு கண்ட துண்டோ?—அதற்குப்
பாத்திர மாவாயோ? (தொண்டு)

2. ஜாதிச் சண்டை போச்சோ?—உங்கள்
சமயச் சண்டை போச்சோ?
நீதி சொல்ல வந்தாய்!—கண்முன்
நிற்கொ ணுது போடா! (தொண்டு)

3. அச்சம் நீங்கி ஞயோ?—அடிமை!
ஆண்மை தாங்கி ஞயோ?
பிச்சை வாங்கிப் பிழைக்கும்—ஆசை
பேணுத லொழித்தாயோ? (தொண்டு)

4. கப்ப லேறு வாயோ?—அடிமை!
கடலைத் தாண்டு வாயோ?
குப்பை விரும்பும் நாய்க்கே—அடிமை!
கொற்றத் தவிசு முண்டோ? (தொண்டு)

5. ஒற்று மையயின் ருயோ?—அடிமை!
உடம்பில் வலிமை யுண்டோ?
வெற்று ரைபே சாதே!—அடிமை!
வீரியம் அறிவாயோ? (தொண்டு)

6. சேர்ந்து வாழு வீரோ?—உங்கள்
சிறுமைக் குணங்கள் போச்சோ?
சோர்ந்து வீழ்தல் போச்சோ—உங்கள்
சோம்பரைத் துடைத்தீரோ? (தொண்டு)

7. வெள்ளை நிறத்தைக் கண்டால்—பதறி
வெருவலை ஒழித்தாயோ?
உள்ளது சொல்வேன் கேள்—சுதந்திரம்
உனக்கில்லை மறந்திடடா! (தொண்டு)

8. நாடு காப்ப தற்கே—உனக்கு
ஞானம் சிறிது முண்டோ?
வீடு காக்கப் போடா—அடிமை
வேலை செய்யப் போடா! (தொண்டு)

9. சேனை நடத்து வாயோ?—தொழும்புகள்
செய்திட விரும்பாயோ?
ஈன மான தொழிலே—உங்களுக்கு
இசைவ தாகும் போடா! (தொண்டு)

## 27. வெள்ளைக்கார விஞ்ச் துரை கூற்று

1. நாட்டி லெங்கும் சுதந்திர வாஞ்சையை
நாட்டினாய்;—கனல்—மூட்டினாய்;
வாட்டி யுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன்:—வலி—காட்டுவேன் (நாட்டி)

2. கூட்டம் கூடி வந்தே மாதரமென்று
கோஷித்தாய்; எமைத்—தூஷித்தாய்;
ஓட்டம் நாங்க ளெடுக்க வென்றே கப்பல்
ஓட்டினாய்;—பொருள்—ஈட்டினாய். (நாட்டி)

3. கோழைப் பட்ட ஜனங்களுக் குண்மைகள்
கூறினாய்;—சட்டம்—மீறினாய்;
ஏழைப்பட் டிங்கு இறத்தல் இழிவென்றே
ஏசினாய்;—வீரம்—பேசினாய். (நாட்டி)

4. அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினாய்;—புன்மை— போக்கினாய்;
மிடிமை போதும் நமக்கென் றிருந்தோரை
மீட்டினாய்;—ஆசை—ஊட்டினாய். (நாட்டி)

5. தொண்டொன் றேதொழிலாக் கொண்டிருந் தோரைத்
தூண்டி னாய்;—புகழ்—வேண்டினாய்;
கண்கண்ட தொழில் கற்க மார்க்கங்கள்
காட்டினாய்;—சோர்வை—ஓட்டினாய் (நாட்டி)

6. எங்கும் இந்த சுயராஜ்ய விருப்பத்தை
ஏவினாய்:—விதை—தூவினாய்;
சிங்கம் செய்யும் தொழிலைச் சிறுமுயல்
செய்ய வோ?—நீங்கள்—உய்யவோ? (நாட்டி)

7. சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திச்
சொல்லுவேன்;—குத்திக்—கொல்லுவேன்;
தட்டிப் பேசுவோ ருண்டோ? சிறைக்குள்ளே
தள்ளுவேன்;—பழி—கொள்ளுவேன். (நாட்டி)

## 28. தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை மறுமொழி

சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்—இனி—அஞ்சிடோம்;
எந்த நாட்டினும் இந்த அநீதிகள்
ஏற்குமோ?—தெய்வம்—பார்க்குமோ? 1

வந்தே மாதரம் என்றுயிர் போம்வரை
வாழ்த்து வோம்;—முடி—தாழ்த்துவோம்;
எந்த மாருயி ரன்னையைப் போற்றுதல்
ஈன மோ?—அவ—மானமோ? 2

பொழுதெல்லாம் எங்கள் செல்வங் கொள்ளைகொண்டு
போகவோ?—நாங்கள்—சாகவோ?
அழுது கொண்டிருப் போமோ? ஆண்பிள்ளைகள்
அல்லமோ?—உயிர்—வெல்லமோ? 3

நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ?—பன்றிச்—சேய்களோ?
நீங்கள் மட்டும் மனிதர்களோ? இது
நீத மோ?—பிடி—வாதமோ? 4

பார தத்திடை அன்பு செலுத்துதல்
பாப மோ?—மனஸ்—தாபமோ?
கூறும் எங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்ற மோ?—இதில்—செற்றமோ? 5

ஒற்றுமை வழியொன்றே வழியென்பது
ஓர்ந்திட் டோம்;—நன்கு—தேர்ந்திட்டோம்;
மற்று நீங்கள் செய்யுங்கொடு மைக்கெலாம்
மலைவு றோம்;—சித்தம்—கலைவுறோம். 6

சதையைத் துண்டுதுண் டாக்கினும் உன்னெண்ணம்
சாயு மோ?—ஜீவன்—ஓயுமோ?
இதையத் துள்ளே இலங்கு மஹாபக்தி
ஏகுமோ?—நெஞ்சம்—வேகுமோ? 7

# 29. நடிப்புச் சுதேசிகள்

## கிளிக் கண்ணிகள்

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமு மின்றி,
வஞ்சனை சொல்வா ரடீ!—கிளியே!
வாய்ச்சொல்லில் வீரரடீ! 1

கூட்டத்திற் கூடிநின்று கூவிப் பிதற்ற லன்றி,
நாட்டத்திற் கொள்ளா ரடீ!—கிளியே!
நாளில் மறப்பா ரடீ! 2

சொந்த அரசும்புவிச் சுகங்களும் மாண்பு களும்
அந்தகர்க் குண்டாகு மோ?—கிளியே!
அலிகளுக் கின்ப முண்டோ? 3

கண்கள் இரண்டிருந்தும் காணுந் திறமை யற்ற
பெண்களின் கூட்டமடீ!—கிளியே
பேசிப் பயனென் னடி? 4

யந்திர சாலை யென்பார் எங்கள் துணிக ளென்பார்
மந்திரத் தாலே யெங்கும்—கிளியே
மாங்கனி வீழ்வ துண்டோ! 5

உப்பென்றும் சீனி என்றும் உள்நாட்டுச் சேலை என்றும்
செப்பித் திரிவா ரடீ!—கிளியே
செய்வ தறியா ரடீ! 6

தேவியர் மானம் என்றும் தெய்வத்தின் பக்தி என்றும்
நாவினாற் சொல்வ தல்லால்—கிளியே
நம்புத லற்றா ரடீ! 7

மாதரைக் கற்பழித்து வன்கண்மை பிறர்செய்யப்
பேதைகள் போலு யிரைக்—கிளியே
பேணி யிருந்தா ரடீ! 8

தேவி கோயிலிற் சென்று தீமை பிறர்கள் செய்ய
ஆவி பெரிதென் றெண்ணிக்—கிளியே
அஞ்சிக் கிடந்தா ரடீ! 9

அச்சமும் பேடி மையும் அடிமைச் சிறுமதியும்
உச்சத்திற் கொண்டா ரடீ!—கிளியே
ஊமைச் சனங்க ளடீ! 10

ஊக்கமும் உள்வலியும் உண்மையிற் பற்று மில்லா
மாக்களுக் கோர்கணமும்—கிளியே
வாழத் தகுதி யுண்டோ? 11

மானம் சிறிதென் றெண்ணி வாழ்வு பெரிதென் றெண்ணும்
ஈனர்க் குலகந் தனில்—கிளியே
இருக்க நிலைமை யுண்டோ? 12

சிந்தையிற் கள்விரும்பிச் சிவசிவ வென்பது போல்,
வந்தே மாதர மென்பார்—கிளியே
மனத்தி லதனைக் கொள்ளார். 13

பழமை பழமை யென்று பாவனை பேச லன்றிப்
பழமை இருந்த நிலை—கிளியே!
பாமர ரேதறி வார்? 14

நாட்டில் அவமதிப்பும் நாணின்றி இழிசெல்வத்
தேட்டில் விருப்புங் கொண்டே—கிளியே
சிறுமை யடைவா ரடீ! 15

சொந்தச் சகோதரர்கள் துன்பத்திற் சாதல் கண்டும்
சிந்தை இரங்கா ரடீ—கிளியே
செம்மை மறந்தா ரடீ! 16

பஞ்சத்தும் நோய்களிலும் பாரதர் புழுக்கள் போல்
துஞ்சத்தம் கண்ணுற் கண்டும்—கிளியே
சோம்பிக் கிடப்பா ரடீ! 17

தாயைக் கொல்லும் பஞ்சத்தைத் தடுக்க முயற்சி யுறார்
வாயைத் திறந்து சும்மா—கிளியே
வந்தே மாதர மென்பார்! 18

## 30. வாழ்க நீ எம்மான்

மகாத்மா காந்தி பஞ்சகம்

வாழ்க நீ! எம்மான், இந்த வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மஹாத்மா!நீ வாழ்க! வாழ்க! 1

அடிமை வாழ்வ கன்றிந் நாட்டார் விடுதலை யார்ந்து,
[செல்வம்,
குடிமையி லுயர்வு, கல்வி, ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும் படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்!
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்! புவிக்குளே முதன்மை
[யுற்றாய்! 2

வேறு

கொடியவெந் நாக பாசத்தை மாற்ற
மூலிகை கொணர்ந்தவன் என்கோ?
இடிமின்னல் தாங்கும் குடைசெய்தான் என்கோ?
என்சொலிப் புகழ்வதிங் குனையே?
விடிவிலாத் துன்பஞ் செயும் பராதீன
வெம்பிணி யகற்றிடும் வண்ணம்
படிமிசைப் புதிதாச் சாலவும் எளிதாம்
படிக்கொரு சூழ்ச்சி நீ படைத்தாய்! 3

தன்னுயிர் போலே தனக்கழி வெண்ணும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்;
மன்னுயி ரெல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்;
இன்னமெய்ஞ் ஞானத் துணிவினை மற்றாங்கு
இழிபடு போர், கொலை, தண்டம்,
பின்னியே கிடக்கும் அரசிய லதனில்
பிணைத்திடத் துணிந்தனை, பெருமான்! 4

பெருங்கொலை வழியாம் போர்வழி இகழ்ந்தாய்;
அதனிலுந் திறன்பெரி துடைத்தாம்
அருங்கலை வாணர், மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி யென்றுநீ அறிந்தாய்;
நெருங்கிய பயன்சேர் ஒத்துழை யாமை
நெறியினால் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத்தொழில் மறந்து
வையகம் வாழ்கநல் லறத்தே! 5

## 31. வாழிய செந்தமிழ்!

(ஆசிரியப்பா)

வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மைவந் தெய்துக! தீதெலாம் நலிக!
அறம்வளர்ந் திடுக! மறம்மடி வுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நந்தே யத்தினர் நாடொறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

## 32. சுதந்திரப் பெருமை

("தில்லை வெளியிலே கலந்துவிட் டாலவர்
திரும்பியும் வருவாரோ?" என்னும் வர்ண மெட்டு)

1. வீர சுதந்திரம் வேண்டிநின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ?—என்றும்
ஆரமு துண்ணுதற் காசைகொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்துவாரோ? (வீர)

2. புகழுநல் லறமுமே யன்றியெல் லாம்வெறும்
பொய்யென்று கண்டாரேல்—அவர்
இகழுறும் ஈனத்தொண் டியற்றியும் வாழ்வதற்கு
இச்சையுற் றிருப்பாரோ? (வீர)

3. பிறந்தவர் யாவரும் இறப்ப துறுதியெனும்
பெற்றியை அறிந்தாரேல்—மானம்
துறந்தறம் மறந்தும்பின் உயிர்கொண்டு வாழ்வது
சுகமென்று மதிப்பாரோ? (வீர)

4. மானுட ஜன்மம் பெறுவதற் கரிதெனும்
வாய்மையை உணர்ந்தாரேல்—அவர்
ஊனுடல் தீயினும் உண்மை நிலைதவற
உடன்படு மாறுளதோ? (வீர)

5. விண்ணி லிரவிதனை விற்றுவிட் டெவரும்போய்
மின்மினி கொள்வாரோ?
கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ? (வீர)

6. மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ? (வீர)

7. வந்தே மாதரம் என்று வணங்கியபின்
மாயத்தை வணங்குவரோ?
வந்தே மாதரம் ஒன்றே தாரகம்
என்பதை மறப்பாரோ? (வீர)

## 33. சுதந்திரப் பயிர்

### கண்ணிகள்

தண்ணீர்விட்டோ வளர்த்தோம்? சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம்; கருகத் திருவுளமோ? 1
எண்ணமெலாம் நெய்யாக எம்முயிரி னுள்வளர்ந்த
வண்ண விளக்கிஃது மடியத் திருவுளமோ?

ஓராயிர வருடம் ஓய்ந்து கிடந்தபின்னர்
வாராது போலவந்த மாமணியைத் தோற்போமோ? 3

தர்மமே வெல்லுமெனும் சான்றோர்சொல் பொய்யாமோ?
கர்ம விளைவுகள்யாம் கண்டதெலாம் போதாதோ? 4

மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ? 5

எண்ணற்ற நல்லோர் இதயம் புழுங்கியிரு
கண்ணற்ற சேய்போற் கலங்குவதுங் காண்கிலையோ? 6

மாதரையும் மக்களையும் வன்கண்மை யாற்பிரித்து
காத லிளைஞர் கருத்தழிதல் காணாயோ? 7

எந்தாய்! நீதந்த இயற்பொருளெ லாமிழந்து
நொந்தார்க்கு நீயன்றி நோவழிப்பார் யாருளரோ? 8

இன்பச் சுதந்திரம்நின் இன்னருளாற் பெற்றதன்றோ?
அன்பற்ற மாக்கள் அதைப்பறித்தாற் காவாயோ? 9

வானமழை யில்லையென்றால் வாழ்வுண்டோ? எந்தைசுயா
தீனமெமக் கில்லையென்றால் தீனரெது செய்வோமே? 10

நெஞ்சகத்தே பொய்யின்றி நேர்ந்ததெலாம் நீதருவாய்
வஞ்சகமோ எங்கள் மனத்தூய்மை காணாயோ? 11

பொய்க்கோ உடலும் பொருளுயிரும் வாட்டுகிறோம்?
பொய்க்கோ தீராது புலம்பித் துடிப்பதுமே? 12

நின்பொருட்டு நின்னருளால் நின்னுரிமை யாம்கேட்டால்,
என்பொருட்டு நீதான் இரங்கா திருப்பதுவோ? 13

இன்றுபுதி தாய்இரக் கின்றோமோ? முன்னோர்
அன்றுகொடு வாழ்ந்த அருமையெலாம் ஓராயோ? 14

நீயும் அறமும் நிலைத்திருத்தல் மெய்யானால்,
ஓயுமுனர் எங்களுக்கிவ் ஓர்வரம்நீ நல்குதியே, 15

## 34. சுதந்திர தாகம்

1. என்று தணியும்இந்தச் சுதந்திர தாகம்?
என்று மடியும்எங்கள் அடிமையின் மோகம்?
என்றெம தன்னைகை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்துபொய் யாகும்?
அன்றொரு பாரதம் ஆக்கவந் தோனே!
ஆரியர் வாழ்வினை ஆதரிப் போனே!
வென்றி தருந்துணை நின்னரு ளன்றோ?
மெய்யடி யோம்இன்னும் வாடுதல் நன்றோ?

2. பஞ்சமும் நோயும்நின் மெய்யடி யார்க்கோ?
பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ?
தஞ்ச மடைந்தபின் கைவிட லாமோ?
தாயுந்தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ?
அஞ்சலென் றருள்செயுங் கடமையில் லாயோ?
ஆரிய நீயும்நின் அறம்மறந் தாயோ?
வெஞ்செயல் அரக்கரை வீட்டிடு வோனே!
வீர சிகாமணி ஆரியர் கோனே!

## 35. சுதந்திர தேவியின் துதி

இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்,
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட் டாலும்
சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே. 1

நின்னருள் பெற்றி லாதார்
நிகரிலாச் செல்வ ரேனும்,
பன்னருங் கல்வி கேள்வி,
படைத்துயர்ந் திட்டா ரேனும்,
பின்னரும் எண்ணி லாத
பெருமையிற் சிறந்தா ரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்.
அணிகள்வேய்ப் பிணத்தோ டொப்பார். 2

தேவி! நின் னொளிபெ றாத
தேயமோர் தேய மாமோ?
ஆவியங் குண்டோ? செம்மை
அறிவுண்டோ? ஆக்க முண்டோ?
காவிய நூல்கள்' ஞானக்
கலைகள்வே தங்க ளுண்டோ?
பாவிய ரன்றோ நின்தன்
பாலனம் படைத்தி லாதார்? 3

ஒழிவறு நோயிற் சாவார்,
ஊக்கமொன் றறிய மாட்டார்;
கழிவுறு மாக்க ளெல்லாம்
இகழ்ந்திடக் கடையில் நிற்பார்;
இழிவுறு வாழ்க்கை தேரார்,
கனவிலும் இன்பங் காணார்
அழிவறு பெருமை நல்கும்
அன்னை! நின் அருள்பெ றாதார். 4

வேறு

தேவி! நின்னருள் தேடி யுளந்தவித்து
ஆவி யுந்தம தன்பும் அளிப்பவர்
மேவி நிற்பது வெஞ்சிறை யாயினும்
தாவில் வானுல கென்னத் தகுவதே. 5

அம்மை உன்றன் அருமை யறிகிலார்,
செம்மை யென்றிழி தொண்டினைச் சிந்திப்பார்,
இம்மை யின்பங்கள் எய்துபொன் மாடத்தை
வெம்மை யார்புன சிறையெனல் வேண்டுமே. 6

மேற்றி சைப்பல நாட்டினர் வீரத்தால்
போற்றி நின்னைப் புதுநிலை யெய்தினர்,
கூற்றி னுக்குயிர் கோடி கொடுத்தும்நின்
பேற்றி னைப்பெறு வேமெனல் பேணினர் 7

அன்ன தன்மைகொள் நின்னை அடியனேன்
என்ன கூறி இசைத்திட வல்லனே?
பின்ன முற்றுப் பெருமை யிழந்துநின்
சின்ன மற்றழி தேயத்தில் தோன்றினேன் 8

பேர றத்தினைப் பேணுநல் வேலியே!
சோர வாழ்க்கை, துயர்மிடி யாதிய
கார றுக்கக் கதித்திடு சோதியே!
வீர ருக்கமு தேநினை வேண்டுவேன். 9

## 36. விடுதலை

விடுதலை! விடுதலை! விடுதலை!

1. பறைய ருக்கும் இங்கு தீயர்
புலைய ருக்கும் விடுதலை!
பரவ ரோடு குறவ ருக்கும்
மறவ ருக்கும் விடுதலை!
திறமை கொண்ட தீமை யற்ற
தொழில்பு ரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானம் எய்தி
வாழ்வம் இந்த நாட்டிலே!

2. ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனும் இல்லை ஜாதியில்,
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வம் எய்தி
மனம கிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒருநிகர்
சமான மாக வாழ்வமே! (விடுதலை)

3. மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமை யைக்கொ ளுத்துவோம்,
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையி லும்ந மக்குளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்க ளோடு பெண்களும்
சரிநி கர்ச மான மாக
வாழ்வம் இந்த நாட்டிலே! (விடுதலை)

## 37. சுதந்திரப் பள்ளு

(பள்ளர் களியாட்டம்)

பல்லவி

ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே!
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட் டோமென்று (ஆடு)

சரணங்கள்

1. பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே—பிச்சை
ஏற்பாரைப் பணிகின்ற காலமும் போச்சே—நம்மை
ஏய்ப்போருக் கேவல்செய்யும் காலமும் போச்சே. (ஆடு)

2. எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு;
சங்குகொண்டே வெற்றி ஊதுவோமே—இதைத்
தரணிக்கெல் லாமெடுத்து ஓதுவோமே. (ஆடு)

3. எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே—பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற காலம் வந்ததே—இனி
நல்லோர் பெரியரென்னும் காலம் வந்ததே—கெட்ட
நயவஞ்சக் காரருக்கு நாசம் வந்ததே. (ஆடு)

4. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்-வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்,
விழலுக்கு நீர்பாய்ச்சி மாய மாட்டோம்—வெறும்
வீணருக்கு உழைத்துடலம் ஓய மாட்டோம். (ஆடு)

5. நாமிருக்கும் நாடு நமதுஎன்ப தறிந்தோம்—இது
நமக்கே உரிமையாம் என்ப தறிந்தோம்—இந்தப்
பூமியில் எவர்க்கும்இனி அடிமை செய்யோம்—பரி
பூரணனுக் கேயடிமை செய்து வாழ்வோம். (ஆடு)

## 38. புனர் ஜன்மம்

புனர் ஜன்மம் உண்டு.

மதுரையிலே ஒரு சாஸ்திரியார் நேற்று மாலை இறந்து போனதாக வைத்துக் கொள்ளுவோம். அவர் திரும்பவும் பிறப்பாரா? தெரு வழியாக ஒருவன் நடந்து போகும் போது காலிலே ஒரு சிற்றெறும்பு மிதிபட்டு இறந்து போவதாக வைத்துக் கொள்ளுவோம். அது திரும்பவும் பிறக்குமா? இதையெல்லாம் பற்றிச் சாஸ்திரங்கள் மிகவும் விஸ்தாரமாகப் பேசியிருக்கின்றன. அவற்றிலே படித்துக் கொள்ளலாம். ஆனால், நான் இப்போது சொல்லவந்த கதை இதுவன்று. நான் சொல்லவந்த விஷயம் ஹிந்து ஸ்தானத்தின் புனர் ஜன்மம்.

'ஹிந்து ஸ்தானம்' என்பது ஹிந்துக்களின் ஸ்தானம். இது நமது தேசத்திற்கும், தேசத்திலுள்ள ஜனக் கூட்டத்திற்கும் பெயர். இந்த ஜனக் கூட்டத்திற்கு பாரத ஜாதி' என்றும் பெயர் சொல்வதுண்டு.

### பாரத ஜாதி

பாரதம் பரதன் நிலைநாட்டியது. இந்தப் பரதன் துஷ்யந்த ராஜாவின் மகன். இமயமலை, முதல் கன்யாகுமரி முனை வரையுள்ள நமது நாட்டை இவன் ஒன்று சேர்த்து அதன்மிசை முதலாவது சக்ராதிபத்யம் ஏற்படுத்தியபடியால், இந்த நாட்டிற்குப் 'பாரத தேசம்' என்று பெயர் உண்டாயிற்று. கங்கையிலே வந்து சேரும் வாய்க்கால்களெல்லாம் கங்கையாகவே மாறிவிடும். பாரத தேசத்தில் வந்து குடியேறித் தலைமுறை தலைமுறையாக

இங்கு வாழ்பவர்களெல்லாம் நமது ஜனக் கூட்டத்தைச் சேர்ந்தவராகின்றனர்.

கிருஸ்துவர்களாயினும், பார்ஸிகளாயினும், மகம்மதியராயினும், எங்கிருந்து வந்து எந்த் இஷ்ட தெய்வத்தைக் கொண்டாடிய போதிலும், பாரத பூமியிலே பிறந்து வளர்ந்து இதையே சரணுகக் கொண்ட மனிதர்களை யெல்லாம் பாரத ஜாதியிலே சேர்த்துக் கணக்கிட வேண்டும். இது ஒரே ஜாதி; பிரிக்க முடியாதது; அழிவில்லாதது. இதற்கு ஆதாரமும் மூலபலமுமாவது யாதெனில், ஆரிய ஸம்பத்து. அதாவது ஆரியரின் அறிவும், அந்த அறிவின் பலன்களும்.

## ஆரிய ஸம்பத்து

ஸம்பத்து என்பது ஸம்ஸ்கிருதச் சொல். இதன் பொருள், செல்வம். ஆனல் இங்கே செல்வம் என்பது திரவியத்தையும், பூஸ்திதியையும், ஆடு மாடுகளையும் மாத்திரமே குறிப்பிடுவதன்று. (1) அறிவுச் செல்வம், (2) ஒழுக்கச் செல்வம், (3) பொருட் செல்வம் ஆகிய மூன்றையும் குறிப்பிடும். 'ஆர்ய ஸம்பத்து' என்பது ஹிந்துக்களுடைய அறிவு வளர்ச்சி.

நமது வேதம், நமது சாஸ்திரம், நமது ஜனக்கட்டு, நமது பாஷைகள், நமது கவிதை, நமது சிற்பம், நமது ஸங்கீதம், நமது நாட்டியம், நமது தொழில் முறைகள், நமது கோபுரங்கள், நமது மண்டபங்கள், நமது குடிசைகள்—இவை அனைத்துக்கும் பொதுப்பெயர் 'ஆர்ய ஸம்பத்து.' காளிதாஸன் செய்த சாகுந்தல நாடகம், ஹிந்தி பாஷையிலே துளஸீதாஸர் செய்திருக்கும் ராமாயணம், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், ஆண்டாள் திருமொழி—இவையனைத்துக்கும் பொதுப் பெயராவது ஆரிய ஸம்பத்து. தஞ்சாவூர்க் கோயில், திருமலை நாயக்கர்

மஹால், தியாகையர் கீர்த்தனங்கள், எல்லோராவிலுள்ள குகைக் கோயில், ஆக்ராவிலுள்ள தாஜ்மஹால், சரப சாஸ்திரியின் புல்லாங்குழல்—இவை அனைத்துக்கும் பொதுப்பெயர் ஆர்ய ஸம்பத்து. எனவே, ஆர்ய ஸம்பத் தாவது ஹிந்துஸ்தானத்தின் நாகரிகம். இந்த ஸம்பத் தைப் பாதுகாக்கும் வரையில் இந்த ஜாதிக்கு உயிருண்டு. இந்த ஸம்பத்திலே துருப்பிடிக்க இடம் கொடுத்தால், இந்த ஜாதியைச் செல் அரித்து விடும்.

இந்த ஆர்ய ஸம்பத்தை உலகம் உள்ளவரை ஸம் ரக்ஷணம் செய்து, மேன்மேலும் ஒளியும் சிறப்பும் உண் டாகும்படி செய்யும் கடமை தேவர்களால் பாரத ஜாதிக்கு ஏற்படுத்தப்பட்ட கடமையாகும்.

## இடையில் நமக்கு நேர்ந்த கேடு

இந்த ஆர்ய ஸம்பத்தை நாம் பல பல நூற்றுண்டுக ளாக ஆதரித்துக்கொண்டு வந்தோம். சென்ற சில நூற் றுண்டுகளாக இதில் துருப்பிடிக்க இடங்கொடுத்து விட்டோம். தேவர்கள் நமக்குக் கொடுத்த கடமையைக் கர்வத்தாலும், சோம்பராலும், சிறுமையாலும் உல்லங் கனம் செய்யத் தொடங்கினோம். தேவர்கள் 'இந்த பாரத ஜாதியைக் கொஞ்சம் செல் அரிக்கக் கடவது' என்று ஆசீர்வாதம் பண்ணினார்கள்.

மலைப்பாம்புக் கதை கேட்டிருக்கிறீர்கள் அல்லவா? அதன் வாலிலே தீப்பற்றி எரியுமாம். மலைப்பாம்பு சுக மாகக் குறட்டைவிட்டுத் தூங்குமாம். செல்லரித்துக் கொண்டுபோனது நமது ஸ்மரணையிலே தட்டவில்லை. அத்தனை கர்வம், அத்தனை கொழுப்பு, அத்தனை சோம்பர்.

நமது கவிதையிலே ஆனந்தம் குறையத் தொடங் கிற்று, ருசி குறைந்தது. கரடு முரடான கல்லும் கள்ளி

முள்ளும் போன்ற பாதை நம் கவிகளுக்கு நல்ல பாதை யாகத் தோன்றலாயிற்று. கவிராயர் 'கண்' என்பதைச் 'சக்கு' என்று சொல்லத் தொடங்கினர். ரஸம் குறைந்தது; சக்கை அதிகப்பட்டது. உண்மை குறைந்தது; பின்னல் திறமைகள் அதிகப்பட்டன.

"சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்"

என்று கம்பன் பாடியிருக்கிறான்.

'சவி' என்பது ஒளி; இது வடசொல்; கம்பன் காலத்தில் அதிக வழக்கத்திலிருந்தது போலும். "ஒளி பொருந்தும்படி தெளிவு கொண்டதாகி தண்ணென்ற (குளிர்ந்த) நடையுடையதாகி, மேலோர் கவிதையைப் போலக் கிடந்தது கோதாவரி நதி" என்று கம்பன் வர்ணனை செய்கிறான். எனவே, கவிதைகளில் ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்கவேண்டுமென்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை.

மேலும், நெடுங்காலத்துக்கு முன்னே எழுதப்பட்ட நூல்கள் அக்காலத்துப் பாஷையைத் தழுவினவை. காலம் மாற மாற, பாஷை மாறிக்கொண்டு போகிறது; பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர் அந்த அந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய பதங்களையே வழங்கவேண்டும். அருமை யான உள்ளக்காட்சிகளை எளிமைகொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை. ஆனால் சென்ற சில நூற்றாண்டு களாக, புலவர்களும் சாமியார்களும் சேர்ந்து வெகு ஸாதாரண விஷயங்களை அஸாதராண அலௌகிக அந்தகார நடையில் எழுதுவதுதான் உயர்ந்த கல்வித் திறமை என்று தீர்மானஞ் செய்துகொண்டார்கள்.

## இடைக்காலத்து சங்கீதம்

பாரத தேசத்து ஸங்கீதம் பூமியிலுள்ள எல்லா தேசத்து ஸங்கீதத்தைக் காட்டிலும் மேலானது. கவிதையைப் போலவே ஸங்கீதத்திலும் நவரஸங்களின் தொழில் இருக்கவேண்டும், நவரஸங்களைப்பற்றி இந்தப் பத்திரிகையிலே (சுதேசமித்திரனில்) தனியாக ஒரு வியாஸம் பின் எழுதப்படும். இன்ன இன்ன ராகங்களிலே இன்ன இன்ன சமயங்களில் இன்ன இன்ன ரஸங்கள் தோன்றப் பாடவேண்டுமென்ற விதிகள் எல்லா பூர்வ காலத்து நூல்களிலே காணப்படுகின்றன. கீர்த்தனத்திலுள்ள சொற்களின் அர்த்தமும் ராகத்தின் ஒளியும் ரஸத்திலே ஒன்றுபட்டிருக்க வேண்டும். தியாகையர் காலம்வரை நமது தேசத்து ஸங்கீதம் ஒளியுடன் இருந்தது. பிறகு இதிலும் இருள் சேரத் தொடங்கிவிட்டது. பாட்டிலே ரஸச் சேர்க்கை கிடையாது. அப்படியே சேர்த்தாலும் சோக ரஸம் (கருணாரஸம்) தான் சேர்ப்பார்கள். மற்றவை மடிந்து போயின. பாட்டுக்கு இசைந்தபடி தாளம் என்பது மாறிப் போய்த் தாளத்துக் கிசைந்தபடி பாட்டாகிவிட்டது. 'இன்பத்தைக் காட்டிலும் கணக்கே பிரதானம்' என்று முடிவு செய்து கொண்டார்கள். இன்பமும் கணக்கும் சேர்ந்திருக்க வேண்டும். இன்பமில்லாமல் கணக்கு மாத்திரம் இருந்தால் அது பாட்டாகாது.

## மறு பிறப்பு

இடைக் காலத்தே நமக்கு நேர்ந்த கேட்டிற்கு ஸங்கீதத்தையும் கவிதையையும் திருஷ்டாந்தங் காட்டினோம். ஆனால், இந்தக் கேடு அதை இரண்டையும் மாத்திரமே தொட்டு நிற்கவில்லை. நமது சித்திரத் தொழில், நமது சிற்பம், நமது ஜனக்கட்சி, ஜன நீதி, நமது

சாஸ்திரம், தலை, கால்—எல்லாவற்றிலும் இந்தக் கேடு பாய்ந்துவிட்டது. நோய் முற்றிப்போயிருந்தது. பராசக்தி நல்ல வேளையில் நமக்குள் உயர்ந்த வைத்தியர் பலரை அனுப்பினாள். அவளுக்கு நம்மீது கிருபை வந்து விட்டது. எனவே, பிழைத்தோம். ஆனாலும் இம்முறை பிழைத்தது புனர்ஜென்மம். இந்தப் புனர்ஜென்மத்தின் குறிகளை எல்லாவற்றிலும் காண்கிறோம்; பாரதஜாதி புதிதாய்விட்டது. தற்காலத்திலே பூமண்டலத்து மஹா கவிகளில் நம் ரவீந்திரநாதர் ஒருவர் என்று உலகம் ஒப்புக் கொள்கிறது. இதுவரை ஐரோப்பிய பண்டிதர்கள் இயற்கை நூல் (ப்ரகிருதி சாஸ்திரம்) தமது விசேஷ உடைமை என்று கருதிவந்தார்கள். இப்போது நம் ஜகதீச சந்திர வஸு அந்த வழியில் நிகரற்ற திறமை பெற்றவர் என்பதை மேல்நாட்டு வித்துவான்களில் ஒப்புக் கொள்ளாதார் யாருமில்லை. தமிழ்நாட்டிலே புதிய கவிதையும் சாஸ்திர ஒளியும் விரைவிலே தோன்றும். உலகம் பார்த்து வியப்படையும்.

செத்துப் பிழைத்தோம். ஆனால், உறுதியாக நல்ல வயிரம் போலே பிழைத்துவிட்டோம். புதிய ஜன்மம் நமக்கு மிகவும் அழகான ஜன்மமாகும்படி தேவர்கள் அருள் புரிந்திருக்கிறார்கள்; அதன் பொருட்டு அவர்களை இடைவிடாமல் வாழ்த்துகின்றோம்.

## 38. வேதரிஷிகளின் கவிதையின் முகவுரை

ஸ்ரீ காசியில் ஹிந்து ஸர்வகலா சங்கத்திற்கு அஸ்தி வாரக் கல் நாட்டியபோது, பல வித்வான்கள் வந்து உபந்யாஸம் செய்தார்கள். இவற்றுள்ளே, நவீன சாஸ்திர (ஸயன்ஸ்) பண்டிதர்களின் சிகாமணியாக விளங்கும் ஸ்ரீமான் ஜகதீச சந்திர வஸு செய்த உபந்யாசம் மிகவும் மாண்புடையது.

'லௌகிக சாஸ்திர ஆராய்ச்சிகளிலே மறுபடியும் பாரத தேசம் தலைமை வகிக்கும்படி செய்வது நம்முடைய கடமை' என்பதை இவர் பல வகையிலே விளக்கியபின்பு, தமது முடிவுரையில் பின்வருமாறு சொல்லுகிறார் :

'ஹிந்து நாகரிகத்திற்குள்ளே ஒரு விசேஷ சக்தி யிருக்கிறது. காலத்தின் அழிவுகளையெல்லாம், உலகத்தி லேயுள்ள பொருளனைத்தையும் சிதைவுபடுத்த வரும் மாறுதல்களையெல்லாம், இந்த சக்தியினாலே நமது நாக ரிகம் எதிர்க்க வல்லதாயிற்று. (எகிப்து தேசத்தில்) நீல நதிக்கரையிலேயும், அஸ்ஸீரீயா தேசத்திலும், பாபிலோனி லும், பல்லாயிர வருஷங்களுக்கு முன்னே பெரிய பெரிய அறிவுப் பயிற்சிகள் தோன்றி வளர்ந்ததையும், மாறியதை யும், மறைந்ததையும், நமது மஹத்தான நாகரிகம் பார்த்துக் கொண்டிருந்தது. (அப்போதுகூட நமது நாகரிகம் அளவிடமுடியாத பழமை கொண்டதாக விளங்கிற்று.) அந்த நாளிலே பாரதமாதா தனக்கு அழிவில்லையென்ற தீராத பக்தியுடன் விளங்கினாள். இன்றும் யௌவனத்தோடிருக்கிறாள். இனி, எதிர் காலத்தி லும் அழியமாட்டோமென்கிற தீராத பக்தியிலே உறுதி கொண்டு நிற்கிறாள்.'

இங்ஙனம், நவீன சாஸ்திரக் கல்வியாகிய குன்றத்தின் மேலே நெருப்புத் தூணைப்போல ஒளிவீசி நிற்கும் ஸ்ரீ மான் வஸு கூறிய வார்த்தைகள் வெறுமே உபசாரமல்ல. நம்முடைய இடைக்காலத்து மடமைகளையெல்லாம் மஹிமைகளென்று நினைத்து வீண் பெருமை கொள்வோ ரின் பேச்சை நாம் உதறிவிடுதல் நியாயம். ஆனால், வஸு பண்டிதர் சொல்லியதை நாம் மதிப்புடன் ஏற்றுக் கொள்ளுதல் தகும். இடைக்காலத்திலே நமது ஜாதி, பொய்களும் சோர்வுகளும் குவித்த குப்பையின் கீழே அழுந்திக் கிடந்தது. பாரதமாதா நித்திரையிலிருந்தாள்.

இப்போது, மறுபடியும் அந்தக் குப்பையிலிருந்து வெளிப் பட்டு, ஸ்தைரியமென்னும் கங்கா நதியில் ஸ்நானம் செய்து விட்டு, நமது பாரத ஜாதி தனது வானத்திலே தோன்றும் ஸூர்யோதயத்தை அன்புடன் அழைத்து வாழ்த்துக் கூறுகின்றது.

மரணமில்லாத இந்த ஹிந்து நாகரிகமாகிய கற்பக விருக்ஷத்துக்கு ஆதியிலே விதையூன்றியவர்கள் வேத ரிஷிகள். அவர்கள் எக்காலத்திலே—எத்தனை நூற்றுண்டு களின் முன்னே—இருந்தார்களென்பதைக் கணக்கிட்டுச் சொல்ல, நவீன ஆராய்ச்சி யாதொரு கருவியுமில்லாதிருக் கிறது. ஹிமவத் பர்வதம் எப்போதுண்டாயிற்று? யாருக்குத் தெரியும்? வேதரிஷிகள் எக்காலத்தில் வாழ்ந் தனர்? எப்படிச் சொல்வது?

## 40. ஸ்வாமி அபேதாநந்தர்

21, ஜூலை 1906

இந்த வாரத்தில் சென்னையிலே நடந்த சமாசாரங் களுக்குள் வெகு முக்கியமானது ஸ்வாமி அபேதாநந்தரின் வரவே யாகும். பாரத நாட்டு மஹரிஷிகளில் ஒருவரும் ஜகத் பிரசித்தருமாகிய ஸ்வாமி விவேகாநந்தரது ஸக பாடியும் ஸ்ரீமத் ராமகிருஷ்ண பரப்ரஹ்மத்தின் சிஷ்யரு மான அபேதாநந்தர் பல வருஷ காலமாக ஐரோப்பா, அமெரிக்கா முதலிய இடங்களில் மண்ணுசையிலும் பொன்னுசையிலும் அமிழ்ந்துகிடக்கும் மனிதர்களிடம் வேதாந்த மார்க்கம் உபதேசித்து அவர்களுடைய இரும்பு நெஞ்சுகூட ஞானத் தீயில் இளகுமாறு செய்வித்து பெருங்கீர்த்தி பெற்றுவிட்டு, இப்போது தமது தாய் நாட்டிற்கு மீண்டும் வந்திருக்கிறார்.

இவருக்குச் சென்னையில் நடந்த உபசரணைகளையும் இவர் சென்னையிலே செய்த உபந்நியாசக் கருத்துக் களையும் பற்றி மற்றோரிடத்திலே பிரஸ்தாபம் செய்திருக் கிறோம். இவரும் இவருடைய கூட்டாளிகளும் கடல்மீது எத்தனையோ ஆயிரம் காதம் கடந்துபோய் இத்தேசத்தின் பெயர் கேட்டவுடனே அந்நியர்கள் முடி வணங்குமாறு செய்யும் நன்மைக்கு நம்மவர்களால் என்ன கைம்மாறு செய்ய முடியும்? இந்த மஹான்கள்தாம் என்ன கைம் மாறை எதிர்பார்க்கிறார்கள்? யாதொரு பற்று மில்லாமல், இரந்து உண்பவர்களாய் உலகத்தாரின் ஞான வழிக்கு ஏற்பட்டிருக்கும் மாயையாகிய குருட்டுத் தன்மையை நீக்கி, ஒளியளிக்க வேண்டுவதே கடமையாகக் கொண்டு நாள் கழித்துவரும் இப் பெரியார்களுக்கு உலகம் அளக்கத் தகாதவாறு கடமைப் பட்டிருக்கிறது. ஆத்மாவே உண்மை யென்றும், அதனை மறைத்து நிற்கும் மற்றத் தோற்றங்களெல்லாம் வெறும் மயக்கமே என்றும் போதனை செய்யத் தலைப்பட்டிருக்கும் அபேதாநந்த ஸ்வாமிகள், அந்தப் பாரமார்த்திக நிலைமை அறியாமல் வியாவஹாரிக நிலையிலே உழலும் நம்மவர்களுக்குக்கூட மிகவும் பயன் படத்தக்க சில ஹிதோபதேசங்கள் தந்திருக்கின்றார். ஞாயிற்றுக் கிழமை மாலை டவுன் ஹால் வெளி மைதானத் திலே இவர் உபந்நியாசம் புரிந்த காலத்தில் நம்மவர் களின் பேடித்தன்மையையும் பயங்காளித் தன்மையையும் பற்றிப் பேசியது கொஞ்சமில்லை: "ஆண்மை இழந்து பள்ளத்தில் விழுந்து கிடக்கிறீர்களே! எழுந்து நின்று உங்களது புருஷத் தன்மையை நிரூபித்துக்கொள்ளுங்கள்" என்று இத் தேசத்தாரை நோக்கிக் கூறுவதில் விவேகாநந்தர் எம்மட்டு ஆத்திரம் கொண்டிருந்தாரோ அம்மட்டு அபேதாநந்தரும் கொண்டிருப்பதைக் காண் கிறோம். தீர புத்திரர்களாகிய ஆரியர்கள் ஏதோ ஒரு

விதமான மதி மயக்கத்தால் குழந்தைகளைப் போலவும் பெண்களைப் போலவும் நடந்துகொள்வதைப் பார்த்தால் அனைத்தையும் துறந்த ஞானிக்குக்கூட ஒருவிதமான பரிதாபம் ஜனிக்குமல்லவா?

அபேதாநந்தருக்கும் அவரைப் போன்ற ஞானிகளுக்கும் நாம் பெரிய உபசரணைகள் நடத்துவதால் மட்டும் அவர்களது பிரீதிக்கு உள்ளாய்விட மாட்டோம். பல்லக்குகள், புஷ்ப ஹாரங்கள், வாத்தியங்கள் என்பவற்றைக் கொண்டு ஒரு ஞானியின் கிருபையை சம்பாத்தியம் செய்துவிடுவதென்றால் அது எளிதான காரியமா? அவர்களது உபதேசத்தின் உண்மையைக் கிரகித்து நம்மால் இயன்றமட்டும் அதன்படி நடக்க முயல்வதே நாம் அவர்களுக்குச் செய்யக்கூடிய கடமையாகும்.

தீரத் தன்மையைப் பற்றி மட்டிலுமல்லாமல் ஐக்கியம் முதலிய மற்ற விஷயங்களைப் பற்றியும் அபேதாநந்தர் பேசியிருக்கிறார். இந்தியாவில் ஒரு கோடி ஜனங்கள் இருக்கிறார்கள். ஆனால் ஒருவனுக் கொருவன் சம்பந்தமில்லாமல் ஒவ்வொருவன் ஒவ்வொரு மாதிரி எண்ணங் கொண்டிருக்கிறான். ஆதலால் வெவ்வெறு வகைப் பட்ட ஒரு கோடி எண்ணங்கள் ஏற்பட்டுப் போய் விடுகின்றன. எனவே ஒரு காரியமும் எளிதாகச் சாதிக்க முடியாமல் போய் விடுகிறது. பிரிட்டிஷ் தேசத்தில் 4 கோடி ஜனங்கள் மாத்திரமே இருந்தபோதிலும். அவர்களனைவரும் ஒரே விதமான எண்ணங் கொண்டிருப்பதால் அவர்கள் காரியங்கள் மிகவும் எளிதாகக் கைகூடிவிடுகின்றன. இதனை விவேகாநந்தர் வெகு தெளிவாக எடுத்துக் கூறி இருக்கிறார்.

இது நிற்க, அபேதாநந்தர் சென்னை மாகாணத்திலும் நகரத்திலும் பெற்ற உபசரணைகள் அவருக்கு இத் தேசம்

முழுதும் நடைபெறும் என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனால் அத்துடன் இவர் சென்ற இடமெல்லாம் ஜனங்கள் இவரது போதனைகளைப் பக்தியுடன் கேட்டுப் பயன் பெறுவார் களென்று இத்தகைய மஹான்கள் இந்நாட்டிலே தோன்றி வருவார்களானால் ஆரிய பூமியானது மறுபடியும் புராதன காலத்துப் பெருமையைக் காட்டிலும் மேற்பட்ட பெருமைக்கு வந்துவிடும்.

## 41. பாரத தேசத்தில் ஒவ்வொருவனும் செய்வதற்குரிய தியானம்

தியானத்தின் சக்தியை எளிதாக நினைக்கவேண்டாம். மனிதன் தான் விரும்புகிறபடியே ஆகிறான். இதைக் காரணங்கள் காட்டி ருஜுப்படுத்த வேண்டுமானால், அது ஒரு பத்திரிகைக் குறிப்பின் அளவுக்குள் முடிவு பெறமாட் டாது. ஆனால் அனுபவத்தில் பார்த்துக்கொள்ளலாம்.

ஒருவன் மனத்தில் நிமிஷத்துக்கு நிமிஷம் தோன்றி மறையுந் தோற்றங்களெல்லாம் தியானமாக மாட்டா. புதர்க் கூட்டத்திலே தீப் பிடித்தாற்போலே மனதிலுள்ள மற்ற கவலைகளையும் எண்ணங்களையும் எரிக்கும் ஒரே ஜோதியாக விளங்கும் பெரிய விருப்பத்தை தியானமென்று கூறுகிறோம். உள்ளத்தில் இவ்வித அக்னியொன்று வைத்துக் கொண்டிருப்போமானால், உலகத்துக் காரியாதி களெல்லாம் நமது உள்ள நிலைக்கு இணங்கியவாறே மாறு படுகின்றன.

சுவாமிகள் ஆத்ம நாசத்திற் கிடமான ஒருவகை இன்பத்தையே தியானமாக வைத்துக் கொண்டிருக் கிறார்கள், உலகத்திலுள்ள மெய்யான இன்பத்தை

யெல்லாம் நுகர்ந்து, தமக்கும் பிறர்க்கும் நிலைத்த பயன்கள் விளைவதற்குரிய நற்காரியங்கள் செய்து உள்ளத்திலுள்ள குழப்பங்களும் துன்பங்களும் நீங்கி, ஸந்தோஷமும் புகழும் பெற வேண்டுமென்ற இச்சையுடையவர்கள் தமது இச்சையை நிறைவேற்றிக் கொள்வது அசாத்தியமன்று. அது இவ்வுலகத்திலேயே இந்த ஜன்மத்திலேயே சாத்திய மாகும்.

அஃதெப்படி யென்றால், தமது உள்ளத்திலே தீரத் தன்மை, அமைதி, பலம், தேஜஸ், சக்தி, அருள், பக்தி, சிரத்தை இந்த எண்ணங்களையே நிரப்பவேண்டும்.

'இவற்றை யெல்லாம் நான் எனது உடைமையாக்கிக் கொள்வேன், இவற்றுக்கு எதிர்மறையான சிந்தனைகள் எனது அறிவினுள்ளே நுழைய இடங்கொடுக்க மாட்டேன்' என்று ஒவ்வொருவனும் உறுதி செய்து கொள்ளவேண்டும்.

'தனது உள்ளத்தில் இன்னின்ன எண்ணங்களைத்தான் வளரவிடவேண்டும்; இன்னின்ன எண்ணங்களை வளர விடக் கூடாது' என்று நிச்சயிக்கும் அதிகாரம்—திறமை —ஒவ்வொருவனுக்கும் இயற்கையிலேயே ஏற்பட்டிருக் கின்றது. இதை அனுபவத்துக்குக் கொண்டு வரும்போது ஆரம்பத்தில் சில கஷ்டங்களுண்டாகும். உன்னை எதிர்த்துச் சில விகாரமான சிந்தனைகள் அறிவிற்குள் வந்து நுழைந்து கொண்டு, 'வெளியே பிடித்துத் தள்ளினாலும் போகமாட் டோம்' என்று பிடிவாதஞ் செய்யும். அங்ஙனம் சிறுமைக் குரிய எண்ணங்கள் உன் அறிவில் புகுந்து கொண்டு தொல்லைப்படுத்துமானால், நீ அவற்றை வெளியே தள்ளு வதில் நேராக வேலை செய்யவேண்டாம். நீ அதைத் தள்ளத் தள்ள அது அங்கேதானிருக்கும். அதற்கு யுக்தி வேறு. நீ அந்த எண்ணத்திற்கு நேர்மாறான வேறொரு நல்ல சிந்தனையில் அறிவு செலுத்துக. அப்போது அந்த

நல்ல சிந்தனை வந்து அறிவில் இருந்துகொள்ளும். உன்னைத் தொல்லைப்படுத்திய குட்டிச்சாத்தான் தானாகவே ஓடிப் போய்விடும். தெய்வ பக்தியுள்ளவர்களாயினும், நாஸ்திகர்களாயினும், எந்த மார்க்கஸ்தர்களாயிருந்தாலும், அவர்களுக்குத் தியானம் அவசியம். பாரத தேசத்தில் ஒவ்வொருவனுக்கும் தற்காலத்தில் நல்ல தியானம் உணவைக் காட்டிலும் இன்றியமையாதது. சோற்றை விட்டாலும் விடு. ஒரு தனியிடத்தே போயிருந்து உயர்ந்த சிந்தனைகள், அமைதி கொடுக்கக்கூடிய சிந்தனைகள், பலம் தரக்கூடிய சிந்தனைகள், துணிவும் உறுதியும் தரக்கூடிய சிந்தனைகள், இவற்றால் அறிவை நிரப்பிக் கொண்டு தியானம் செய்வதை ஒரு நாளேனும் தவற விடாதே. தெய்வ பக்தியுடையவர்கள் இஷ்ட தெய்வத்தை அறிவில் நிறுத்தி அதனிடம் மிகுந்த தாகத்துடனும் உண்மையுடனும் மேற்கூறியவாறு பெருமைகள் உண்டாகுமாறு ப்ரார்த்தனை செய்யவேண்டும். வாயினால் பழங்கதையொன்றை முணுமுணுப்பது அதிகப் பயன்தர மாட்டாது. உன்னுடைய உள்ளுயிரிலிருந்து அந்தப் பிரார்த்தனை வெளியேற வேண்டும். நீயாக உனது சொந்தக் கருத்துடன் சொந்த வசனங்களில் உயிர் கலந்து தியானம் செய்வதே பயன்படும். நாஸ்திகர்கூட, இஷ்ட தெய்வமில்லாவிட்டாலும் வெறுமே தியானம் செய்வது நன்று. "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்பது குறள்

பரிபூர்ண விருப்பத்துடன் தியானம் செய். சோர்வும், அதைரியமும் விளைவிக்கத் தக்க எண்ணங்களுக்கு இடங் கொடாதே. ஊற்றிலிருந்து நீர் பெருகுவதுபோல உனக்குள்ளிருந்து தெளிந்த அறிவும், தீரத் தன்மையும், சக்தியும் மேன்மேலும் பொங்கி வரும். உனது இஷ்ட சித்திகளெல்லாம் நிறைவேறும். இது சத்தியம். அனுபவத்திலே பார்.

# 41. தைரியம்

நமது முன்னோர்களும் அவர்களைப் பின்பற்றி நாமுங் கூடப் புண்ணிய பாஷையாகக் கொண்டாடி வரும் ஸமஸ்கிருத பாஷை மிகவும் அற்புதமானது. அதை தெய்வ பாஷை என்று சொல்வது விளையாட்டன்று. மற்ற ஸாதாரண பாஷைகளை யெல்லாம் மனித பாஷையென்று சொல்லுவோமானால், இவை யனைத்திலும் சிறப்புடைய பாஷைக்குத் தனிப்பெயர் ஒன்று வேண்டுமல்லவா? அதன் பொருட்டே அதைத் தெய்வ பாஷை யென்கிறோம்.

அந்தபாஷையில் தைரியம் என்பதோர் சொல்லுண்டு. தீரனுடைய இயற்கை தைரியம். தீரன் என்ற வார்த்தையின் தாதுப் பொருளைக் கவனிப்போமானால் அறிவுடையவன் என்ற அர்த்தமாகும். துணிவுடையவனுக்கும் அந்த பாஷையிலே அதுவே பெயராக வழங்கப்படுகிறது. எனவே 'தைரியம்' என்ற சொல் அறிவுடைமை யென்றும் துணிவுடைமை யென்றும் இருவித அர்த்தங்கள் உடையது. இங்ஙனம் 'இவ்விரண்டு கருத்துக்களுக்கும் ஒரே சொல்லை வழங்குவது அந்த பாஷையின் பெருமைக்குள்ள சின்னங்களிலே ஒன்றாகும்.

உலகத்தில் வேறு எந்த பாஷையிலும் மேற்கூடிய இரண்டு கருத்துக்களையும் சேர்த்துக் குறிப்பிடக்கூடிய ஒரே பதம் கிடையாது. எந்த நாட்டினரைக் காட்டிலும் அதிகமாக யதார்த்தங்களைப் பரிசோதனை செய்து பார்த்த மஹான்கள் வழங்கிய பாஷையாதலால், அந்த பாஷையிலே இவ்விரண்டு பொருள்களுக்கும் ஒரே பதம் அமைக்கப் பட்டிருக்கிறது.

இதிலிருந்து தெரியக்கூடியது யாதென்றால், துணிவு உள்ளவனையே அறிவுள்ளவனென்பதாக நமது முன்னோர்கள் மதிக்கிறார்கள். எடுத்ததற்கெல்லாம் அஞ்சும் இயல்புடைய கோழையொருவன் தன்னைப் பல சாஸ்திரங்கள் கற்றவன் என்றும் அறிவாளி யென்றும் சொல்வானானால் அவனை நம்பாதே; அவன் முகத்தை நோக்கிக் காறியுமிழ்ந்துவிட்டு, அவனிடம் பின்வருமாறு சொல் :— "அப்பா, நீ ஏட்டைத் துளைக்கும் ராமபாண பூச்சியைப் போல், பல நூல்களைத் துளைத்துப் பார்த்து ஒருவேளை வாழ்நாளை வீணாக்கி யிருக்கக் கூடும். ஆனால் அச்சம் இருக்கும் வரை நீ அறிவாளி யாகமாட்டாய். அஞ்சாமைக்கும் அறிவுக்கும் நமது முன்னோர்கள் ஒரே சொல்லை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். அதை நீ கேள்விப் பட்டதில்லை போலும்!"

ஆம், அச்சமே மடமை. அச்சமில்லாமையே அறிவு. விபத்துக்கள் வரும்போது நடுங்குபவன் மூடன். அவன் எத்தனை சாஸ்திரம் படித்திருந்தாலும் மூடன்தான். விபத்துக்கள் வரும்போது எவன் உள்ளம் நடுங்காமல் துணிவுடன் அவற்றையெல்லாம் போக்க முயற்சி செய்கிறானோ, அவனே ஞானி. 'ஹரி: ஓம்' என்று எழுதத் தெரியாத போதிலும் அவன் ஞானிதான்.

சிவாஜி மஹாராஜா தனது சொந்தப் பிரயத்தனத்தினாலும், துணிவாலும், புத்திகூர்மையாலும் அவுரங்க சீப்பின் கொடுங்கோன்மையை யழித்து, மகாராஷ்டிரம் ஏற்படுத்தி தர்மஸ்தாபனம் செய்தார். அவர் ஏட்டுப் படிப்பில் தேர்ந்தவர் அல்லர். இந்தக் காலத்தில் இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் படித்துப் பரீக்ஷைகள் தேறி 15 ரூபாயைக்கொண்டு பிழைப்பதற்காகத் தமது தர்மத்தையும் ஆத்மாவையும் விலைப்படுத்தக் கூடிய மனிதர்கள் ஆயிரக்

கணக்கான சுவடிகள் படித்துக் கண்களைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சிவாஜிக்கு மகாராஷ்டிர ராஜ்யம் லாபம்; இவ்விருவரிலே யார் சிறந்தவர், இவ்விருவரிலே யார் அறிஞர்?

பாரதவாசிகளாகிய நாம் இப்போது புனருத்தாரணம் பெறுவதற்குக் கல்வி வேண்டும் என்று சிலர் சொல்லு கிறார்கள். நாம் 'துணிவு வேண்டும்' என்கிறோம். துணிவே தாய்; அதிலிருந்துதான் கல்வி முதலிய மற்றெல்லா நன்மைகளும் பிறக்கின்றன.

## 43. கொள்கைக்கும் செய்கைக்குமுள்ள தூரம்

ஒவ்வொருவரும் ஒவ்வொரு கொள்கையை உடைய வராயிருக்கலாம். அதாவது, மற்ற எல்லாரையும்விட ஒரு நியாயம் அல்லது ஒரு தர்மம் அல்லது ஒரு மதம் இவற்றில் ஒன்றில் ஒருவன் விசேஷ மனப்பற்றுடையவனாய் இருக்க லாம். இவை ஒவ்வொன்றும் ஸர்வ ஜன ஸம்மதமாய் நன்மை பயக்கத் தக்கதாய் இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. ஒரு கொள்கை தீமையை விளையச் செய்யினும் செய்யும். நன்மையை விளையச் செய்யினும் செய்யும்.

ஒரு கொள்கை என்பதென்ன? இதை நாம் ஆராய்ந்து அறிவது அவசியம். ஏனெனில், கொள்கையின்றிக் காரி யங்களைச் செய்து திரியும் சில மனிதர்கள் இருக்கிறார்கள். பகுத்தறியும் சக்தி இல்லாத எவனுக்கும் கொள்கை யென்று ஒன்று இருக்காது. ஒரு கொள்கையையுடையவன் பகுத்தறியும் சக்தி உடையவனாகவே இருக்கவேண்டும். ஆனால், அவ்வறிவின் துணையால் ஒரு கொள்கையை ஒப்புக் கொண்டு அதன் சாயலாகவே தன் கருமங்களைச் செய்து

வருபவனல்ல. எத்தனையோ ஜீவப்பிரேதங்கள், ஜீவியத்தின் நோக்கம் இன்னதென்றே அறியாமல், கேவலம் இந்திரிய உபாதைகளைக் கழித்துக் கொண்டு, உண்டு உடுத்தி, வாழ்ந்து இறந்து போகின்றனர். அவர்களெல்லாம் ஏதோ நல்லதோ கெட்டதோ கொள்கைகளைக் கடைப்பிடித்துக் கருமங்களை அவரவரறிவிற்குரியபடி செய்து ஜீவிக்கும் மனிதர்களல்ல. ஆகையால் கொள்கையென்பதென்ன?

ஒரு கொள்கையாவது, 'பகுத்தறிவின் துணையால் செய்யத்தக்கது இது, செய்யத்தகாதது இது' என்று ஒருவன் அறிந்து, முன் பின் யோசித்துத் தன் வாழ்நாளில் நீடித்துச் செய்ய மனத்தால் ஒப்புக்கொள்ளும் கருமத் தொடரின் அஸ்திவாரமாகிய ஒரு கருத்தாம். நம் நாட்டில் இவ்வாறு கொள்கைகளைத் தேர்ந்து எடுத்துக்கொள்ளும் சக்தி வாய்ந்த மனிதர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் கொள்கைகளை அவாவோடு மனத்தால் கிரகித்தல் வேறு, அவற்றின்படி நடத்தல் வேறு. யாதேனும் ஒரு கொள்கையை ஒருவன் அங்கீகரித்துக்கொண்டு அதன்படி நடக்க முடியாதவனாய் இருந்தால், அவனும் ஜீவப்பிரேதந்தான்.

இதிலிருந்து, 'கொள்கையற்ற மானிடப் பதர்கள், கொள்கையிருந்தும் அதன்படி நடக்கவியலாத மானிடப் பதர்கள்' என்ற இரண்டு ஜாதிகள் உண்டென்று ஏற்படுகிறது. இவ்விரண்டு வகுப்பாரால் ஜன சமூகத்திற்கு அவ்வளவு கெடுதல் நேரிடாது. அவர்கள் இருக்கும் வரை சோற்றிற்குக் கேடாவும் நிலத்திற்குப் பளுவாகவும் இருந்து போவார்கள்.

ஆனால், தாங்கள் வசிக்கும் நாட்டிற்குக் குடலைத் தின்னும் அரிபூச்சிகள் போல ஒரு வகுப்பார் தலையெடுத்

திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தலைநிறைய திவ்விய மான கொள்கைகளைஅடைத்துவைத்துக்கொண்டிருக்கிறார் கள். அக் கொள்கைகளை விற்றும் ஜீவிக்கிறார்கள். பொதுப் பீடங்களினின்றும் உலகறிய அவற்றை ஸாங்கோபாங்க மாகப் போதிக்கிறார்கள். பொது ஜனங்கள் அக் கொள்கை களைக் கேட்டுப் பிரமித்து, 'இவ்வரிய கருத்துக்களுக்கு ஆலயமாக விருக்கும் இவர்கள் மனமே மனம், இம் மஹான்கள் 'அவதார புருஷர்களோ' என்று தம்மைப் போற்றும்பொழுது, அப் பூஜிதையையும் ஏற்றுக்கொண்டு மகிழ்ந்து வெறியடைகிறார்கள். ஆனால் அவர்களைப் பின் தொடர்ந்து அவர்களின் வீட்டிற்குச் செல்வோமானால், அங்கே எலும்புந் தோலும் குப்பையும் சகலவிதமான அழுக்குகளும் நிறைந்து கிடக்கின்றன. இம் மஹான் களின் செய்கைகள் அவர் கொண்ட கொள்கைகளுக்கு முற்றிலும் விரோதமாய் இருக்கின்றன. 'தட்டிச்சொல்ல ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டம்' என்ற படி பேசிவிட்டு, ஆபத்து வந்த காலத்தில் 'நான் சொன்ன படி நீங்கள் செய்யவேண்டும். நான் செய்கிறபடி நீங்கள் செய்யப்படாது' என்று ஜனங்களை ஏமாற்றுகிறார்கள். அதிலும் கேடாய், தங்களுடைய கொள்கைகளை ஜால வித்தைக்காரன் போல் மாற்றிவிடுகிறார்கள்.

இம் மஹா பாதகர்களால் நம் தேசத்திற்கு விளையும் தீமைகள் கணக்கில அடங்கா. ஏனெனில் இவர்களைப் பார்த்து அநேகம் அறிவில்லாத மனிதர்கள் செல்லக் கூடாத மார்க்கங்களிற் சென்றுவிடுகிறார்கள். நமக்குக் கொள்கை வேண்டுமேயல்லாது ஆள் வேண்டியது அவசிய மில்லை. ஒருவன் தான் பறையறையும் நல்லதோர் கொள் கையை விட்டுவிட்டு விலகி நடப்பானானால் அப்பொழுது நாம் அவனைக் கொண்டாடுவது மதியீனம். அவனை எவ் வகையாலும் நாம் இகழ்ச்சி செய்தே நடத்த வேண்டும்.

தான் குடிக்கும் காப்பிக்காகவும், தான் தின்னும் சோற்றிற்காகவும், தான் உடுத்தும் ஆடைக்காகவும் ஒருவன் தன்னுடைய அருமையான கொள்கைகளைக் கைவிடுவானுனல், அவனை மானிடரில் எந்த வகுப்பில் நாம் சேர்க்கலாம்? அவனிலும் பதரான மனிதன் ஒருவன் இருக்கமுயாது. அவன் சம்பந்தப்பட்டமட்டில், கொள்கைக்கும் செய்துக்கைக்கும் வெகு தூரம் உண்டு.

பாரத தேசத்தாராகிய நாம் சகலவிதமான சுதந்திரங்களையும் இழந்து எங்கேயோ யிருந்து வந்த ஒரு வெள்ளை நிற ஜாதியாருக்கு அடிமைப்பட்டிருக்கிறேம். நாம் முப்பது கோடி ஜனங்கள். அவர் இரண்டு லக்ஷங்கூட இல்லை. உலகத்தோர் எல்லோரும் இதை எங்கும் எக்காலத்திலும் இல்லாத அற்புதம் என்று நினைக்கிறுர்கள். இதனுல் உலகத்திலுள்ள மற்ற ஜாதியார்கள் நம்மை (முப்பது கோடி அல்லது மூவாயிரம் லக்ஷம் ஜனங்களையும்) அடக்கி ஆளும் ஆங்கிலேயர்களை மகாவீரசூரர்களென்றும், ஒப்பற்ற பலிஷ்டர்களென்றும் ஒப்புக்கொள்வதில்லை. ஆனுல் அதற்குப் பதிலாய், நம்மிடத்தில் அவர்களுக்கு அவ்வளவுக்கவ்வளவு வெறுப்பும் மதிப்புக்குறைவும் ஏற்பட்டுவிடுகிறது. இந்தியன் எங்கே போனுலும் நிந்திக்கப்படுகிறுன். யாரும் நம்மீது காறித்துப்புகிறுர்கள். உலகத்தோர் 'இந்த இந்தியர் என்ற ஆடுகளை ஆங்கிலேயர் மட்டுமல்ல, வேறே எந்த ஜாதியாரும் இலேசாக ஆளலாம்' என்று நம்பியிருக்கிறுர்கள். அப்படியிருக்க, நாம் மிகுந்த அந்தஸ்துக்களைப் பாராட்டினுல் அது ஒவ்வா ஒழுக்கம். நாம் சுயாதீனம் அடைந்தபிறகு மீசை முறுக்கலாம். இப்பொழுது வீண் டம்பங்களைச் செய்தால் எல்லோரும் நகைப்பார்கள்.

நம்மில் ஒவ்வொரு புருஷனும் ஒவ்வொரு ஸ்திரீயும் ஏற்றுக்கொள்ள வேண்டிய கொள்கை ஒன்றேதான் உண்டு.

அதாவது, நம்முடைய அருமை நாட்டில் சுயாதீனத்தை நாட்டிப் பிறர் அஞ்சி மதிக்கும்படியாக நாம் ஜீவிக்கவேண்டியது. இந்தக் கொள்கைப்படி நடக்க என்ன இடையூறுகள் வந்தாலும் இவற்றை நாம் விலக்கிக் கொண்டு போக வேண்டும். இந்தக் கொள்கையைக் கடைப்பிடித்து நடப்பதில் எவ்விதமான சுகத்தையும், மரியாதையையும் அந்தஸ்தையும் இச்சிக்கப்படாது. வீடுவாசல், மனைவி மக்கள், எல்லோரையும் இழக்கும்படி நேர்ந்தாலும் இழந்தே தீர வேண்டும்.

> மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
> எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
> அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
> கருமமே கண்ணா யினர்.

என்ற மூதுரைக்கு இணங்கியே நாம் நடக்க வேண்டும். இவ்வாறு நடக்க முடியாதவர் தாம் பேடியென்று ஒப்புக்கொண்டு பின்னடைய வேண்டும். நானும் ஸ்வராஜ்யக் கொள்கையுள்ளவன் என்று முன் வந்து நிற்க வேண்டாம். சுதந்திரக் கொள்கையை உடையவன் தன் ஆத்மாவைத் தவிர்த்து மற்ற எல்லாவற்றையும் இழந்து விடச் சித்தமாயிருக்க வேண்டும். ஹே பரதா! சோம்பலுள்ளவனுக்கு எவ்விதக் கொள்கையும் ஏற்காது. மழையென்றும், வெயிலென்றும், காற்றென்றும் பசியென்றும் தாகமென்றும், நித்திரையென்றும் பாராட்டாதே. இந்தச் சரீரமே அநித்தியம் என்றால், அதையொட்டிய அவஸ்தைகள் நித்தியமாகுமா? இந்திரிய அவஸ்தைகளுக்கு அஞ்சியாவது இந்திரிய சுகங்களைக் கோரியாவது தேசிய தர்மத்தைக் கைவிடாதே. பிரம்மமே நித்தியம். சத்தியமே ஜெயம். நீயும் அடிமைத் தனத்திலிருந்து நீங்கவேண்டும். உன்னுடையே ஜய பேரிகையை அடித்துக் கொண்டு உலகத்தில் எந்தந்த பாகத்தில் யார் யார் அடிமைப்பட்

டிருக்கிறார்களோ அவரவரை விடுவிக்க வேண்டும். உன் செயலால் பாரத மாதா முன் போல் உலகத்திற்குத் திலகமாய் ஜ்வலிக்க வேண்டும். இந்தக் கொள்கைகளைக் கைவிடாதே, கைவிடாதே, கைவிடாதே. முக்காலும் சொன்னோம்.

வந்தேமாதரம்.

## 44. லோக குரு

சென்ற ஜூன் மாதம் பன்னிரண்டாம் தேதி ஜப்பான் ராஜதானியாகிய டோக்கியோ நகரத்தில் ஸாம்ராஜ்ய ஸர்வகலா சங்கத்தாரின் முன்பு ரவீந்திர நாதர் செய்த பிரசங்கம் பூமண்டலத்தின் சரித்திரத்திலே ஒரு புதிய நெறியைக் காட்டுவது. விவேகாநந்தர் செய்து விட்டுப்போன தொழிலை வளர்ப்போரில் ரவீந்திரர் ஒருவர்.

விவேகாநந்தர் ஆத்மாவின் பயிற்சியை மாத்திரம் காட்டினார். ரவீந்திரர், 'உலக வாழ்க்கையும், உண்மையான கவிதையும், ஆத்ம ஞானமும் ஒரே தர்மத்தில் நிற்பன' என்பதை வெளி நாடுகளுக்குச் சொல்லும் பொருட்டாக பாரதமாதாவினால் அனுப்பப்பட்டிருக்கிறார்.

'பாரத தேசமே லோக குரு' என்ற செய்தி ஏற்கெனவே பல ஜப்பானியப் பண்டிதருக்குத் தெரியும். எனினும், நம்மவர் ஒருவர் நேரே போய் அந்த ஸ்தானத்தை நிலை நிறுத்துவதற்கு இதுவரை அவகாசப்படாமலிருந்தது. வங்காளத்து மஹா கவியாகிய ரவீந்திரநாத தாகூர் போய் அந்தக் குறையைத் தீர்த்து வைத்தார். இந்தத் தொழிலுக்கு அவர் மிகவும் தகுதியுடையவர். அவருடைய கவிதையின் கீர்த்தி பூமண்டல முழுதும் ஏற்கெனவே பரவி

யிருக்கிறது. உலகத்து மஹா கவிகளின் தொகையில் அவரைச் சேர்த்தாய் விட்டது.

'கீதாஞ்சலி' முதலாவதாக, அவர் இங்கிலீஷ் பாஷையில் மொழிபெயர்த்தது; வெளியிட்டிருக்கும் நூல்கள் மிகவும் சிறியன; பார காவியங்களல்ல, பெரிய நாடகங்களல்ல; தனிப் பாடல்கள் சில காண்பித்தார். உலகம் வியப்படைந்தது. நல்வயிர மணிகள் பத்துப் பன்னிரண்டு விற்ருல் லக்ஷக்கணக்கான பணம் சேர்ந்துவிடாதோ? தெய்வீகக் கதையிலே பத்துப்பக்கம் காட்டினுல் உலகத்துப் புலவரெல்லாம் வசப்படமாட்டாரோ!

கோபோ நகரத்தில் உயேனே என்றதோர் பூஞ்சோலையிருக்கிறது, அதனிடையே அழகான பௌத்தக் கோயில் ஒன்று இருக்கிறது. அந்தச் சோலையிலே குளிர்ந்த மரங்களின் நிழலில் பல ஜப்பானிய வித்வான்கள் கூடி அவருக்கு நல்வரவுப் பத்திரிகை படித்தார்கள். ஜப்பானிய ஸாம்ராஜ்யத்தில் முதல் மந்திரியாகிய ஒகூமாப் பிரபு என்பவரும் வியாபார மந்திரியாகிய ஸ்ரீமான் கோனேவும், கல்வி மந்திரியாகிய பண்டித தகாத்தாவும் வேறு பல பெரிய கார்யஸ்தர்களும் அந்த சபைக்கு வந்திருந்தார்கள். நல்வரவுப் பத்திரிகை வாசித்து முடிந்தவுடனே, ரவீந்திர நாதர் பின் வருமாறு வங்காளி பாஷையில் பேசலானுர் :— "எனக்கு ஜப்பானிய பாஷை தெரியாது. இங்கிலீஷ் தெரியும்; ஆனுல் அது உங்களுடைய பாஷையன்று. உங்களிடம் அந்த பாஷை பேச எனக்கு ஸம்மதமில்லை. மேலும், எனக்கே அது இரவல் பாஷை; ஆனபடியால் ஸரளமாக வராது. ஆதலால் வங்காளியிலே உங்களிடம் பேசுகிறேன்" என்ருர். பண்டித கிமுரா என்ற ஜப்பானிய வித்வாஞெருவர் வங்கத்து மொழி தெரிந்தவராதலால் ரவீந்திர நாதரின் வார்த்தைகளை சபை

யாருக்கு ஜப்பானிய பாஷையில் மொழிபெயர்த்துச் சொன்னார்.

பின்பு, ரவீந்திரநாதர் பேசுகிறார் :—"கோபோ நகரத்தில் வந்து இறங்கியவுடனே எனக்கு ஜப்பான் விஷயத்தில் அதிருப்தியுண்டாய் விட்டது. எதைப் பார்த்தாலும் மேற்கு தேசங்களின் மாதிரியாகவே யிருக்கிறது. ஜப்பானியர் தமது ஸ்வயமான தர்ம ஸம்பத்தை இழந்துவிடலாகாது" என்றார். இந்தக் கருத்தின் விவரத்தைப் பின்னே நாம் படிக்கப் போகிற டோக்கியோ ஸர்வகலா ஸங்க உபந்யாஸத்திலே விஸ்தாரமாகக் காணலாம். அப்போது மஹா மேதாவியாகிய முதல்மந்திரி ஒகூமா எழுந்திருந்து ரவீந்திரருக்கு நன்றி கூறினார். ஸ்ரீமான் ஒகூமா கூறியது: — எனக்கு இங்கிலீஷ் நேரே தெரியாது. இவர் வங்காளி பாஷை பேசியதை நான் இங்கிலீஷ் என்று நினைத்தேன். நல்ல தருணத்திலே இவர் நமது தேசத்துக்கு வந்தார். நியாயமான எச்சரிக்கை கொடுத்தார். நமது தேசத்தின் சித்தநிலை இப்போது இரண்டு பட்ட பாதைகளின் முன்பு வந்திருக்கிறது. நமதறிவு எந்த வழியிலே திரும்புதல் தகும் என்பதை இப்போது நிச்சயிக்க வேண்டும். இத் தருணத்தில் நமக்கு நல்வழி காட்டும் பொருட்டாக இந்த மஹான் தோன்றினார்" என்றார்.

டோக்கியோ உபந்யாஸத்தைப் பற்றி ஒரு தனிப்பகுதி எழுத வேண்டும்.

அதன் ஸாராம்சம்:—'உறங்கின ஆசியாவை ஜப்பான் எழுப்பிவிட்டது. அதன் பொருட்டு நாமெல்லோரும் ஜப்பானுக்கு நன்றி செலுத்த வேண்டும். உறங்கும் பூமண்டலத்தை பாரத நாடு தலைமையாக ஆசியா எழுப்பி விடப் போகிறது.' இந்தக் கருத்தை ஜப்பானிய பண்டிதர்

அந்நாட்டுப் பத்திரிகைகளில் அங்கீகாரம் செய்துகொண்டு மிகவும் அழகாக நன்றி வார்த்தைகள் சொல்லியிருக்கிறார்கள்.

டோக்யோ ஸாம்ராஜ்ய கலா சங்கத்தில் பாரத கவி ரவீந்திரர் செய்த ஆச்சரியமான பிரசங்கத்திலே அவர் சொன்னதாவது :— "முதலாவது, உங்களுக்கு நன்றி சொல்லுகிறேன். ஆசியாக் கண்டத்தில் பிறந்த எல்லா ஜனங்களும் உங்களுக்கு நன்றி செலுத்தக் கடன்பட்டிருக்கிறோம். எல்லா பந்தங்களைக் காட்டிலும் இழிவான பந்தம் உள்ளச் சோர்வு. இதனால் கட்டுண்டவர் தந்நம்பிக்கையில்லாதவர். கேட்டீர்களா, சிலர் சொல்லுவதை:— 'ஆசியாக் கண்டம் பழமையிருளில் மூழ்கிக் கிடக்கிறது; அதன் முகம் பின்னே முதுகுப் புறமாகத் திருப்பி வைக்கப் பட்டிருக்கிறது' என்று. இப்படி வார்த்தை சொல்வோரின் பேச்சை நாமும் நம்பினோம். சிலர் இதையே ஒரு தற்புகழ்ச்சி யாக்கி 'அப்படித்தான்; நாங்கள் பழமையிலேதானிருப்போம். அ து தா ன் எங்களுக்குப் பெருமை' என்றார்கள்.

"விஷயங்கள் இந்த ஸ்திதியில் இருக்கும் பொழுது நாமெல்லாம் ஒரு மோஹ நித்திரையில் வீழ்ந்திருந்த காலத்திலே, ஜப்பான் தனது கனவு நிலைமை நீங்கி எழுந்தது; நடக்கத் தொடங்கிற்று; பூதாகாரமான அடியெடுத்து வைத்தது; நிகழ் காலத்தை அதன் முடியிலே போய்ப்பற்றிக்கொண்டது. எல்லோரும் தட்டி யெழுப்புண்டோம். 'பூமியின் மேலே, சில எல்லைக்குள்ளிருக்கும் சில தேசத்தாருக்கு மாத்திரம் முன்னேற்றம் வசப்படாது என்ற மாயை போய்விட்டது. ஆசியாக் கண்டத்தில் பெரிய ராஜ்யங்கள் ஸ்தாபனம் செய்திருக்கிறோம். பெரிய சாஸ்திரம் கலை, காரியம்—எல்லாம் இங்கே தழைத்தன

உலகத்திலுள்ள பெரிய மதங்களெல்லாம் இங்கே பிறந்தன. 'இந்த மனிதனுடைய சுபாவமே மதிச் சோர்வும் வளர்ச்சிக் குறையும் உண்டாகும்' என்று சந்தேகப் பட வேண்டாம். பல நூற்றுண்டு நாம் நாகரீக விளக்கைத் தூக்கி நிறுத்திஞேம். அப்போது மேற்குலகம் இருளில் தூங்கிக் கொண்டிருந்தது. நமக்குப் புத்தியுண்டு. நம்முடைய புத்தி ஒரு நத்தைப் பூச்சியில்லே. நம்முடைய கண் மாலைக் கண்ணில்லை.

ஆசியா ஜப்பானுக்குக் கொடுத்தது அந்தப் பயிற்சி.

ஜப்பான் இக்காலத்திலே புதியவளும் பழையவளுமாக விளங்குகிருள். குல உரிமையால் கீழ்த்திசையில் நமது பழைய பயிற்சி அவளுக்குக் கிடைத்திருக்கிறது 'மெய்யான செல்வமும் மெய்யான வலிமையும் வேண்டுமாஞல் ஆத்மாவுக்குள்ளே நோக்கத்தைச் செலுத்த வேண்டும்' என்று கற்பித்த பயிற்சி, ஆபத்து வரும்போது பிரார்த்தனை தவருதபடி காப்பாற்றும் பயிற்சி, மரணத்தை இகழச் சொல்லிய பயிற்சி, உடன் வாழும் மனிதனுக்கு நாம் எண்ணற்ற கடமைகள் செலுத்த வேண்டும் என்று தெளிவித்த பயிற்சி, 'கண்ட வஸ்துக்களிலே, அகண்ட வஸ்துவைப் பார்' என்று காட்டிய பயிற்சி, 'இவ்வுலகம் ஒரு மூடயந்திர மன்று. இதற்குள்ளே தெய்வ மிருக்கிறது. இது யதேச்சையாக நிற்பதன்று; கண்ணுக்கெட்டாத தொலைவில் வானத்திலிருக்கவில்லை; இங்கே இருக்கிறது அந்தத் தெய்வம்' இந்த ஞானத்தை உயர்த்திய பயிற்சி. அநாதியாகிய கிழக்கு திசையில் புதிய ஜப்பான் தாமரைப் பூவைப்போல் எளிது தோன்றிவிட்டாள். பழைய மூடாசாரங்களை ஜப்பான் உதறித் தள்ளி விட்டாள்; சோம்பர் மனதிலே தோன்றிய வீண் பொய்களை மறந்து விட்டாள்; நவீன யுகத்தின் ஸம்மானங்களை நிர்ப்பயமாகக் கேட்டாள்,

நவீன நாகரீகப் பொறுப்புகளைத் தீவிரமாகவும் தகுதியாக வும் தரித்து வருகிருள்.

"ஜப்பான் ஆசியாவுக்குத் தைரியம் கொடுத்தது. 'உள்ளே உயிர் இருக்கிறது. நமக்குள் வலிமையிருக்கிறது. மேல்தோல்தான் காய்ந்து போயிருக்கிறது. அதைக் கழற்றியெறிந்து விட்டு, அதற்கு அப்பால், ஓடுகிற கால நதியிலே முழுகி ஸ்நானத்தைப் பண்ணியெழ வேண்டும். தற்காலத்துக்குப்பயந்து, முற்காலத்திலே போய்த் தலையை நுழைத்துக் கொள்ளுவோன் உயிரிருந்த போதிலும் செத்த வனுக்கு ஸமானமே." இது ஜப்பான் சொல்லிக்கொடுத்த விஷயம். பழைய விதையிலே உயிர் ஸத்து நீங்கவில்லை, புதிய காலமாகிய வயலிலே நடவேண்டும். இது ஜப்பான் சொல்லிக் கொடுத்த விஷயம்.

"ஜப்பான் பிறரைப் 'போல் வெளியபிநயம் காட்டி இந்தப் பெரிய ஸ்தானத்தை அடையவில்லை. பிறரைப் பார்த்து நாமும் அவர்களைப் போல் ஆகவேண்டுமென்று பாவனைகள் காட்டினுல், வலிமையுண்டாகாது. பிறரிடம் சாஸ்திர ஞானம் வாங்கிக் கொள்ளுதல் வெளியபிநயம் அன்று. பிறர் கல்வியை நாம் வாங்கலாம்; கோணல்களை வாங்கக்கூடாது. தேசத்தாருக்கென்று பிரிவுபட்ட தனித் தனி குணங்கள் பலவுண்டு. எல்லா தேசத்தாருக்கும் பொதுவான மானுஷீக குணங்கள் பலவுண்டு. பிறரிடம் ஒன்றை வாங்கிக் கொள்ளும் போது, ஸாவதானமாக வாங்கிக் கொள்ளவேண்டும்."

ரவீந்திர கவியின் உபந்யாஸத்தை ஜப்பான் தேசத் தார் மிகவும் பக்தியுடன் கொண்டாடுகிருர்கள். பத்திரி கைகள் உயர்ந்த புகழ்ச்சி பேசுகின்றன. நல்ல காரியம் செய்தார். இப்படியே இங்கிலாந்து முதலிய எல்லா தேசங் களிலும் போய் பாரத தேசத்தின் அறிவு மஹிமையை

மற்ெருரு முறை விளக்கி வரும்படி புறப்பட்டிருக்கிருர் போலும்.

'டோக்கியோ மானிச்சி' என்ற ஜப்பானியப் பத்திரிகை சொல்லுகிறது :—"அறிவில் ஜப்பான் பாரத தேசத்திற்குக் கடன் பட்டிருக்கிறது. ஜப்பான் நாகரீகம் பெருத காலத்தில், பாரத தேசம் அதில் உயர்ந்திருந்தது. பாரத ஞானம் பூ மண்டலம் முழுவதையும் தீண்டியிருக் கின்றது. 'ப்லாத்தோ'வுக்கு உபதேசம் பாரத தேசத்தி லிருந்து கிடைத்தது. ஸ்வேதன் போர்க், ஷாபன் ஹோவர் என்ற பிற்காலத்து ஞானிகளும் பாரத தேசத்தின் அறிவுக்கு வசப்பட்டார். பாரத நாகரீகம் நமக்குச் சீனு, கொரியா வழியாக வந்தது. நாம் இந்தியாவின் கடனே திரும்பக்கொடுக்க வேண்டும். ரவீந்திரநாதரை நாம் மிகவும் கௌரவப்படுத்த வேண்டும்."

"யோர்த்ரை" என்ற ஜப்பானியப் பத்திரிகை சொல்லு கிறது :—"உலக வாழ்க்கையும் கவிதையும் சுதி சேர்ந்து நிற்க வேண்டும் என்பது ரவீந்திரர் கொள்கை. ஜப்பான் பாரத நாட்டுக்கு மிகவும் அறிவுக் கடன் பட்டிருக்கிறது."

இவ்வாறு ரவீந்திரருடைய பேச்சு வரும்போது, ஜப்பானியப் பத்திரிகைகள் தமது நாடு பாரத பூமிக்கு அறிவுக் கடன்பட்டிருப்பதை நினைத்துக் கொள்ளுகின்றன. ரவீந்திரருடைய கீர்த்தி உலகத்தில் அதிகமாகப் பரவி ஏறக் குறைய நான்கு வருஷங்களாகவில்லை. இந்த நான்கு வருஷங்களுக்குள் ஜப்பான் தேசத்தில் ஸமஸ்கிருத இலக் கண புஸ்தகங்கள் எப்போதைக் காட்டிலும் அதிகமாக விலையாகின்றனவாம். 'பாரத தேசமே லோக குரு' என்பதை உலகத்தார் அங்கீகாரம் செய்வார்கள். நாம் போய் நினைப்பூட்ட வேண்டும்.

பாரத பூமி உலகத்தாருக்கு எவ்விதமான ஞானத்தைக் கொடுத்துப் புகழைக் கொள்ளுமென்பதை விளக்குவதற்கு முன்பாக, சாஸ்திர (ஸயின்ஸ்) வார்த்தை ஓரிரண்டு சொல்லி முடித்து விடுகிறேன். 'செடியின் நாடி மண்டலம் மனிதனுடைய நாடி மண்டலத்தைப் போலவே உணர்ச்சித்தொழில் செய்கிறது' என்பதை உலகத்தில் சாஸ்திர நிரூபணத்தால் ஸ்தாபனம் செய்தவர் நமது ஜகதீச சந்திர வஸு. உலோகங்களிலும் இவர் பல புதிய சோதனைகள் செய்திருக்கிறார். ஒளி நூலில் மஹாவித்வான். தந்தியில்லாத தூரபாஷைக் கருவியை 'மார்க்கோனி' பண்டிதர் உலகத்துக்கு வழக்கப்படுத்து முன்பே, ஜகதீச சந்திரர் அந்த விஷயத்தைப் பற்றி துல்லியமான ஆராய்ச்சிகள் செய்து முடித்திருந்தார். செடிகளுடைய ப்ராணனில் நாடியுணர்ச்சி யெங்ஙனமெல்லாம் தொழில் செய்கிறது என்பதைக் கண்டுபிடித்ததே இவர் மனித சாஸ்திரத்துக்கு இதுவரை செய்திருக்கும் உபகாரங்களில் பெரிது. இப்போது சில வருஷங்களாக ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமுள்ள பண்டிதக் கூட்டத்தார் ஜகதீச வஸுவினிடம் மிகுந்த மதிப்புப் பாராட்டி வருகின்றனர்; நல்ல புகழ்ச்சி கூறுகின்றனர். நவீன சாஸ்திர ஆராய்ச்சிக்கு மிகவும் நுட்பமான கருவிகள் வேண்டும். ஜகதீச வஸுவின் ஆராய்ச்சிக் கருவிகள் கல்கத்தாவில் நமது தேசத் தொழிலாளிகளாலே செய்யப்படுவன. ஐரோப்பிய ராஜதானிகளிலே இத்தனை நேர்த்தியாக அந்தக் கருவிகளைச் செய்யத் தக்க தொழிலாளிகள் இல்லை. ஆகையால் அங்குள்ள பண்டிதர்கள் புதிய வழியில் செடியாராய்ச்சிக்கு வேண்டிய கருவிகளையெல்லாம் கல்கத்தாவிலிருந்து வரவழைத்துக் கொள்ளுகிறார்கள்.

சாஸ்திரம் பெரிது. சாஸ்திரம் வலியது. அஷ்டமஹா சித்திகளும் சாஸ்திரத்தினால் ஒரு வேளை மனிதனுக்கு வசப்

படலாம். பூர்வ காலத்தில் பலவகைக் கணித சாஸ்திரங் களும் இயற்கை நூல்களும் பாரத நாட்டிலேதான் பிறந்த பின்பு உலகத்தில் பரவியிருப்பதாகச் சரித்திர ஆராய்ச்சி யிலே தெரிகிறது. இப்போது ''ஸயின்ஸ்'' பயிற்சியில் இவ்வளவு தீவிரமாக மேன்மை பெற்று வருகிறோம்; காலத் கிரமத்தில் தலைமை பெறுவோம்.

இனிமேல், கதையைச் சுருக்கிவிட வேண்டும்; வருங் காலத்தில் உலகத்துக்கு பாரத தேசம் என்ன பாடம் கற்பிக்கும்? எதனால் இந்நாடு 'லோக குரு' ஆகும்? உலகத் திற்கு நாம் கற்றுக் கொடுக்கப்போவது கர்மயோகம். கடமையைச் செய்து, தவறுதபடி செய்து இன்பத் தோடிருக்க வழி. எப்படி? யோகமே வழி. ''யோகமாவது செய்கைத்திறமை'' என்று பகவான் கீதையிலே சொல்லுகிறார். பூமண்டலத்துக்கு யோகம் நாட்டுவோம்.

சென்னைக் கிருஸ்துவ கலாசாலையில் டாக்டர் மில்லர் என்றொரு பாதிரியிருந்தார். அவர் நல்ல புத்திசாலி என்று பெயரெடுத்தவர். அவர் ஹிந்து மதத்தைப் பற்றிப் பேசும் போது, கடவுளின் அந்தர்யாமித் தன்மையை மற்றெல்லா மதங்களைக் காட்டிலும் ஹிந்து மதத்திலேதான் தெளி வாகக் காட்டியிருக்கிறார்களென்று சொல்லியிருக்கிறார். சாதாரணப் பாதிரி. கொஞ்சம் புத்திசாலியாகையால் இதைத் தெரிந்து கொண்டார். கடவுள் சர்வாந்தர்யாமி என்பது எல்லா மதங்களிலுமுண்டு. ஆனால் 'இங்கேதான் அதைத் தெளிவாகச் சொல்லுகிறோம். பிற மதங்களில் தெளிவில்லை.

'அந்தர்யாமி'—'உள்ளே செல்வோன்.' 'உள்ளே நிற்போன்,' 'உள்ளே செல்வோன்' என்பது தாதுப் பொருள். 'உள்ளே நிற்போன்' என்பது வழக்கப் பொருள்.

''தெய்வம் எதற்குள்ளேயும் நிற்கிறது'' என்று சாதாரணமாக எல்லோரும் சொல்லுகிறார்கள். இதன் அர்த்தத்தை அவர்கள் நன்றாக மதியினாலே பற்றிக் கொள்ளவில்லை. ''தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான்.''

ஆம், அதன் பொருள் முழுவதையும் கண்டாயா சாத்தன் எழுதுகிறான், கொற்றன் எழுதச் சொல்லுகிறான். எழுதுவோன், எழுதுவிப்போன்—இரண்டும் தெய்வம். பன்றி சாகிறது; பன்றியாக இருந்து சாவது தெய்வம், 'எதினிலும் உள்ளே நிரம்பிக் கிடக்கிறது' என்றால், செய்கையெல்லாம் அதனுடையது என்று அர்த்தம்.

''இயற்கையின் குணங்களால் செய்கையெல்லாம் நடப்பன. அகங்காரங் கொண்ட மூடன் 'நான் செய்கிறேன்' என்று நினைத்துக் கொள்ளுகிறான்'' என்று பகவத் கீதையிலே பகவான் சொல்லுகிறான். செய்கைகள் எல்லாம் பரமாத்மாவின் செய்கைகள். 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது.' 'என் செயலாவது யாதொன்றுமில்லை.'

நமக்குப் பொறுப்பில்லை, தொல்லையில்லை, செய்கையில்லை; கடமை மாத்திரம் உண்டு.

'கடமையில் உனக்கு அதிகாரம், பயனிலே இல்லை' என்பது கீதை. 'செய்கையில்லாது நீங்கிவிடுவது' என்றால், சோம்பேறியாய் விடுதல் என்று அர்த்தமில்லை. பகவத் கீதை மூன்றாம் அத்தியாயத்தை ஒவ்வொரு ஆர்யனும் தினம் மூன்று வேளை வாசிக்க வேண்டும்.

முதலாவது விஷயம்:— 'ஒருவிதமான செய்கையுமில்லாமல் சும்மாயிருப்பது இவ்வுலகத்தில் எப்பொழுதும் சாத்தியப்படாது. நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்

உன்னை எப்போதும் பிரகிருதி செய்கையிலே புகுத்தி ஆட்டிக்கொண்டிருக்கிறான். உன்னிஷ்டப்படி யெல்லாம் நடக்கவில்லை. நீ இஷ்டப்படுவதே மழை பெய்வதைப் போல் இயற்கையிலேயே விளையும் செய்கை. சித்தமே ஜடம்.'

இரண்டாவது விஷயம்:—'நான் பிரிவில்லை என்று கண்டு' தெய்வமே உள்ளதாகையால் அதற்கு சேவகமாக உலகத் தொழில்களை பிழையில்லாமல் செய்து கொண்டு வரவேண்டும். கடமையைத் தவிருவோன் விடுதலை பெற்றவன் அன்று. விடுதலையின் தலைமேலே ஒரு கடமை நிற்கிறது. தெய்வத்துக்கே கடமையுண்டு. பகவான் கர்மயோகி ஸந்யாஸம் அவசியமில்லை. பெண்டு பிள்ளை கள் பொய்யில்லை. மற்ற மனிதர்கள் மண் கட்டிகள் அல்லர். அவர்களுக்கு நாம் செலுத்தவேண்டிய கடமை கள் உண்டு.'

'கடமை செய்யாதவன் வயிறு பிழைப்பதே நடக் காது' என்று கிருஷ்ணன் அழுத்திச் சொல்லுகிறார்.

'இவ்வுலகத்துச் செய்கைகளுக்கு நாம் பொறுப்பில்லை, என்று எல்லாச் செயல்களையும் ஈசனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டோர் சோம்பேறிகளாய் பிறருக்கு எவ்விதப் பயனும் இல்லாமல் வெறுமே பிறர் போடும் தண்டச் சோறு தின்று கொண்டிருக்கும் துறவு நிலையிலே போய்ச் சேரும்படி நேரிடும் என்று சில புத்திமான்கள் பயப்படு கிறார்கள். 'அப்படிப் பயப்பட இடம் இல்லை' என்பதை வற்புறுத்திக் காட்டும் பொருட்டாகவே, நான் இந்த வார்த்தையை இத்தனை விஸ்தாரப்படுத்துகிறேன்.

'தெய்வமே துணை' என்று இருப்போர் ஓயாமல் தொழில் செய்து கொண்டிருப்பார்கள். தெய்வ பக்தி

உண்மையானல், பரோபகாரம் அருகே யிருக்கும். பரோபகாரம் இல்லாத இடத்தில், தெய்வபக்தி வேஷத்தைத் தவிர வேறென்றுமில்லை.

## 45. அழுதபிள்ளை பால்குடிக்கும்

பாரத தேசத்தாரில் லட்ச லட்சமான ஜனங்கள் இந்தப் போரில் மடிந்து ஆங்கிலேயருக்கு உதவிபுரிந்தோம். கோடானுகோடி திரவியத்தைக் கொடுத்து வருகிறோம். இன்னும் சேனையில் ஆள் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே, நாம் வாய் திறந்து கேட்டால், இங்கிலாந்து நமக்கு இப்போது சுயராஜ்யம் கொடுக்கும். நம்மை ஏமாற்ருது. இந்தச் சமயத்தில், நாம் இத்தனை உதவி செய்யும்போது, காங்கிரஸ் முஸ்லீம் சபையார் சொல்வதை நாம் சரி என்று நினைக்கவில்லை. சண்டை முடியுமுன்பாக இப்பொழுதே கைமேலே சுயராஜ்யம் வேண்டும் என்று நம்மவர் கேட்க வேண்டும் என்று நான் சொல்லுகிறேன். சண்டை முடிந்த பிறகு சுயராஜ்யம் போதுமென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தால், அது கிடைப்பது அரிதாகும். இப்பொழுதே ஏன் கொடுக்கும்படி கேட்கக் கூடாது? அயர்லாந்து தேசத்தில் சண்டை முடியு முன்பாகவே ஸ்வராஜ்யம் கொடுப்பதற்குரிய முறைமைகளைப்பற்றி ஆலோசனை செய்வதற்காக ஒரு சபை நடந்து வருகிறது. அதில் ஸகல கட்சியாரும் சேர்ந்திருக்கிருர்கள். அது போலவே, இந்த தேசத்திற்கும் ஒரு சபை ஏற்படுத்த வேண்டும்; அதில் இங்கிலீஷ் பிரதிநிதிகள் பாதித்தொகை, பாரதப் பிரதிநிதிகள் பாதித்தொகையாக இருந்து நடத்த வேண்டும். அவ்விதமான சபையை மந்திரி மாண்டேகு இந்த தேசத்தில் இருக்கும்போதே நியமிக்க வேண்டு

மென்று நம்மவர் கிராமந்தோறும் சபைகள் கூடி 'கூ! கூ!' என்று பெரிய சப்தம் போடவேண்டும். திராவிடக் கட்சியார் என்றும், இஸ்லாமியக் கட்சியார் என்றும் யாரோ சிலர் செய்யும் பொய் மேளக் கச்சேரியை நாம் இகழ்ந்து, நகைத்து, 'காங்கிரஸ் முஸ்லீம் சங்கங்களே தேசத்துக்குப் பொது' என்பதை ஒரே வார்த்தையாக எங்கும் நிலை நிறுத்த வேண்டும். காங்கிரஸ் முஸ்லீம் சபைகளை எதிர்த்து, நமக்கு சுயராஜ்யம் வேண்டாமென்று சொல்லும் ஸ்வதேச விரோதிகளை அடக்கிவிட்டு, நாம் இப்போதே ஸ்வராஜ்யம் கேட்கும்படி நமது பிரதிநிதிகளாகிய காங்கிரஸ் முஸ்லீம் சபையாரைத் தூண்ட வேண்டும்.

மந்திரி மாண்டேகு சென்னைக்கு வந்திருப்பதால், இந்தச் சத்தம் கிராமங்களில் இடிமுழக்கம் போலவே நடை பெற்று வரவேண்டும்.

ஜனங்களே! உடனே சுயராஜ்ய ஸ்தாபன சபை கூட்டும்படி இரைச்சல் போடுங்கள். அழுத பிள்ளை பால் குடிக்கும்.

## 46. நமது மகமதிய சகோதரர்கள்

*1906 ஜூன் 23*

''ஸத்யமேவ ஜயதே'' இந்தியாவின் வருங்காலப் பெருமைக்கும், சிறப்புக்கும், இத் தேச ஜனங்களில் பெரும்பாலார் ஹிந்துக்கள், மகமதியர் என இரண்டு பகுதிப்பட்டு நிற்பது பெரும் தடையாகவே இருக்கிறதென்பதை ஒளித்து வைத்து பிரயோஜனமில்லை. தென்னிந்திய கிராமாந்திரங்களிலே மகமதியர்களும், ஹிந்துக்களும் தமக்குள்ள வேறு

பாட்டை மறந்து மகமதியர்களும் ஹிந்துஜன சமூகத்தில் ஒரு கிளேயராகவே கருதப்படுகிருர்கள் என்பது வாஸ்தவமென்ற போதிலும், பொதுவாக இம்மாகாணத்திலும்கூட வடஇந்தியாவிலுள்ள முக்கிய நகரங்களில் ஹிந்து, மகமதியர்கள் ஒருவிதமான பரஸ்பர துவேஷம் கொண்டவர்களாகவே இருக்கிருர்கள். இதற்குக் காரணம் மகமதிய ஆட்சியில் ஏற்பட்ட துவேஷமே.

இந்த விரோதங்களே நீக்கி இந்த இரண்டு ஜாதியாருக்குள்ளே சிநேக உணர்ச்சியும், சகோதரப் பான்மையும் ஏற்படுத்துவது இத் தேசாபிமானிகளின் முக்கிய கடமையாகும். ஆனுல், ஒரு நோயைத் தீர்க்க விரும்புவோன் அந்த நோயே இல்லேயென்று பிரமாணம் செய்துவிடுதல் மிகவும் சிறப்பான உபாயமில்லே. ஹிந்து மகமதியருக்குள்ளே விரோதங்களேத் தீர்க்க விரும்புவோர் மேற்படி விரோதங்களே இல்லேயென்று சாதித்து விடுதல் சரியான பாதையாக மாட்டாது. திருஷ்டாந்தமாக கல்கத்தாவிலே நடந்த சிவாஜி உற்சவத்தை எடுத்துக்கொள்வோம். எவ்விதமான ஆபத்திலும் ஹிந்துக்களே விட்டு நீங்காத மகாதேசாபிமானிகளாகிய வியாகத்ஹுஸேன் போன்றவர்கள்கூட அந்த சமயத்திலே சிவாஜி உற்சவத்தினின்றும் விலகி இருந்துவிட்டார்கள். சிவாஜியை தெய்வாம்சமென்றும், மகாத்மாவென்றும் ஹிந்துக்கள் ஸ்தோத்திரம் செய்துகொண்டிருக்கும் போது, அவர் கொலேயாளி என்றும், பாதகர் என்றும் அநேக மகமதியர்கள் "இங்கிலீஷ் மான்" பத்திரிகைகளுக்கு எழுதி இருக்கிருர்கள்.

மேற்கண்டவாறு இருக்கும் நிலேமையை உத்தேசிக்குமிடத்து அநேகர் மனதில் பரதகண்டத்தின் வருங்காலத்தைப்பற்றி பயமேற்படுகின்றது. "கோட்டைக்குள்ளே குத்தும் வெட்டும்" நடக்குமானுல் எதிரிக்கு எப்பொழுதும் சந்தோஷமேயல்லவா? இதற்காக, நம்மவர்கள் பெரும்

பாடுபட்டு ஹிந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் இடையே யுள்ள பகைமையாகிய கழியை கடக்க முயலவேண்டும். அந்தக் கழியிலே இருக்கும் கற்களும், பாறைகளும் எண்ணிறந்தனவையாகும். இதைக் கடக்கும் போது எத்தனையோ ஆபத்துக்களும், துன்பங்களும் நேரிடக்கூடும். ஆனால், விடாமுயற்சி, பொறுமை, தீரத்துவம், கருணை என்னும் சிறந்த மாலுமிகளைத் துணையாகக்கொண்டு நாம் செல்லவேண்டும். நம்மால் கூடியவரை முயற்சிசெய்து விட்டுப் பலனை தெய்வத்திற்கு விட்டுவிடுதலே பொருந்தும். "பசுவைக் கொல்லுவோர்" "பசுவை வணங்குவோர்" ஆகிய இந்த இரண்டு வகுப்பினரும் எத்தனைக் கெத்தனை சீக்கிரமாக நெருங்கத் தொடங்குகிறார்களோ, அத்தனைத் கெத்தனை நலமுண்டாகும். மகமதியர்களும் இந்தப் பெரும் முயற்சியிலே தம்மாலியன்ற அளவு ஒத்து முயலவேண்டு மென்று மிகவும் ஆவலுடன் பிரார்த்தனை செய்து கொள் கின்றோம்.

நன்றி—பாரதி தரிசனம்—முதற் பாகம்.

## 47. பிரிட்டிஷ் அநீதிகளை ப்ரயன் தகர்த்தெறிதல்

1906 ஆகஸ்டு 4

அமெரிக்க ஐக்கிய மாகாணக் குடியரசானது இவ்வுலக ராஜாங்கங்கள் எல்லாவற்றைக் காட்டிலும் நாகரீகம், செல்வம், வன்மை, பெருமையென்ற அனைத்தி லும் சிறப்பு மிகுந்ததாக விளங்குகிறது. இதன் அதிபராக இப்போது மிஸ்டர் ரூஸ்வெல்ட் பரிபாலனம் செய்கிறார். இவருக்கப்பால், இந்தப் பதவிக்கு வரும்படியான நிலைமை

யிலிருப்பவர் மிஸ்டர் ப்ரயனேயாவார். மிஸ்டர் ப்ரயன் உலகத்து ராஜதந்திரிகளுக்குள்ளே விசேஷமான அறிவு வன்மையிலும், ஒழுக்க மாண்பிலும், நீதிப்பற்றிலும் முதல் வகுப்பைச்சேர்ந்தவர். இவர் சொல்லும் வசனங்களை உலகத்து விற்பன்னர்களும் ராஜதந்திரிகளும் மிகுந்த மரியாதையுடனும் சிரத்தையுடனும் கவனிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். இந்த ராஜதந்திரி சிலதினங்கள் முன்பு இந்தியாவில் பலபாகங்களிலே யாத்திரை புரிந்து சென்றார். அப்போது இவர் இந்தியாவில் பிரிட்டிஷார் ஆட்சிபுரியும் மாதிரிகளை நன்றாய்க் கவனித்து தேர்ச்சியடைந்து இருக்கிறார். இவையெல்லாம் பற்றி இவர் தமது தேசத்திலுள்ள "ஸன்" என்னும் பத்திரிகையொன்றுக்கு 4 பத்திகள் வரக் கூடியதாக்ப் பெரிய கடிதமொன்று அனுப்பியிருக்கிறார். அந்த மஹா அற்புதமான உபந்நியாசத்தை அடுத்த முறை நமது பத்திரிகையிலே மொழி பெயர்த்தெழுத உத்தேசித் திருக்கின்றோம். இவர் பிரிட்டிஷ் ஆட்சியின் அநீதி குரூரமாக இருந்திருக்கிறதென்பதை எத்தனையோ பலமான விவகாரங்களால் சித்தாந்தம் செய்கிறார். இந்தியாவின் விவகாரங்களையெல்லாம் அதிநுட்பமாகப் படித்தறிந்து இவர் எழுதியிருக்கும் கடிதத்தை நோக்கும்போது இவருடைய புத்தி பலத்தைப்பற்றி அளவிறந்த ஆச்சரிய முண்டாகிறது. இங்கிலாந்தின் லாபத்தையே மட்டுமின்றி இந்தியாவின் லாபத்தைச் சிறிதேனும் கவனியாமல்ஆளும் அநியாயம்; வாக்குத் தவறுதல்; இந் நாட்டுச் செல்வத்தை கொள்ளையிட்டுப் போதல்; மரண விகிதத்தின் அதிகரிப்பு; தேச வருமானத்தின் பெரும் பங்கு அனாவசியமான சேனைக் காப்பிலே கொண்டு கொட்டுதல்; நீர் பாய்ச்சல், உரம் முதலிய விவசாய நலன்களைக் கவனியாமை; நிலவரியின் கொடுமை; மற்றத் தீர்வைகளின் பாரம்; ஜனங்களுக்குச் சுயாட்சி கொடுக்காமல் இருப்பதற்கு பிரிட்டிஷார்

சொல்லும் போலிக் காரணங்களின் மடமை, ஜனக் கல்வியை ஆதரியாமல் அமுக்கப் பார்க்கும் பாதகச் செய்கை யென்ற எல்லா விஷயங்களேயும் ஒவ்வொன்ருக எடுத்து மகா சாமர்த்தியத்துடன் விவரிக்கிருர். சுதேசிய முயற்சி இந் நாட்டிலே தோன்றிய ஜனங்களெல்லாம் ஒற்றுமைப்பட்டு வரும் மங்களக் குறியைச் சுட்டிப் பேசுகிருர். நமது நாட்டுத் தலைவர்களில் நவுரோஜி, கோகலே, முதலிய பெரியோர்களின் திறமையைப் புகழ்ந்து கூறியிருக்கின்ருர். நம்மவர்கள் ஷெ விஷயங்களேப் பற்றிப் பேசும் போதெல்லாம் ராஜாங்கத்தார் கவனியாமல் ஏதோ குழந்தைகள் பிதற்றுகின்றன என்று சும்மாயிருந்தார்கள். இப்போது ப்ரயன் மோதுகிருரே! இவருடைய உபந்நியாசம் உலகத்திலுள்ள எல்லா முக்கிய பாஷைகளிலும் மொழி பெயர்க்கப் பெற்று எல்லோரும் படிப்பார்களே, அப்போது பிரிட்டிஷாரைப்பற்றி உலகத்தார் எவ்வளவு இழிவாக நினைப்பார்கள்!

*நன்றி—பாரதி தரிசனம்—முதற்பாகம்*

## 48. அப்படிப் பேசும்போது அவர்மூச்சு முட்டிப்போய் விடவில்லையே யென்று நான் வியப்படைகிறேன்

*1906 செப்டம்பர் 11*

எம். எம். ஹைண்டுமன் என்பவர் இந்தியாவிற்கு இங்கிலாந்திலேயுள்ள முக்கிய நண்பர்களிலே ஒருவர். இவர் வேறு சிலரைப் போல நம்மிடம் அரை மனதுடன் அனுதாபம் கொள்வாரில்லை. நம்மவர்களுக்கு முற்றிலும் சுயாட்சி கிடைக்க வேண்டுமென்பதையே பெருநோக்க

மார்கக் கொண்டவர், மார்லியின் "வரவு செலவு கணக்கு"ப் பிரஸங்கத்தைப்பற்றி 'ஜஸ்டிஸ்' (நீதி) என்ற லண்டன் பத்திரிகையிலே ஒரு விஷயம் எழுதியிருக்கின்றார். இந்தியா சிறிது சிறிதாகச் செழிப்படைந்து வருகிறதென்று மிஸ்டர் மார்லி கூறியிருப்பதைப்பற்றி இவர் கண்டனை புரிந்து பேசுகிறார் :—

இவரது விவகாரங்கள் பின்வருமாறு :— (17 7ம் வருஷம்) பிளாஸி சண்டை முதலாக (1815ம் வருஷம்,) வாடர்லூ சண்டை வரை இந்தியாவிலிருந்து பிரிட்டிஷார் கொள்ளையடித்துச் சென்றது நூறு கோடி (100, 000, 000) பவுன். அதற்கப்பால் 1875-ம் வருஷம் முதல் 1906-ம் வருஷம்வரை குறைந்தபக்ஷம் மற்றொரு நூறு கோடி (100, 000, 000) பவுன் பிரதியுபகாரமில்லாமல் வாரிச் சென்றிருக்கிறார்கள்.

இன்றும் வருஷந்தோறும், இந்தியாவிலிருந்து பிரதி பிரயோஜன மில்லாமல் 3 கோடி (30,000, 000) பவுன் எடுத்துக் கொண்டுபோகிறார்கள். இந்தியாவிலேயே அன்னியர்கள் (20, 000, 000) 2 கோடி பவுன் சம்பளமாக எடுத்துக் கொள்கிறார்கள். இவ்வாறு இந்தியாவின் இரத்தத்தை அன்னியர்கள் உறிஞ்சுவதால் இங்கே பஞ்சமும், பிளேக்கும் ஜனங்களைப் பதினாயிரக்கணக்காக விழுங்குகின்றன. மரணத்திட்டம் வருஷந்தோறும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதைக்காட்டிலும், பெரிய அநீதி எந்தக் காலத்திலும், எந்த ராஜாங்கத்தாரா லேயும் செய்யப்பட்டதே கிடையாது.

மிஸ்டர் மார்லி மேற்கண்ட விஷயங்களையெல்லாம் மிக நன்றாய் அறிவார். அப்படியிருந்தும் அவர் இந்தியா செழிப்படைந்து வருகிறதென்பதற்கு "நிதரிசனம்" காட்டப் புகுந்துவிட்டார். இந்தியா கடன்கார தேசமாகி

அதன் வருஷாந்திர இறக்குமதிகளைக்காட்டிலும், ஏற்றுமதிகள் அதிகப்பட்டு, இங்கிலாந்தின் நன்மைகளின் பொருட்டு அது பெரும் நஷ்டமடைந்து வருவதையே, மார்லி இந்தியாவிலேயே செல்வம் குவிந்து வருவதற்கு திருஷ்டாந்தமாகக் கூறுகிறார்.

"விவசாய ஜாதியாருக்குப் பெரிய அனுகூலம் செய்துவிட்டதாக" மார்லி பெருமை பாராட்டிக் கொள்ளுகின்றார். 11 பென்ஸ் கொண்ட 1 ரூபாயை ஷில்லிங் 4 பென்ஸ் கொண்டதாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று கவர்ன்மெண்டார் தமது சொந்த நலத்தின் பொருட்டு விதியேற்படுத்தி 100க்கு 40 ஆக இருந்த தீர்வையை 100க்கு 50 ஆகச் செய்துவிட்டார்கள். இது விவசாயிகளுக்குச் செய்த அனுகூலம். இனி, இத்தேச வஸ்துக்களை இழுத்துக் கொண்டு, அன்னியர்கள் காலில் போட்டு வரும் ரெயில் பாதைகளை அன்னிய கம்பெனியார் முதல் போட்டு நடத்துகிறார். இந்தியாவிலேயே எந்த வருஷம் பஞ்சம் அதிகமோ அந்த வருஷத்திலே ரெ. கம்பெனி பங்காளிகளுக்கு அதிகப் பணம் கிடைக்கிறது. இது நமக்குப் பெரிய வரமாக அவர்கள் வெளியில் பேசிக் கொள்கிறார்கள். நீர்ப்பாய்ச்சல் விஷயத்தில் ஏதோ ஒரு பெரிய உதாரத் தன்மை காட்டிவிட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். 250 வருஷங்களிலே இந்தியாவின் நீர்ப்பாய்ச்சலின் பொருட்டு 28,000,000 பவுன் செலவிட்டிருக்கிறார்கள். அதில் பெருந்தொகை உபயோகமில்லாமல் துர்விநியோகமாயிருக்கிறது.

இத்தனையும் சேர்த்து ஒரே வருஷத்தில் இங்கிருந்து வாரிச்செல்லும் பணத்துக்கு சமானமாகமாட்டாது. புராதனமான அரிய வாய்க்கால் தொழில்களை சரியானபடி செப்பனிடாமல் பாழாக்கிவிட்டார்கள்.

இனி உப்பு வரி ஒன்றிருக்கிறது. மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் உப்புக் கிடைக்காதபடி நஷ்டமடைந்து கொண்டிருந்த சமயத்தில், வரியின் பளு மிகுதியாலேயே கவர்ன்மெண்டாருக்குத் தக்க வருமானம் கிடைக்க வழியில்லாமலிருந்தது, இந்த சமயத்தில் ஷி வரியை சிறிது குறைத்துவிட்டார்கள். உப்பைப் போன்ற பிராணாதாரமான வஸ்துவில் வரி விதிப்பதுவே பெரும் பாதகம். அப்படியிருக்க, ஒருவித சுயநலத்தைக் கருதி உப்பைக் குறைத்துவிட்டது ஒரு தர்மமாகுமா?............ ...................... தர்மம் என்று சொல்லிக்கொண்டால் எப்படியிருக்குமோ அப்படியேதான் இதுவும் இருக்கிறது.

இவற்றையெல்லாம் நமது க்ஷேமாபிவிருத்தியின் நிதர்சனங்களென்று மார்லி வெட்கமில்லாமல் சொல்ல வந்துவிட்டார். நமக்கு இதன் அக்கிரமம் எவ்வளவு தெளிவாக விளங்குகிறதோ அவ்வளவு தெளிவாக மார்லிக்கும் விளங்கு மென்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனால் சம்பளம் வாங்கிக்கொண்டு இந்தியா மந்திரி வேலை பார்ப்பவர் அதற்குத் தக்கபடி பேசவேண்டாமா? நாய் வேஷம் போட்டால் குலைத்துத்தானே தீரவேண்டும்? இந்தியாவின் விஷயமாக...................... பேசிக்கொண்டு வந்த மார்லிக்கு அவர் பேசும் போது தொண்டையடைத்து மூச்சுமுட்டிப் போய்விடவில்லையே! என்ன ஆச்சரியம்! என்று ஹைண்ட்மான் கவலைப்படுகிறார்.

நன்றி—பாரதி தரிசனம்—முதற்பாகம்.

# 49. இந்தியர்களுக்கு இன்னும் ஒரு ரொட்டித் துண்டம்

*1906 டிசம்பர் 1*

"அழுதபிள்ளைக்கு வாழைப்பழம் கொடுத்து" ஏமாற்று வதுபோல (இன்னும் ஒரு நல்ல பழமொழி இருக்கின்றது. அதை எழுத நமக்கு கூசுகின்றது.) இந்தியர்கள் கேட் பதற்கு இடையிடையே சொற்ப அனுகூலங்கள் கவர்ன் மெண்டார் செய்து வருகின்றார்கள். ஆனால் ஆராய்ந்து பார்க்குமிடத்து இந்த அனுகூலமும் நமக்குத் தீமையாகு மன்றி நன்மையாகமாட்டாது. "ஸர்க்காரில் இந்தியர் களுக்கு உயர்ந்த பதவி கொடுக்கவேண்டும், உயர்ந்த பதவி கொடுக்கவேண்டும்" என்று நிதானக் கட்சியார் கூச்சலிடுகிறார்கள். இதன் பலன் என்னவாயிற்று? நிர்வாகப் பொறுப்புள்ள தலைமை உத்தியோகங்கள் நமக்குக் கொடுக்கவேமாட்டார்கள். கொடுக்கும் விஷயத் தில் அவர்களுக்குப் பிழைப்பில்லாமல் போய்விடும். நீதி இலாகாவில் மட்டும் ஓரிரண்டு பெரும் பதவிகள் கொடுத் திருக்கிறார்கள். இதனால் நமது நாட்டிற்குக் கெடுதியே தவிர நன்மை கிடையாது. நமக்குள் நல்ல தேசபக்தர் களாகவும் ஜனத் தலைவர்களாகவும் இருப்போர்களுக்கு தக்க சம்பளங்களை லஞ்சமாகக் கொடுத்து கவர்ன்மெண் டார் தமது வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள். இதனால் முப்பது கோடி ஜனங்களிலே ஒரு மனிதனுக்குச் சிறிது பண லாபமும், தேச முழுமைக்கும் நஷ்டமும் ஏற்படுகின்றது. ஐயோ! இந்தவிதமான சொற்ப லாபங்களுக்கெல்லாம் நாம் ஆசைப்பட்டா வாழப்போகிறோம்? ஜப்பான் தேசத்திலே சுதேசிய ராஜாங்கம் இருந்த போதிலும் அந் நாட்டு ஜனங்கள் ஸர்க்கார் உத்தியோகங்களிலே

சிறிதேனும் ஆசைப்படாமல் வர்த்தகம், கைத்தொழில், நூலாராய்ச்சி முதலிய மார்க்கங்களால் செல்வமும் கீர்த்தியும் பெற விரும்புகிறார்கள். அன்னிய ராஜாங்கத்தின் கீழிருக்கும் நம்மவர்களோ ராஜாங்கத்தார் கொடுக்கும் கடைத்தரமான உத்தியோகங்களிலே மிகவும் ஆவலுடையவர்களாய் இருக்கிறார்கள். இந்த விஷயத்தில் 'சுதேசமித்திரன்' பத்திரிகையின் மனநிலைமை வெகு விசித்திரமாய் இருக்கிறது. ஸர்க்கார் உத்தியோகங்களை எவரும் விரும்பக்கூடாதென்றும், ஸர்க்காரின் உதவியில்லாமல் பலவித பிரயத்தனங்கள் செய்து பிழைக்க முயலவேண்டுமென்றும் இப் பத்திரிகை பல முறை உபதேசிப்பதை கேட்டிருக்கிறோம். எனினும் கவர்ன்மெண்டார் நம்மவர்க்கு ஏதேனும் புதிய உத்தியோகங்கள் கொடுக்கப்போவதாக வதந்தி வரும் பக்ஷத்தில் இந்தப் பத்திரிகைக்கு அளவிறந்த ஆனந்தம் பிறந்துவிடுகின்றது. முன்னுக்குப் பின் தமது ஸபையிலேயும் வைசிராய் ஸபையிலேயும் ஒவ்வொரு இந்தியரை நியமிக்க எண்ணியிருப்பதாக நெடுநாளாய் ஒரு வதந்தி ஏற்பட்டு வருகிறது. அது மெய்யான வதந்தி என்று நினைப்பதற்கு யாதொரு பலமான ஆதாரத்தையும் காணவில்லை. என்ற போதிலும் மேற்கண்ட விஷயமாக "சுதேசமித்திரன்" பத்திரிகை எத்தனை ஆனந்தத்துடன் எழுதுகிறது பாருங்கள் :—

"ஆகையால் லண்டன் நியமனம் நம்மவர்க்கு ஆவது சுலபம். இந்த லண்டன் நியமனம் மிஸ்டர் கோகலேயிற்காவது, மிஸ்டர் ஆர். ஸி. தத்துக்காவது ஆகுமென்ற வதந்தி இப்போது மாறி, பம்பாயில் நமது தேசாபிமானிகளில் சிம்மத்தைப் போன்ற வல்லமையும் தைரியமும் கொண்டு எல்லோருடைய மதிப்பையும் பெற்றிருக்கும் ஸர் பிரௌஸிஸா மோவான்ஜி மேட்டா, நைட், சி. ஐ. இ-க்கு ஆகக் கூடுமென்று நம்பப்படுகிறது. அப்படியானால்

ஸர்வதோ மனனென்றே நினைக்கவேண்டும்.'' ஐயோ போகட்டும்! மார்லியின் ஸபையிலே இந்திய விரோதிகளாகிய அநேக ஆங்கிலேயருக்கிடையில் ஒரு தனி இந்தியன் இருந்து நமக்கு வெகு காரியங்கள் சாதித்துவிட முடியுமல்லவா? அதிலும் சுதேசியமுயற்சியிலேகூடப் பற்றில்லாதவரும் சில வருஷங்களாக ஆங்கிலேய அபிமானம் அதிகப்பட்டு வருபவருமாகிய மேட்டாவைப் போன்றவர்கள் அங்கே போய் ஒரு மூலையில் பதுங்கி உட்கார்ந்த உடனே இந்தியாவிற்கு சகல சாம்ராஜ்யமும் கிடைத்துப் போய் விடும்! அற்ப சந்தோஷிகளுக்கு திருஷ்டாந்தம் வேண்டுமானல் நமது நிதானக் கட்சியாரையே சொல்லவேண்டும். கவர்ன்மெண்டாரிடமிருந்து எவ்விதமான தயவை எதிர் பார்க்கிறவனும் அந்த க்ஷணத்திலேயே பிரஜைக்கு உபயோகமில்லாமல் போய்விடுகிருன். சுதேசிய ராஜாங்கமாய் இருந்தால் இப்படியிராது. அன்னிய ராஜாங்கத்திற்கு இதுவே முதலாவது லக்ஷணம். இதை அறியாதவர்களும், அறிந்திருந்து மறைத்துவைப்பவர்களும், ஜனத் தலைமைக்குத் தகுதியுடையவர்களாகமாட்டார்கள்.

நன்றி—பாரதி தரிசனம்—முதற்பாகம்.

## 50. சுயாட்சிக்குத் தகுதியாவதெப்படி?

ஜனவரி மாதம் 5 1907.

இருபது இருபத்தைந்து வருஷ காலமாய் நமது நேயர்கள் இந்தியாவானது கனடா, ஆஸ்திரேலியாபோல ஜனங்களினலேயே ஆளப்பட்டு ஆங்கிலேயரின் மேற்பார்வையிலிருக்க வேண்டுமென்று யோசனை செய்துகொண்டிருந்தார்கள். இந்தியர்களிடத்தில் அனுதாபமுள்ளவர்கள் போல நடிக்கும் சில ஆங்கிலேய பிரமுகர்களும்

அந்த யோசனையைத் தழுவியும் அதற்குத் தாங்களும் உதவி புரிவதாகக் கூறியும் வந்தனர். ஆனால் மேற்கூறிய யோசனை இந்தியாவுக்குத் தகுதியுடையதல்ல. அப்படி ராஜ்ஜியத்தைத் தந்து மேற்பார்வை மாத்திரம் பார்க்க ஆங்கிலேயர் இசையமாட்டார்களென்று பல தடவையும் உதாரணங்களால் காட்டிவரும் சில புத்திமான்களின் உறுதிமொழியைக் கேட்டும் இன்னும் சிலருக்குப் புத்தி மாறவில்லை. "வருங்காலம் வந்தால், தானே எல்லாம் வந்து சேரும். நாம் பொறுமையோடு இருக்க வேண்டும்" என்று புத்தி சொல்கின்றனர். இம்மாதிரியாக ஊழ் வினையை எதிர்பார்க்கும் சாதுக்கள் தங்கள் கோழைத் தனத்தையும் மூடபக்தியையும் கைவிட்டு நாம் சுயாட்சி பெற ஆவலுடையவராக இருக்கிறோமென்பதை ராஜாங் கத்தாருக்கு உறுதிமொழியாகச் சொல்லி அதைப் பெறும் வழியைத் தேடுவதே உசிதமாகும். நாம் ஒரே நெறியில் நின்று நமது குறையை முடியாராகில் ராஜாங்கத்தாருடன் நாம் ஒத்து நடக்க முடியாதென்பது பகிரங்கமாய்ச் சொல்ல வேண்டும். இந்தியர்கள் இன்னும் ஆளும் திறமை வாய்ந்தில்லையென்று சாக்குச் சொல்லிப் பொழுது போக்கு கின்றனர். அப்படியே ஆளும் திறமையில்லையென்பதை நாம் ஒத்துக் கொள்வோம். ஆனால் ராஜாங்கத்தின் கீழ் அப்படி சுயாட்சிக்கு வேண்டிய கல்வி மார்க்கம் ஏதாவது ஏற்படுத்தியிருக்கிறார்களா? "நாம் என்றைக்கும், அதோ ராஜாங்கத்தார் குற்றம் செய்தனர், இதோ எங்களுக்குத் தீமை நேர்ந்தது" என்று முறையிட்டுக் கொண்டிருப் போமேயன்றி நமக்கு சுயாட்சிக்கு வேண்டிய பழக்கங்கள் பெறுவது அசாத்தியம் என்பது நிச்சயம். நமக்கு என்றைக் கும், ராஜாங்கத்தாருடைய சாதுர்ய செய்கைகளைக் கண்டு வியந்து பேசியும் ஆச்சரியப்பட்டும் அவர்களைப் பூஜித்தும் வருவதே தொழிலாகி விட்டது. இதுதான் நாம் பிறந்த

நாட்டில் நாமடைந்திருக்கும் நிலைமை. ஆங்கிலேய ராஜாங்கத்தின் அன்பு பூண்டவரும் தற்கால ராஜதந்திரத்தில் சுயாட்சி கொடுப்பதற்கு வேண்டிய வழிகள் பெற முடியாதென்பதை ஒப்புக்கொள்வர். எல்லாரும் பிறக்கும்போதே ஸகல வித்தைகளிலும் வல்லவராய்ப் பிறப்பதில்லை. ஒவ்வொருவனும் தொழிலில் பழக்கமடைந்தால்தான் வல்லவனாகிறான். உதாரணமாக, வியாபாரத்தில் தேர்ந்த ஒரு வர்த்தகன் தனது பிள்ளையைத் தன்கீழ் வைத்துக் கொண்டு தனக்குப் பிறகு அவன் இக்காரியத்தைப் பார்க்க வேண்டியவனாதலால் எல்லாத் தந்திரங்களையும அப்பப் போது சொல்லி வைக்கிறான். நமது பூர்வீக அரசர்கள் தங்கள் புத்திரர்களுக்கு இளவரசர் பட்டமெனத் தந்து அவர்களை ராஜகாரியங்களைப் பார்க்க விட்டுத் தான் மேற்பார்வை செய்து வந்த முறையையும் கேட்டிருக்கின்றோம். இப்போது ஆட்சி புரியும் இவர்களும் ராஜ தந்திரங்களுடன் பிறந்த தேவதைகளல்ல. எல்லாம் கொஞ்ச கொஞ்சமாய் குட்டுப்பட்டு வந்ததேயன்றி வேறில்லை. ''ட்யூடர்' வம்சத்தார் இங்கிலாந்தில் அரசு புரிந்த காலத்தில் இவர்கள் நிலைமையைச் சரித்திரம் நன்கு விளக்குகின்றது. எல்லோரும் அந்தந்தத் (துறையில்) பலதரம் விழுந்தெழுந்துதான் இந்த நிலையிலிருக்கின்றனர். குழந்தை நடப்பதற்கு முன் பலதடவை விழுந்துநாயப் படுகிறது. அதனால் எழுந்திருக்கவொட்டாமல் வைப்பது உசிதமா? ஆகையால், ஜனங்களுக்கு ஆளும் திறமையுண்டாவது அவர்கள் அந்த ராஜதந்திரத்திலும் தொழிலிலும் ஊடாடினால்தான் வரும்.

நரம் நாளுக்குநாள் ஆடவர்களுக்குள்ள தன்மையை இழந்துகொண்டே வருகிறோம். இப்படிக் காலம் கழிப் போமானால் சிவாஜியும் அசோகர் முதலிய மன்னர்களையும் தந்த இப்பாரத பூமி ஸப் இன்ஸ்பெக்டர்களையும் கலெக்ட

ரையும் மேன்மேலும் பேறுவதாய்ப் போய்விடும். இதுவரை செய்த விண்ணப்பங்கள் அனைத்தையும் திரஸ் கரித்தும் மாறுபடுத்தியும் நமது எண்ணத்தை நிறைவேற்ற மனமில்லாத ராஜாங்கத்தாரிடம் இன்னும் கெஞ்சுவ தானல் நமது மூடத்தனம் எத்தன்மையது பாருங்கள். ஆங்கில ராஜாங்கத்தார் கேள்விக்கு ஒப்பி நடப்பது எப்போதெனில், செய்யாவிடில் அபாயம் நேருமெனத் தெரிந்தால்தான். அமெரிக்கர்கள் வாய்ப்பேச்சில் சாயாத போது ஜனங்களைக் கூப்பிட்டபோதுதான் அவர்களுடைய சுயாட்சியின் உரிமை வெளிவந்தது. அதைக் கண்டுதான் பிரிட்டிஷார் ஆளும் திறமையை மதிப்பிடுகின்றனர்'' என்று ''வந்தே மாதரம்'' கூறுகிறது.

—நன்றி—பாரதி தரிசனம்—இரண்டாம் பாகம்

## 51. நமது ஞாபகத்திற்கு

*1907 ஜனவரி 11*

*சென்னைவாசிகாள்!*

நமது இந்தியாவானது மற்ற தேசங்களைப் போலல் லாமல் ஒரு விசித்திர தேசமாக இருக்கிறது. ஜப்பான் (அருணதேசம்), இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய ஐரோப்பிய தேசங்களும் மற்ற ஆசியா தேசங்களும் ஜன அரசர்களால் ஆளப்பட்டு, தங்கள் நன்மையின் விருத் தியையே அதிகப்படுத்திக் கொண்டுவர நம் இந்தியா மாத்திரம் வெகுகாலமாக அன்னிய தேச அரசர்களால் ஆளப்பட்டு மகா தாழ்மையை அடைந்திருக்கிறது. மகரிஷி களாலும், ஆழ்வார் முதலிய திராவிட புண்ணிய புருஷர் களாலும் நிறைந்திருந்த இத்தேசம் இப்போது என்ன கதியிலிருக்கிறது பாருங்கள். நம்முடைய பூர்வீகர்கள்

ஆத்ம ஞானத்திலும், ஈச்வர பக்தியிலும் உயர்ந்த பதவியை அடைந்திருக்க, நாமெல்லோரும் வறுமையை வளர்ப்பதே முக்கிய காரியமாக வைத்து நம்முடைய கடமைகளை முற்றிலும் ஓரத்தில் ஒதுக்கி, மிக்க தாழ்ந்த நிலைமையை அடைந்துவிட்டோம். இது என்ன கஷ்டம்! பரமார்த்திகளான ஆத்ம தத்துவ ஞானத்திலும், விவகார மான தேசத்தின் ஞானத்திலும் நம்முடைய பெரியோர் கள் நல்ல உயர்வே அடைந்திருந்தார்கள்; நாமோ தைரியமுமில்லாமல் நம்மை ஆண்டுவரும் அன்னிய தேசத் தார்களுக்கு செல்வத்தையும் தத்தம் செய்து பிரயோஜன மில்லாத பேடிகளாக எஜமானன் புசித்த இலையில் மீதியை தின்னும் அடிமைகளைப்போல் மகா தீனக்கதியை அடைந் திருக்கிறோம். நாம் இனிமேல் நல்ல கதியை அடைய நல்வழியைத் தேடவேண்டியது முக்கியமானதல்லவா?

தற்காலத்தில் ஜனத் தலைவர்களென்றுபேர் வைத்துக் கொண்டு உலாவும் உத்தியோகஸ்தர்கள் சட்டசபையிலும், நிர்வாக சபையிலும், மற்ற ராஜாங்க உத்தியோகங்களிலும் உயர்ந்த பதவி வேண்டுமென்று இவர்கள் கூறுகிறார்கள். நம்முடைய சென்னை ராஜதானிக்கு கவர்னராக ஒரு இந்தியனை நியமித்தால் வெகு நலமாய்த்தான் இருக்கும். கவர்னர்களாகவும் கலெக்டர்களாகவும் நம்மை நியமித்து ஆங்கிலேயர்களுக்குத் தரும் சம்பளங்களை நமக்குக் கொடுத்தால் அதைவிட வேண்டியது நமக்கொன்று மில்லைதான். நமக்கே ராஜ்ஜியத்தைத் திருப்பி கொடுத்து விட்டு "இந்தியர்களே இனிமேல் ராஜ்யத்தை ஆளலாம், நாங்கள் எங்கள் ஊருக்குத் திரும்பிப்போகிறோம்" என்று சொல்லிப் போய்விட்டால் இவ்வாங்கிலேயர்களின் தர்ம சிந்தை வெகு புகழத்தகுந்ததாயிருக்கும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்வார்களா? வெகு பிரயாசத்தால் பணம் சம்பாதிக்க வேண்டுமென்று 10 ஆயிரம் மைல் தூரத்தி

லிருந்து இங்கு வந்திருக்கும் ஆங்கிலேயர்கள் நமக்கு நம்முடைய வேண்டுகோள்களைக் கொடுப்பார்களென்று நினைப்பது வெகு மூடத்தனமாகும். இதை நம்முடைய மகாப்புலிகளான ஜனத்தலைவர்கள் அறியவேண்டும். வருஷம் ஒன்றுக்கு ஸ்வர்ணமாக 30 கோடி ரூபாய் இங்கிலாந்துக்குப் போகிறதைக் கருப்பு மனிதர்களாயும், அடிமைகளாயும், பேடிகளாயுமுள்ள நமக்கு ஏன் அவர்கள் கொடுக்க வேண்டுமெனத் தெரியவில்லை. அவர்களை, 'தர்மமானவர்களே தர்மபாலர்களே! நீங்கள் மகா தர்ம சிந்தை உள்ளவர்கள் பிரபுக்கள் என்று பெயர் பெற்றிருக்கிறீர்கள். அப்பெயரைக் கெடுத்துக் கொள்ளாமல் அடிமைகளாய் உள்ள எங்கள் சில வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும். அது என்னவெனில் ஆங்கிலேயர்களால் முற்றிலும் நிறையப்பட்ட உத்தியோகங்களில் நியமிக்க வேண்டும். விக்டோரியா ராணி இந்தியர்களையும் ஆங்கிலேயர்களையும் எவ்வித்தியாசங்களின்றி ஆளுவதாகச் சொல்லவில்லையா? அதற்கு விரோதமாக செய்ய நியாயமில்லை'' என்று சென்ற 20 வருஷ காலங்களாக காங்கிரஸ் மூலமாகச் சொல்லியும், விண்ணப்பப் பத்திரிகைகள் அனுப்பியும் வேண்டியும் கெஞ்சியும் இன்னும் பல விதங்களால் பிரயத்தனித்தும் வீண் என்று இன்னும் நம்மிடையே மகா கீர்த்தி பெற்ற ஜனத் தலைவர்கள் நினைக்கவில்லையே. இது என்ன மூடத்தனம். இவர்கள் தங்கள் சகோதர இந்தியருக்கு ''ஏ சகோதரர்களே, சென்ற 20 வருஷ காலமாய் ஆங்கிலேயர்களுக்கு நம்முடைய கஷ்டங்களைத் தெரிவித்தும் பிரயோஜனமில்லாமல் போய் விட்டது. ஆகையால் இனிமேல் அவர்களை நெருங்கிக் கேட்பது பிரயோஜனமில்லை. நாமே வேறு ஏதாவது வழியைத் தேடவேண்டியது முக்கியம். இனிமேல் காலத்தை முன்வழியில் செய்வது (செலுத்துவது)

நம்முடைய நாசத்தை விளக்கும். இனிமேல் நாமே நம்முடைய நல்வழியைத் தேடவேண்டும்!" என்று விண்ணப்பத்தையனுப்புவது வெகு சிரேஷ்டமான வழியாகும். நம்முடைய ஜனத் தலைவர்கள் தங்களுக்கு உயர்ந்த சம்பளமும் உத்தியோகமும் கொடுத்துவிட்டால் இந்தியா முழுவதும் நற்கதியடைந்துவிடுமென்று பாசாங்கு செய்கிறார்கள். கவர்மெண்டு உத்தியோகங்களில் அவர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்கள் கொடுத்தல் இந்தியர்களுக்கு பொருத்தமென்று இவர்கள் வெகுகாலமாய் சொல்லி வருகின்றார்கள். இவர்களே மற்ற வெகுதாழ்ந்த சம்பளத்தைப் பேறுகிற கணக்கர்களின் நிலைமையைப்பற்றி பேசுகிறது கிடையாது. அதைப் பற்றிப் பேசினால் அந்த நிபுணர்கள் அசட்டை செய்துவிடுகிறார்கள். 15 ரூபாய் சம்பளத்தைப் பெறும் கணக்கர்கள் கவர்ன்மெண்டு ஆபீஸ்களில் ஆயிரக்கணக்கானவர்களை அடுத்துப் பூஜிக்கிறார்களே அனேகர்.

15 ரூபாய் சம்பளத்தைக் கொண்டு ஒரு மனிதன் 5 பேர்களடங்கிய ஒரு சம்சாரத்தை எப்படித்தான் காப்பாற்றுவான். ஆகையால் தங்களின் சுய நன்மையும் சுகத்தையும் லாபத்தையும் கவனியாமல் கஷ்டப்படும் ஜனங்களின் நன்மையைத் தேடுகிறவன்தான் ஜனங்களால் பூஜிக்கப்படுபவன். ஆகையால் நம்முடைய தலைவர்கள் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளும் கவர்ன்மென்டாரைப் பிச்சை கேளாமல் ஜனங்களையடுத்து அவர்களின் உதவியைக்கொண்டு நற்கதியை அடைவார்களென்றால் நம்முடைய ராஜ்ஜியம் சீக்கிரத்தில் ஒரு நல்ல நிலைமையில் வந்துவிடும். ஆனால் செவிடர்கள்போல் ஆங்கிலேயர்களுக்கு விண்ணப்பப் பத்திரிகையை அனுப்பாமல், நம்முடைய பிரயத்தனத்தையே தேடுவது மிகவும் சிரேஷ்டமானது.

நன்றி—பாரதி தரிசனம்—இரண்டாம் பாகம்.

# 52. சென்னைவாசிகளின் நிதானமும் விபின சந்திர பாலரின் சந்நிதானமும்

*18 மே 1907*

சென்னைவாசிகளின் நிதானமெல்லாம் சந்திரபாலரின் சந்நிதானத்திலே பறந்து காற்ருய்ப் போய்விட்டது. நேற்று மாலை விக்டோரியா நகரமண்டபத்தில் லாலா லஜபதிராய் தீபாந்தரத்திற்கேற்றி அனுப்பப்பட்ட விஷயமாக மஹாஜன சபையாரால் கூட்டப்பெற்ற பெருங்கூட்டத்தில் நடந்த செய்திகளை நேரே வந்து கண்டவர்களெல்லாம் இனி மயிலாப்பூர் வக்கீல்கள் ஜனத் தலைவர்களென்று மூச்சுவிடக்கூட இடமில்லை யென்பதை நன்ருக அறிந் திருப்பார்கள்.

நேற்று மாலை மீட்டிங்கிலே முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பின் வருவனவாகும்:—

1. இதுவரை பழைய கட்சிக்காரருக்கு முக்கிய தர்ம மாக இருந்த விண்ணப்ப முறைமையை நேற்று அவர்கள் தாமாகவே பேதமையாகு மென்று நிறுத்திவிட்டனர்.
2. அப்படி அவர்கள் விண்ணப்பம் செய்ய விரும்பாத போதிலும் வெறுமே இந்தியா மந்திரிக்கு மீட்டிங்கைப்பற்றித் தகவல் கொடுக்கவேண்டு மென்று மிஸ்டர் பி. ஆர். சுந்தரய்யர் சொன்ன தைக்கூட ஜனங்கள் அங்கீகரிக்காமல் கோப மடைந்தார்கள்.
3. மயிலாப்பூர் வக்கீல்கள் தாம் ஜனத் தலைவர்கள் என்று கனவு கண்டு கொண்டிருந்தது பொய்க் கானவென்பதை அறிந்து கொண்டார்கள்.

4. ஸர்க்காரிலே ஸர் என்றும் உர் என்றும் பட்டம் பெற்றுத் திரிந்தவர்களையெல்லாம் ஜனங்கள் மதிப்புடன் நடத்திய காலம் போய் இப்போது அவர்களைப் பகிரங்க ஸ்தானங்களிலே பேச வொட்டாத நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டார்கள்.

5. இங்கிலீஷிலே பேசக்கூடாது. தமிழ்நாட்டிலே ஜனத் தலைவர்கள் என்று பெயர் வைத்துக் கொண்டு வருவோர் பொது விஷயங்களைப்பற்றித் தமிழிலேயே பேசவேண்டும் என்று ஜனங்கள் வற்புறுதினார்கள்.

6. ஸர் வி. சி. தேசிகாச்சாரிக்கும் ஜனங்கள் சரியான பாடம் சொல்லிக் கொடுத்தார்கள். சென்னை மாணுக்கர்களிலே பெரும்பாலோர் வெளியூருக்குச் சென்றிருந்தபடியால் பழைய கட்சியார் இம் மட்டோடு பிழைத்தார்கள். ஒரு வாரத்திற்குமுன் இந்தப் பொதுக்கூட்டம் நடந்திருக்குமானால், நமது மயிலாப்பூர் நண்பர்களின் ஸ்திதி இன்னும் வேடிக்கையாக முடிந்திருக்கும். லால லஜபதிராய் தீபாந்திரத்துக்குப் போவதைப்பற்றி ஜனங்கள் மனது கொதித்துக் கொண்டிருக்கும் போதுகூட இவர்கள் சர்க்காரை ஸஹஸ்ரநாமம் சொல்லி அர்ச்சனை செய்வதுதான் சரியான பா,தையென்று நினைப்பது விநோதமாயிருக்கிறது.

இவர்கள் என்ன நினைத்தாலும் சரியே. இனி இதைப் பகிரங்கமாக வெளியிட்டுக் கூறத் துணியமாட்டார்கள் என்று நேற்றே தெளிவாய்விட்டது.

# 53. பால பாரத சங்கம்-முதலாவது பிரகடனம் பத்தாம் அவதாரம்

*1907 மார்ச் 30.*

"ஹே பாரதா! எப்போதெப்போது தர்மத்திற்கு பங்கமுண்டாகி அதர்மம் தலைதூக்கி நிற்கிறதோ அப்போதெல்லாம் நான் தோன்றுகிறேன். ஸாதுக்களைக் காக்கும் பொருட்டாகவும், தீங்கு செய்வோர்களை நாசம் செய்யும் பொருட்டாகவும், தர்மத்தை நன்கு ஸ்தாபனம் செய்யும் பொருட்டாகவும் நான் யுகந்தோறும் வந்து பிறக்கிறேன்" என்று கிருஷ்ண பகவான் பகவத் கீதையிலே நமது பூர்விகராகிய அர்ஜுனனுக்கு வாக்களித்திருக்கிறார்.

ஆகையால் தற்காலத்தில் இந்தியர்கள் என்று வழங்கப்பெறும் ஹே பாரதர்களே! இப்போது பத்தாம் அவதாரம் தோன்றுவதற்குரிய காலம் வந்துவிட்டதா இல்லையா என்பதைப்பற்றி சிறிது ஆலோசியுங்கள்.

இந்தியாவிலே பிறந்து வாழும் 30 கோடி ஜனங்களை சுமார் ஒரு லக்ஷம் தொகையுள்ள பரங்கிக்கார ஜனங்கள் வந்து எவ்விதமாகவோ மாயைகள் செய்து அரசாட்சி செய்கிறார்கள். நம்மவர் வாயில்லாமல் பூச்சிகள்போல் அந்த அரசாட்சி இன்ன மாதிரியாக நடத்தவேண்டுமென்று வற்புறுத்துவதற்குக்கூட சக்தியில்லாதவர்களாயிருக்கிறார்கள். 30 கோடி ஜனங்கள் தீர்வை செலுத்துகிறார்கள். அந்தத் தீர்வை மொத்தத்தை இன்னவிதமாகச் செலவிட வேண்டுமென்று நியமனம் செய்யக்கூட இவர்களுக்கு அதிகாரம் கிடையாது. இங்கிலீஷ்காரர் தம்முடைய சொந்த (அனு) கூலங்களை கவனித்து எவ்விதமான படிப்புச் சொல்லிக் கொடுக்கிறார்களோ அந்த விதமான படிப்புத்தான் படிக்கவேண்டும். நாமாக நமது சொந்த நன்மைகளைக் கவனித்து மற்ற சுதந்திர தேசங்

களைப் போல் படிப்பு முறைகள் ஏற்பாடு செய்துகொள்ள வழியில்லை. நமது சொந்த ஜன்ம பூமியிலே முக்கிய அதிகாரங்களெல்லாம் அந்நியர்களைச் சேர்ந்ததாய் உள்ளது. ஊழிய வேலைகளையே நாம் செய்யவேண்டும். நமக்கு அவர்கள் பார்த்து "இட்டதே சட்டம், வைத்ததே வாழ்க்கை."

மேலும் கன லாபமுள்ள வர்த்தக வியாபாரம், கைத் தொழில் முதலியவற்றிலெல்லாம் அவர்களே முதலாளி களாயிருந்து லாபங்களையெடுத்து தமது தூர பந்தத்திலே கொண்டு சேர்க்கிறார்கள். கூலிப் பிழைப்புத்தான் நமக் கெல்லாம் விதித்திருக்கிறார்கள்.

நாம் ஆயுதங்களைத் தொடாத பேடிகளாக இருக்க வேண்டுமென்றும் ஆயுதங்கள் வைத்துக் கொண்டிருந் தால் தண்டனையென்றும் ஏற்பாடு செய்து விட்டார்கள். நிராயுதபாணிகளை அவர்கள் இஷ்டப்படியெல்லாம் நடத் துவது எளிதல்லவா?

வருஷந்தோறும் 60 கோடி ரூபாய்கள் இங்கிருந்து வற்றடிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு நடந்துகொண் டிருந்தால் இந்த பாரத தேசம் நாளுக்குநாள் சொல்ல முடியாத தரித்திரத்திலும் பிணியிலும் மூழ்கி வருவது ஆச்சரியமாகுமா? இப்போது நடைபெற்று வரும் பிரிட்டிஷ் ராஜாங்க முறைமையிலே மேலே கூறியது போன்ற அநீதிகள் எத்தனையோ இருக்கின்றன. இந்த அநீதிகளை நாசம் செய்யும் பொருட்டாக நமக்கிடையே கடவுள் பத்தாம் அவதாரம் செய்திருக்கின்றார். இப்போது மனித ரூபமாக அவதாரம் செய்யவில்லை. அவருடைய அவதா ரத்தின் பெயர் சுதேசியம்; அவருடைய ஆயுதம் Bycott, அதாவது அன்னிய சம்பந்த விலக்கு அல்லது பஹிஷ்காரம்; அவரிடைய மந்திரம் வந்தே மாதரம்.

நன்றி—பாரதி தரிசனம் - இரண்டாம் பாகம்

# 54. கிச்சடி

*19 ஜனவரி 1916*

"ஸ்வதந்திரமே மனிதரை ஸ்வதந்திரத்திற்குத் தகுதியாக்குகிறது" (அதாவது நீரிலே இறங்கித்தான் ஒருவன் நீச்சுப் படிக்க முடியும்; இல்லாவிட்டால் முடியாது என்பது போல.)

இந்த வாக்கியம் மகாகீர்த்தியுடன் நெடுங்காலம் இங்கிலாந்தில் முதல் மந்திரியாக இருந்த க்ளாட்ஸ்டன் என்பவர் சொல்லியது. நல்ல ராஜ்யத்தைக் காட்டிலும் ஸ்வராஜ்யம் நல்லது; இது கூறிய பானர்மான் என்பவரும் இங்கிலீஷ் முதல் மந்திரி ஸ்தானம் வகித்தவரேயாம். ஸமஸ்கிருதம் முதலிய புராதன பாஷைகள் படித்த வைதீக பண்டிதர்களைப் போலவே தேசத்தில் இங்கிலீஷ் படித்த வித்வான்களும் பெரும்பான்மையாகப் புத்தகப் பழக்கம் அதிகமாகவும் லௌகிகப் பழக்கம்குறைவாகவும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லாம் நாளடைவில் சீர்படுமென்று நம்புகிறேன்.

ஓகோ; இந்த மேற்கோள் சங்கதி எடுத்ததிலிருந்து என்னையும் இன்று அந்தக் குணம் பலமாகப் பிடித்துக் கொண்டது.

லார்ட் ஹால்டேன் என்று ஒரு இங்கிலீஷ் மந்திரி இப்போது பென்ஷன் வாங்கிக் கொண்டிருக்கிறார். இவர் நல்ல மேதாவி இவர் சொல்கிறார்:—

"இந்த யுத்தம் முடிந்தவுடனே ஜனாதிகாரம் வந்து நம் முன்னே நிற்கும் (அதாவது பொது ஜனங்கள் கையிலே அதிகாரம் வந்து தங்கும்.) நம்முடைய எஜமான்கள் பொது ஜனங்கள். நம்மீது அதிகாரம்

செலுத்த வருமுன்பாகவே அவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுப்பதற்கு நம்மால் இயன்ற அளவு பாடுபட வேண்டும்". பள்ளிக்கூடம் என்ற வார்த்தை எடுத்ததிலிருந்து ஆஸ்திரேலியா தேசத்துப் பெண் பள்ளிக்கூடம் ஒன்றைப் பற்றிய கதை ஞாபகத்திற்கு வருகிறது. அதில் வாசித்துக் கொண்டிருந்த ஒரு ஆஸ்திரேலியப் பெண்ணை இன்ஸ்பெக்டர் வந்து பரீக்ஷை நடத்தியபோது பின்வரும் கேள்வி கேட்டாராம்:—

இந்தியா தேசத்து ஜனங்களின் சாதாரண போஜனம் எது?

அந்தப் பெண் சொல்லிய மறுமொழி:— "பஞ்சம்." வேடிக்கையான கதை.

கல்வி சம்பந்தமாக இன்னுமொரு மேற்கோள்: இன்று கிச்சடியே "மேற்கோள் கிச்சடி" தானே? மிஸ்டர் ஆர்ச்செர் என்ற ஒரு ஆங்கிலேயர் சில தினங்களின் முன்பு லண்டன் பத்திரிகை யொன்றில் கல்வியைப் பற்றி எழுதிக் கொண்டு வரும்போது, "இங்கிலாந்திலே இப்போது கல்விக்கு மூலாதாரமாக வசன காவியங்களையும், செய்யுட் காவியங்களையும், வைத்திருப்பது சரியில்லை. ஸயன்ஸ் (இயற்கை நூல்) படிப்புத்தான் மூலாதாரமாக நிற்க வேண்டும்" என்கிறார்.

இவருடைய கொள்கை பலவித ஆக்ஷேபங்களுக் கிடமானது. ஆனால், தனிப் பள்ளிக்கூடங்கள் எந்த முறைமையை அனுசரித்தபோதிலும், ராஜாங்கப் பள்ளிக்கூடத்தார் இவருடைய கொள்கையைத் தழுவியே படிப்பு நடத்தவேண்டுமென்று நான் நினைக்கிறேன். கற்பனையும் அலங்காரமும் எனக்குக்கூட மிகவும் பிரியந் தான். ஆனால்,"நெல் எப்படி விளைகிறது?" என்பதைக்

கற்றுக் கொடுக்காமல், "அன்மொழித் தொகையாவது யாது?" என்று படிப்புச் சொல்லிக் கொடுப்பதை நினைக்கும் போது கொஞ்சம் சிரிப்புண்டாகிறது. அன்மொழித் தொகை சிலரைக் காப்பாற்றும், ஊர் முழுதையும் காப்பாற்ருது. நெல்லுத்தான் ஊர் முழுதை யும் காப்பாற்றும். அன்மொழித் தொகையைத் தள்ளிவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனல் அன்மொழித் தொகையைப் பயிர் செய்து நெல்லை மறந்து விடுவது சரியான படிப்பில்லையென்று சொல்கிறேன். அவ்வளவுதான்.

## 55. ஜப்பான் தொழில் கல்வி

*12 பிப்ரவரி, 1916.*

தெளிந்த அறிவும் இடைவிடாத முயற்சியும் இருந் தால் சக்தியுண்டாகும். தெளிந்த அறிவென்பது இரண்டு வகைப்படும்—ஆத்ம ஞானம், லௌகிக ஞானம் என. ஆத்ம ஞானத்தில் நமது ஜாதி சிறந்தது. லௌகிக ஞானத்தில் நம்மைக் காட்டிலும் வேறு பல தேசத்தார் மேன்மையடைந்திருக்கிருர்கள். அப்படிப்பட்ட தேசங் களில் ஜப்பான் ஒன்று. புத்தகங்களாலும், பத்திரிகை களாலும், யாத்திரைகளாலும் நாம் ஜப்பான் விஷயங்களை நன்ருகத் தெரிந்துகொள்ளுதல் பயன்படும். கூடியவரை பிள்ளைகளை ஜப்பானுக்கு அனுப்பிப் பலவிதமான தொழில் களும் சாஸ்திரங்களும் கற்றுக்கொண்டு வரும்படி செய் வதே பிரதான உபாயமாகும். தொழில் கல்வியிலும் லௌகிக சாஸ்திரப் பயிற்சியிலும் நாம் மற்ற ஜாதியாருக்கு ஸமானமாக முயலுதல் அவசரத்திலும் அவசரம்,

## 56. சுய ஆட்சியைப் பற்றி ஒரு யோசனை

25 மே, 1916.

பாரத நாட்டுக்கு உடனே சுய ஆட்சி கொடுக்க வேண்டுமென்ற கருத்துடன் ஒரு பெரும் விண்ணப்பம் தயார் செய்து, அதில் மாகாணந்தோறும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் கையெழுத்துப் போட்டு, இந்த க்ஷணமே பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு அனுப்பவேண்டும்.

ஐரோப்பாவில் நடக்கும் யுத்த நெருக்கடியிலே நாம் உள்நாட்டுத் திருத்தங்களுக்கு மன்றுடுவதனால் நாம் ப்ரிட்டிஷ் ராஜாங்கத்துக்குச் செலுத்தவேண்டிய கடமை தவறிப் போகுமென்று சொல்லி நமது முன்னேற்றத்தைத் தடுக்க விரும்புவோரின் அர்த்தமில்லாத வார்த்தையைக் கருதி இக் காரியத்தை நிறுத்தி வைக்கலாகாது.

அயர்லாந்து, போலந்து என்ற தேசங்களின் திருஷ்டாந்தத்தைக் காட்டலாம்.

புதுச்சேரி, சி. சுப்பிரமணிய பாரதி

## 57. தெலுங்க மஹா சபை

9 ஜூன், 1917

சென்ற வெள்ளிக்கிழமையன்று நெல்லூரில் கூடிய ஆந்திர மஹாசபையில் சபாநாயகர் ஸ்ரீ வேங்கடப்பய்ய பந்துலு செய்த உபந்நியாஸம் கவனிக்கத் தக்கது. ராஜநீதி சாஸ்திரத்தில் தெலுங்கர் நெடுங்காலத்துப் பெருமை யுடையார்...............

மேற்படி கொள்கைக்கு நல்ல திருஷ்டாந்தமாக, இக் காலத்திலும் கூடத் தெலுங்கு தேசத்தார் தமிழரைக்

காட்டிலும் ராஜாங்க வ்யவஹாரங்களில் தீவிர புத்தி செலுத்துகிறார்கள். ஆனால் நமக்குள் ஜாதிபேதமிருக்கிறது என்றால் ஜாதிபேதம் இந்தியாவில் மாத்திரமில்லை, உலகத்தில் எல்லா தேசங்களிலும் இருக்கிறது. இந்தியாவில் கொஞ்சம் தீவிரமாகவும், விநோதமாகம், மாற்றுவது கஷ்டமாகவும் இருக்கிறது. இப்போது பூமி முழுவதிலும் நடந்துவரும் மஹா ப்ரளயத்தில் இந்த ஜாதிபேதம் தவிடு பொடியாகப் போய்ப் புதிய மாதிரி உண்டாகும். இதுவெல்லாம் ஏன் சொல்ல வந்தேனென்றால், தமிழ்நாட்டு ஜனங்கள் வீண் சண்டைகளிலே பொழுது போக்குகிறார்கள். தெலுங்கர் ஜனுபிவிருத்திக்கு வழியாகிய நல்ல உபாயங்களிலே புத்தி செலுத்தி வருகிறார்கள். சுதேசிய விஷயத்தில் இப்போது தெலுங்கருக்குள் இருக்கும் பக்தி சிரத்தையிலே நாலிலொரு பங்குகூடத் தமிழ் ஜனங்களிடம் இல்லை. சென்ற வெள்ளிக்கிழமையன்றுகூட மேற்படி நெல்லூர் ஆந்த்ர மஹாசபைப் பந்தலில் வந்தே மாதரம் என்ற கோஷம் அபரிமிதமாக இருந்ததென்று தந்தி சொல்லுகிறது. கொஞ்ச காலத்துக்கு முன்பு, கடலூரில் கூடிய மாஹாண சபையில் "வந்தே மாதரம்" பாட்டுக் கூடப் பாடவில்லையென்று கேள்விப்பட்டேன். தெலுங்கு ஜில்லாக்களில் ஒரு சபைகூட அப்படி நடந்திராது. இது நிற்க.

மேற்படி சபையில் வேங்கடப்பய்யா சபாநாயகராகப் பேசிய வார்த்தைகளின் ஸாரம் பின்வருமாறு:—

1. தெலுங்கு தேசத்தைத் தனி மாகாணமாகப் பிரிக்கவேண்டும்.

2. இந்தியாவுக்குத் தன்னாட்சி கொடுக்கவேண்டும்

3. இயன்றவரை, இந்தியா முழுவதையும், பாஷைகளுக்குத் தக்கபடி வெவ்வேறு மாகாணமாக்கவேண்டும்,

அதாவது, மதருஸ், பம்பாய், ஐக்ய மாகாணம், மத்ய மாகாணம், பஞ்சாப், பங்காளம் என்ற பிரிவுகளை மாற்றித் தமிழ்நாடு, தெலுங்கு நாடு, மாரட்டிய நாடு, கன்னடநாடு, ஹிந்துஸ்தானம், வங்க நாடு என்று பாஷைக்கிரமப்படி வகுக்கவேண்டும்.

4. ஸ்வபாஷைகளில் கல்விப் பயிற்சி செய்விக்க வேண்டும். ராஜ்ய காரியங்களும் இயன்றவரை ஸ்வபாஷையில் நடக்கவேண்டும்.

மேற்படி நாலம்சங்களில் முதலாவது, மூன்ருவது, நாலாவது இம்மூன்றும் ஒரு பகுதி; இரண்டாவது மற்ருெரு பகுதி. இரண்டாவது தாய்ப் பகுதி; மற்றவை கிளைப் பகுதிகளாகும்.

என்னுடைய அபிப்ராயத்தில் மேற்கண்ட கொள்கையெல்லாம், நியாயமென்றே தோன்றுகிறது. ஆனுலும், இந்த ஸமயத்தில் ஆந்திரரைத் தனிப் பிரிவாக ருஜுப்படுத்துவதைக் காட்டிலும், ஆஸேது ஹிமாசல பர்யந்தம் உள்ள ஹிந்துக்களெல்லாம் ஒன்று என்ற மூல மந்திரத்தை நிலைநாட்டுவதே அவசியமென்று என் புத்திக்குத் தோன்றுகிறது. ஹிந்துக்களெல்லாம் ஒரே கூட்டம். வேதத்தை நம்புவோரெல்லாம் ஸஹோதரர். பாரத பூமியின் மக்களெல்லாம் ஒரே தாய்வயிற்றுக் குழந்தைகள். நமக்குள் மதபேதம் ஜாதிபேதம் குலபேதம் பாஷைபேதம் ஒன்றுமே கிடையாது. இந்தக் கொள்கைதான் இந்தக் காலத்துக்கு யுக்தமானது. ஹிந்து மதத்தை உண்மையாக நம்புவோரெல்லாம் ஒரே ஆத்மா, ஒரே உயிர், ஒரே உடம்பு, ஒரே ரத்தம், ஒரே குடர், ஒன்று.

ஹிந்துக்கள் உயர்ந்த நிலைமைக்கு வரவேண்டுமானுல் ஐக்யநெறியை உடனே அனுசரிக்கவேண்டும். போன வருஷம் கீழ்க்கடலோரத்திலே பெரிய புயற்காற்றடித்தது.

ஒன்றுகூடியிருந்த வீடுகள் பிழைத்தன. தனிக் குடில்களெல்லாம் காற்றிலே பறந்துபோயின. உலகத்தில் புதிய ஞானம், புதிய வாழ்க்கை, புதிய அறம், புதிய நெறி தோன்றக்கூடிய காலம் பிறந்துவிட்டதென்று மேதாவிகளெல்லாம் ஒருங்கே சொல்லுகிறார்கள். இங்ஙனம் புதிய ஞானம் பிறக்க வேண்டுமானால் அதற்கு ஹிந்து மதமே முக்ய ஸாதனமென்று நாம் சொல்லுகிறோம். ஸ்வாமி விவேகாநந்தர், ரவீந்திரநாத டாகுர், ஜகதீச சந்திர வஸு முதலிய பெரியோர்களும் அங்ஙனமே சொல்லுகிறார்கள். இந்த ஸமயத்தில் ஹிந்துக்கள் பிரிவு பேசலாமோ? ஹிந்துக்கள் பிரிந்துகிடந்தால், ஹிந்து தர்மத்தின் மஹிமையை உலகத்தார் காண்பதெப்படி?

ஹிந்து தர்மம் பெருமாள் கோயிலைப்போலே; நிற்பது எங்கே நின்றாலும் அத்தனை பேருக்கும் ப்ரஸாதமுண்டு. பகவத் ஸந்நிதியில் ஜாதிபேதமில்லை. அத்தனை பேரும் கலந்து நிற்கலாம். ஹிந்து தர்மம் சிதம்பரத்தைப் போலே. அதனுள்ளே, பறையரும் ஒளியில் கலந்து விடலாம்.

## 58. கூடித் தொழில் செய்

இங்கிலீஷ், ஸமஸ்கிருதம், தமிழ் என்ற பாஷைகளில் ஏதேனும் ஒன்று படித்து யாதொரு உத்தியோகமுமில்லாமல் சும்மா இருக்கும் பிள்ளைகளுக்கு நான் ஒரு யோசனை கண்டுபிடித்துக் கொடுக்கிறேன். இஷ்டமானால் அனுசரிக்கலாம், அனுசரித்தால் லாபமுண்டு.

கூடி வினை செய்வார்
கோடி வினை செய்வார்

கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து, கிராமந்தோறும் யாத்திரை செய்யுங்கள். ஊரூராகப் போய் பள்ளிக் கூடங்கள் போடுவதே கைங்கரியமாக வைத்துக்கொள்ளுங் கள். ஆரம்பத்தில் வண்டிச் செலவுக்குப் பணமில்லை யானால் நடந்து போகவேண்டும். மற்றபடி ஆஹார வ்யவஹாரங்களுக்கு நமது பூர்வ மதாசார்யார்களும், தம்பிரான்மாரும், ஞானிகளும், சித்தர்களும், பக்தர்களும் செய்தபடியே செய்யுங்கள். எங்கே போனாலும் உயர்ந்த மதிப்பும், உபசாரங்களும் ஏற்படும். கூட்டத்துக்கு விருந்து காட்டிலேகூடக் கிடைக்கும். அங்கங்கே திண்ணைப் பள்ளிக்கூடங்களும், குடிசைப் பள்ளிக்கூடங்களும் போட்டுத் திறமையுடையோரை வாத்தியாராக நியமித்துக் கொண்டு போகலாம். யாத்திரையின்பம், தேசத்தாரின் ஸத்காரம், வித்யாதான புண்யம், சரித்திரத்தில் அழியாத கீர்த்தி இத்தனையும் மேற்படி கூட்டத்தாருக்குண்டு. படிப்பு எல்லா மதங்களுக்கும் பொது. எல்லா தேசங் களுக்கும் பொது. எல்லா ஜாதிகளுக்கும் பொது. திருஷ் டாந்தமாக, ஐரோப்பியர் அதிகப் பயிற்சி செய்திருக்கும் ரஸாயனம் முதலிய சாஸ்த்ரங்கள் நமக்கு மிகவும் அவஸரம். எவ்விதமான பயிற்சிக்கும் தேச பாஷைகள் எழுதவும் படிக்கவும் செய்விப்பதே ஆதாரமாகும். அதை முதலாவது வேரூன்றச் செய்யவேண்டும். ஹிந்துப் பிள்ளைகளே, உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு. கூட்டங் கூடி நாட்டைச் சுற்றுங்கள். தமிழ் வளர்ந்தால் தர்மம் வளரும். பிராமணர் முதலாகப் பள்ளர் வரை யிலும், எல்லா ஜாதிகளிலும், எழுதப் படிக்கத் தெரிந்த வர்கள் மிகுதிப்பட்டால் அநாவசியப் பிரிவுகள் நிச்சய மாகக் குறைவுபடும். நமக்குள் கைச்சண்டை மூட்டி விடுவோரையும், பாஷைச் சண்டை, சாதிச் சண்டை மூட்டிவிடுவோரையும் கண்டால் ஜனங்கள் கைகொட்டிச்

சிரிப்பார்கள். ஹிந்துக்களாகிய நாமெல்லாரும் ஒரே கூட்டம், ஒரே மதம், ஒரே ஜாதி, ஒரே குலம், ஒரே குடும்பம், ஒரே உயிர் என்பதை உலகத்தார் தெரிந்து கொள்ளுவார்கள். அதனுல் பூமண்டலத்துக்கு க்ஷேம முண்டாகும்.

## 59. ஹிந்து மகம்மதிய ஒற்றுமை

இந்த விஷயத்தைப் பற்றி ஓங்கோல் என்ற ஊரில் வக்கீல் வேலை பார்க்கும் நாராயண சாஸ்திரி என்பவர் 'ஹிந்து' பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறுர். ஹிந்து—மகம்மதியருக்கிடையே பரஸ்பர மதிப்பும் அன்பும் அதிகப்படும்படி செய்வதற்கு அவர் சில வழிகள் குறிப்பிடுகிறுர்.

அவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு :—

1. ஹிந்துக்களில் சிலர் மஹம்மதிய வேத சாஸ்திரங்களைப் படித்து அவற்றிலே தேர்ச்சி பெற வேண்டும்.
2. அங்ஙனமே, மஹம்மதியர்களில் சிலர் ஸமஸ்கிருதம் படித்து ஹிந்துக்களுடைய வேத சாஸ திரங்களை அறிந்துகொள்ள வேண்டும்.
3. ஹிந்துக்களுடைய மனத்திலே மஹம்மதியர் நமது தேசத்தார் என்பதும், இஷ்ட தேவதை வேருக இருப்பதைப்பற்றி அவர்களை மிலேச்சரென்று நினைப்பதுகூடப் பிழையென்பதும் நன்ருக ஞாபகமிருக்கவேண்டும்.
4. மஹம்மதியரும் அங்ஙனமே ஹிந்துக்களை காபிர் (அவிசுவாஸிகள்) என்று நினைப்பது பெரிய தவறென்று தெரிந்துகொள்ளவேண்டும்.

5. விவாகம் முதலிய சோபன காலங்களில் ஹிந்துக்கள் மஹம்மதியரையும், மஹம்மதியர் ஹிந்துக்களையும் அழைத்து உபசாரங்கள் செய்து, தனியாக விருந்துகள் செய்து வைக்கவேண்டும். ஹிந்துக்களுக்குள்ளே ஜாதிக் கட்டுகள் இருப்பதைப்பற்றி மஹம்மதியர் அருவருப்புக்கொள்ளக் கூடாது.

இங்ஙனம் ஸ்ரீ நாராயண சாஸ்திரி சொல்வதை நாட்டிலுள்ள ஹிந்து மஹம்மதியத் தலைவர்கள் கவனித்து அந்தந்த இடங்களிலேயே இயன்றவரை இரு திறத்தாருக்குள்ளேயும் ஸஹோதர உணர்ச்சி மேன்மேலும் பெருகி வருவதற்கு வேலை செய்தால் தேசத்துக்கு அளவிறந்த நன்மையுண்டாகும்.

## 60. ஸ்வராஜ்யம்

5 அக்டோபர், 1918

சென்னை "ஹிந்து" பத்திரிகையின் லண்டன் நிருபர் எழுதிய கடிதமொன்றில் "அமெரிக்காவும், ஐர்லாந்தும், இந்தியாவும்" என்ற மகுடத்தின் கீழே ஒரு குறிப்பெழுதியிருக்கிறார். அதில் அமெரிக்கா ஸ்வாதீனமடைந்த திருநாளாகிய ஜூலை நாலாந்தேதி கொண்டாட்டங்கள் ஆங்கிலேயர்களாலேயே இங்கிலாந்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்ட செய்தியைக் குறித்துப் பேசுகிறார். [இங்கிலீஷ் ராஜ்யத்தை எதிர்த்துப் போர்புரிந்து வெற்றி பெற்று (யுனைடெட் ஸ்டேட்ஸ்) அமெரிக்க ஐக்கிய நாடுகள் 1776ஆம் வருஷம் ஜூலை மாஸம் நாலாந்தேதியன்று விடுதலைக் கொடி நாட்டின] மேற்படி லண்டன் நிருபர் எழுதுகிறார்.

"இன்று ஜூலை நாலாந்தேதியன்று (ஆங்கிலேய ராகிய) நாமெல்லோரும் நம்முடைய அமெரிக்க ஸகோதர ருடன் கலந்து ஐக்ய நாடுகளின் விடுதலையை ஆவலுடன் கொண்டாடுகிறோம்."

இன்று ஆங்கிலேயர் சொல்லும் வார்த்தைகளையும், செய்யும் செய்கைகளையும் 142 வருஷங்களுக்கு முன்பு சொல்லியும், செய்துமிருப்பார்களாயின் தேசத்துரோகி களென்றும், கலக்காரரென்றும் சொல்லி மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும். இதனைப் பல ஆங்கிலேயர் இப்போது நினைத்திருக்கக்கூட மாட்டார்கள். அதே ஆங்கி லேயரில் சிலர் இக்காலத்தில் "விடுதலை பெற நியாயமாகப் போராடும்" வேறு சில ஜாதியார் விஷயத்தில் என்ன மாதிரியான வார்த்தை சொல்லுகிறார்கள்?

இங்கு ஒரு முக்யமான பேதத்தை மேற்படி லண்டன் நிருபர் மறந்து விட்டார். ஐக்ய நாடுகள் விடுதலைக்காகப் படை சேர்த்துப் போர் புரிந்து ப்ரான்ஸ் தேசத்தின் உதவி யால் இங்கிலாந்தை வென்றன. ஐர்லாந்து கலகங்கள் செய்து விடுதலை பெற முயன்று வருகிறது.

இந்தியாவோ அப்படியில்லை. ஆங்கிலேயரிடமிருந்து ஸமாதானமாகவே ஸ்வராஜ்யம் சட்டத்துக்கிணங்கிய முறைகளால் பெற விரும்புகிறது.

"உபாயத்தால் ஸாதிக்கக் கூடிய காரியத்தைப் பராக் கிரமத்தால் ஸாதிக்கமுடியாது" என்று பஞ்ச தந்திரம் கூறுகிறது. மேலும் நமக்கு ஆங்கிலேயர் ஸமாதான மாகவே ஸ்வராஜ்யம் கொடுத்து விடுவார்கள் என்று நினைப்பதற்குக் காலதேசவர்த்தமானங்கள் மிகவும் அனு கூலமாகவே யிருக்கின்றன.

எங்ஙனமெனில் மந்திரி மிஸ்டர் மான்டேகுவும், ராஜபிரதிநிதி லார்டு செம்ஸ் போர்டும் சேர்ந்து தயார் செய்திருக்கும் சீர்திருத்த ஆலோசனைப் புஸ்தகத்தில் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றனர். "இந்தியாவின் எதிர்கால நிலை டில்லி நகரத்திலேனும் ஸிம்லாவிலேனும் வைட் ஹாலிலேனும் நிச்சயிக்கப் படுவதன்று. ப்ரான்ஸ் தேசத்துப் போர்க்களங்களிலே நிச்சயிக்கப்படும்" என்கின்றார்கள்.

இங்ஙனம் மந்திரியும் ராஜப்பிரதிநிதியும் கூறுவதன் பொருள் நமக்குத் தெளிவாக விளங்கவில்லை. எனினும் நேசக் கக்ஷியாருக்கு வெற்றி கிடைத்தால் நமக்கு ஸ்வராஜ்யம் கொடுக்க முடியுமென்று அவர்கள் சொல்வதாகவே நாம் பொருள் கொள்ள நேர்கிறது.

இதனிடையே இந்தியாவில் இந்து மஹமதிய பேதங்களிருப்பதாகக் காட்டி அதனின்றும் இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் கொடுக்கத் தகாதென்று சொல்லும் ஆங்கிலோ இந்தியப் பத்திராதிபர் முதலிய வெளிநாட்டு, உள்நாட்டு துரோகிகள் எல்லார் வாயிலும் ஸ்ரீமான் ஸய்யது ஹஸேன் இமாம்—நமது விசேஷ ஜன சபைக் கூட்டத்தின் அதிபதி—மண்ணைக் கொட்டி விட்டார். "எல்லா வகுப்புகளும் இப்போது கொண்டிருக்கும் ஐக்ய புத்தியையும், எல்லார் நலமும் ஒன்றென்ற கருத்தையும் எதிர்க்க முடியாது" என்று அவர் சொல்லுகிறார்.

மேலும் இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் மிகவும் அவசியமென்பதை விளக்கிக் காட்டும் பொருட்டாக நீதி நிபுண ஸய்யது ஹஸேன் இமாம் ஸாஹப் சொல்லும் பின்வரும் வாக்கியங்களுக்கு ஆங்கிலோ இந்தியப் பத்திராதிபர் என்ன மறுமொழி சொல்லக்கூடும்? ஹஸேன் இமாம் கூறுகின்றார்:—

"எல்லாவிதமான அன்னியாதிபத்தியங்களைக் காட்டிலும் ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தார் மீது செலுத்தும் அன்னியாதிபத்தியம் மிகக்கொடியது என்று மக்காலே சொன்னார். இது மக்காலே காலத்தில் எத்தனை உண்மையோ, அத்தனை இக்காலத்திலும் உண்மையே. அவர் வார்த்தை மற்ற தேசங்களுக்கு எவ்வளவு பொருந்துமோ அத்தனை இந்தியாவுக்கும் பொருந்தும். அன்னிய நுகத்தடியின் கஷ்டத்தை இந்தியா உணர்கின்ற தென்பதை மறுத்தல் மூல ஸத்யங்களைப் பார்க்க மாட்டோமென்று கண்ணை மூடிக் கொள்வதேயாகும். இந்தியாவில் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தை ஆதரித்துப் பேசுவோர் இந்நாட்டிற்கு ப்ரிட்டிஷார் பரோபகாரசிந்தனை கொண்டுமட்டும் வந்ததாகச் சொல்லுகிறார்கள். இந்நாட்டு ஜனங்கள் தமக்குத் தாமே தீங்கு செய்து கொள்ளாமல் காக்கும் பொருட்டாகவும், நம்மவரின் தர்ம நியாயத்தை உயர்த்தும் பொருட்டாகவும் லௌகிகச் செல்வம் ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டாகவும், இது போன்ற பல காரணங்களின் பொருட்டாகவும் அவர்கள் இங்கு வந்ததாகச் சொல்லப் படுகிறது. இவையெல்லாம் பக்ஷபாதிகள் வழக்கமாகச் சொல்லும் அரைமொழிச் சொற்களேயாம். உண்மை யாதெனிலோ, ஈஸ்ட் இந்தியா கம்பெனி ஏற்படுத்தப் பட்டது, இந்தியாவின் நன்மைக்காக அன்று. இந்தியாவினின்றும் பணத்தை ஏராளமாய்த் திரட்டிக் கொண்டு போய் ப்ரித்தானியாவுக்கு நன்மை செய்யும் பொருட்டாக ஏற்பட்டது. பொன்னாசையுடன் மண்ணாசையும் கலந்தது. பிறகு கம்பெனியாரிடமிருந்து அரச மகுடத்தின் கீழே கொண்டுவரப் பட்டபின் பொருளாசையும் அதிகார ஆவலும் ஆட்சி செய்வோருக்குக் குறைவுபடவில்லை. பேதம் யாதெனில், யதேச்சாதிகாரத்தை இப்பொழுது ஒழுங்குப்படி நடத்துகிறார்கள்.

அந்தக் கொள்ளை சாஸ்த்ர தோரணையில் நடந்து வருகிறது!" என்று நம்முடைய ஜன சபைத் தலைவர் சொல்லுகிறார். "இவையெல்லாம் ஜனங்களுக்குத் தெரியும். இது அவர்கள் நெஞ்சை உறுத்துகிறது. எனவே பண்டைச் செயல்களுக்கெல்லாம் இப்போது (ஆங்கில அதிகாரிகள்) பரிகாரம் அல்லது ப்ராயச்சித்தம் செய்ய வேண்டுமென்று ஜனங்கள் கேட்கிறார்கள்" என்று கூறி ஸய்யது இமாம் முடிக்கிறார். இதுதான் விஷயம் முழுவதும்.

இவ்வித அதிகாரிகளின் கையினின்று நம்மை மீட்டு நமக்கு ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டுமென்று மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியிடம் அழுத்தமாகப் ப்ரார்த்தனை செய்கிறோம்.

எங்களுக்கு உடனே ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டுமென்று வணக்கத்துடனும் எங்களுடைய பரிபூரண ஜீவ பலத்துடனும் ப்ரார்த்தனை செய்து கொள்ளுகிறோம்.

## 61. இதன் பெயரென்ன?

(குறிப்புகள் என்ற கட்டுரைப் பகுதி)

*21 ஜனவரி 1920*

லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையில் ஸர் வாலன்டைன் கிராஸ் பின்வருமாறு பரிதபிக்கிறார்:—

பத்து வருஷங்களின் முன்னே டில்லி நகரத்துக்கு வெளியே, இந்தியாவில், பண்டு இஸ்லாமிய ஆதிக்கமிருந்ததற்குச் சிறந்ததொரு சின்னமாகிய குதுப்மினார் என்ற கோரியின் கீழே ஒரு நாள் காலையில் சில மஹமதிய நண்பர்கள் என்னோடு ஸம்பாஷணை செய்து கொண்டிருந்தனர். இனி இந்திய ஸ்வராஜ்யமும், ஹிந்து ஆதிக்கமும்

நேர்ந்தால் இந்திய மஹமதியரின் கதி என்ன ஆகுமோ என்றெண்ணி அவர்கள் பெருமூச்செறிந்தார்கள். இன்றைக்கு அவர்களில் சிலர் ஸ்ரீமான் காந்தியின் பரம சிஷ்யர்களாக இருக்கிறார்கள். இன்றைக்கு எங்கு பார்த்தாலும் 'ஹிந்து முஸ்லிம்கீ ஜய்' என்ற சத்தம் பிறந்து விட்டது. மஹமதியர்களில் மசூதிகளுக்குள் ஹிந்துக்கள் உபந்யாசர்களாய் முஸ்லிம்களுக்கு ஸ்வராஜ்ய உபதேசம் பண்ணுகிறார்கள். டில்லி நகரத்தில், சில தினங்களின் முன்பு உலோமாக்களின் ஸர்வ பாரத ஸங்கம் நடைபெற்றபோது அங்கு ஸ்ரீ காந்தி விருந்தாளியாகச், சென்றிருந்தார். இதைக்காட்டிலும் விநோதமான செய்தி ஹிந்துக்களின் கொள்கைக்கிணங்கி முஸல்மான்கள் முக்யமான உத்ஸவ காலங்களில் பசுக்களை விட்டு ஆடுகளைக் கொல்ல உடம்பட்டதாகும். ஆனால் இப்படிச் செய்யலாமென்று அக்பர் சக்கரவர்த்தி விதித்திருக்கிறார்."

என்று மேன்மேலும் ஸர் வாலன்டைன் தமது மன வருத்தத்தை விஸ்தரித் தெழுதிக்கொண்டு போகிறார். பொறாமையும் வயிற்றெரிச்சலும் இந்த வார்த்தைகளில் கொழுந்து விட்டெரிகின்றன. இப்படிப்பட்ட மனோபாவ விலாஸங்களை இங்கிலாந்தில் ப்ரகடனம் செய்வதனால் யாருக்கென்ன பயன் விளையுமென்று டைம்ஸ் பத்திரிகை அதிகாரிகள் நினைக்கிறார்கள் என்பதை நம்மால் ஊஹிக்க முடியவில்லை.

ஆனால் தேசீய பாடசாலைகளில் ஹிந்து மத கிரந்தங்களுக்குத் தக்கபடி கல்வி கற்பிக்கப்படுமாதலால் அப் பாடசாலைகள் முஸல்மான்களுக்குப் பயன்பட மாட்டா வென்று ஸர் வாலன்டைன் சொல்லும்போதுதான். அவர் நம்பிக்கையின் வரம்புக்கு வெளியே பஹிரங்கமாக

வந்து நிற்கிறார். ஏனெனில் தேசீயப் பாடசாலைகளில் முஸ்லிம் பிள்ளைகளுக்கு முஸ்லிம் மத நூல்களே உப தேசிக்கப்படு மென்பது ஸகலருக்கும் தெரிந்த விஷயம்.

## 62. ஐர்லாந்தும் இந்தியாவும்

*19 ஜுலை 1921*

மஹாயுத்தம் நடக்கும் காலத்தில், எடிஸன் என்ற அமெரிக்க மின்ஸார சாஸ்திரியின் விலையுயர்ந்த ஆராய்ச்சிக் கூடமொன்று தீப்பட்டெரிந்து போயிற்று.

அதுபற்றிச் சில நண்பர்கள் அவரிடம் துக்க விசாரணை புரிந்து கடிதமெழுதியிருந்தார்கள். அதற்கவர் சொன்னார்: "என் கஷ்டம் ஒரு கஷ்டமா! அதோ! ஜெர்மனியில் கைஸர் சக்கரவர்த்தி இருக்கிறார், பாருங்கள். அவர் ஒருவரையும், அவருடைய பலமற்ற துணைவர் ஓரிருவரையும் எத்தனையோ அரசுகள் கூடி எத்தனையோ வகைகளாகப் போர் புரிகின்றன. அந்த ஒரு மனிதர் என்ன செய்வார், பாவம்! எனவே எனக்கு ஏதேனும் ஸங்கடம் நேரும் போதெல்லாம் நான் நம்மைக்காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிக பயங்கரமான விபத்துக்களாலே சூழப் பட்டிருக்கும் கைஸரை நினைத்து மனந்தேறுகிறேன்" என்றாராம்.

அக் காலத்தில் இக் கதை வெளியிடப்பட்டிருந்தது தொடர்ச்சியாகப் பத்திரிகை படித்துவரும் நண்பர்களிலே பலருக்கும் ஞாபகமிருக்கலாம். அதுபோல் இந்தக் காலத்தில் நாம் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜைச் சூழ்ந்திருக்கும் ஸங்கடங்களின் தொகையையும் அளவையும் கருதி நம்முடைய கஷ்டங்களை மறக்க முடியுமென்று தோன்றுகிறது.

ஐர்லாந்துக்கு ஏறக்குறை இந்த முறை ஸ்வராஜ்யம் கொடுத்துத்தான் தீரவேண்டுமென்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் அமெரிக்கா சும்மாவிடாது. கனடா சும்மா விடாது. ஆஸ்திரேலியா, தென் ஆபிரிகா, நியூஜிலாந்து முதலிய குடியேற்ற நாடுகள் பொறுத்திருக்க மாட்டா. ப்ரான்ஸிடம் விடுதலைப் ப்ரஸங்கங்களை விரிக்க இங்கிலாந்துக்குச் சிறிதேனும் இடமில்லாமற்போய்விடும். உலக முழுமையிலும் அபகீர்த்தி முற்றும். இங்கிலாந்தின் சத்துருக்கள் பெருமகிழ்ச்சியடைய ஹேது உண்டாகும். இத்தனை உதவிகளுமில்லாது போயினும் இப்போது ஸ்வராஜ்யம் கொடுக்காவிட்டால், ஐர்லாந்து சும்மா இராது. ஸ்வராஜ்யத்தை வற்புறுத்தும் பொருட்டு ஐர்லாந்தியர் ஐர்லாந்திலும், லண்டன், செஸ்டர் முதலிய நகரங்களிலும் என்ன காரியங்கள் செய்து வந்தனரென்பதும், அதனுல் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் முதலியோருக்கு நேர்ந்த அஸௌகர்யங்கள் எவையென்பதும் நேயர்களுக்குத் தெரிந்த ஸங்கதிகளேயாம்.

இத்தனை பலாத்காரங்களைக் கருதி ஸ்வராஜ்யம் கொடுத்துத் தொலைப்போம் எனிலோ, வட ஐர்லாந்து முதல் மந்திரியாகச் சில தினங்களின் முன்னே முளைத்திருக்கும் ஸர்ஜேம்ஸ க்ரேக் ஏற்கெனவே போர்க்கொடியைத் தூக்கிவிட்டார். அல்ஸ்டர் மாகாணத்துக்குத் தனி பார்லிமெண்ட் சாசுவதமாக இருக்குமெனில், பிறகு ஐரிஷ் ஸ்வராஜ்யம் என்பதற்கு அர்த்தமே கிடையாது. ஐர்லாந்தை இரண்டாக வெட்டிப் பிறகு ஸ்வராஜ்யம் கொடுப்பதென்றுல், என்ன செய்கை அது!

அஃதொருவனை இரண்டாக வெட்டிக் கொன்ற பின்னர் அவனுக்கு மணம் புரிவிப்பதாகக் கூறுதல் போலும். எனவே, அல்ஸ்டர் என்றொரு பதார்த்தம்

இருப்பதன் உண்மையை நன்குணர்ந்த ஸ்ரீமான் தெவலேரா, தாம் தமது குடியரசுக் கொள்கையை விட்டு "ஸ்மட்ஸ்" ஸ்வராஜ்யத்தை அங்கீகரிக்க ஆயத்தமாக இருப்பதாகவும். ஆனால் அல்ஸ்டர் தனது தனிப் பார்லிமெண்டை விட்டுவிட வேண்டுமென்றும் வற்புறுத்தினர். இங்ஙனமிருக்க, முன்பு யூனியனிஸ்ட் தலைவராக இருந்து இங்கிலீஷ் கவர்ன்மெண் டினிடமுள்ள அளவிறந்த பக்தியால் அதனை எதிர்த்துப் போர் செய்யப் படைகள் தயார் செய்தவராகிய ஸர் எட்வர்ட் கார்ஸனுடைய பட்டத்தில் இப்போதிருக்கும் அல்ஸ்டர் ப்ரதம மந்திரியான ஜேம்ஸ் க்ரேக் லண்டன் சமாதான ஸங்கத்திற்குத் தம்மை ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் அழைத்திருப்பதைக் குறித்துப் பேசிய உதாஸீன மொழிகளை ராய்ட்டர் தந்திகளிடையே காணலாம்.

இங்கிலாந்திலும் லார்ட் டெர்பி முதலியவர்கள் மிஸ்டர் ஜ்யார்ஜைக் கடலில் கவிழ்த்து விடுவதற்குரிய யோசனைகள் இப்போது தீவிரமாகப் புரிவதன் காரணம் ஐர்லாந்துக்கு அவர் ஸ்வராஜ்யங் கொடுத்துவிடுவாரோ என்ற பயத்தாலே யன்றிப் பிறிதில்லை.

கான்ஸர்வடிவ் கக்ஷியார் கைவிட்டால் பிறகு மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜுக்கு பஸிபிக் சமுத்திரந்தான் கதி.

இங்ஙனம் ஐர்லாந்து விஷயத்தில் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் இருதலைக் கொள்ளி எறும்பு போல இடர்ப்படுதல் ஒருபுறமிருக்க இந்த சமயத்தில் இந்தியராகிய நாமும் அவரிடம் ஒரு செய்தியை மிக நன்கு வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்.

அதாவது ஐர்லாந்தைச் சென்ற பல நூற்றாண்டு காளாக மீட்டும் மீட்டும் போரில் அடக்கி, அதன் விடுதலை வேட்கையை மறுத்து வந்தீர்கள். ஐர்லாந்து மிகச்சிறிய

நாடு. உண்மையில், இப்போது கூட இங்கிலாந்தினாலே ஐர்லாந்தைப் போரில் மடக்கி விடமுடியும்!

அப்படியிருந்தும், உலக முழுமையிலும் எழுச்சி பெற்றிருப்பதாகிய, பெரிதோர் தர்மக் கிளர்ச்சியை முன்னிட்டு ஐர்லாந்துக் கூட இனி ஸ்வராஜ்யமில்லை என்று மறுத்தல் இங்கிலாந்துக்கு ஸாத்யப் படாதென்று தீர்ந்து போய்விட்டது.

அப்படியிருக்க, 5000 வருஷங்களுக்கு முன்னே வேதாந்தப் பயிற்சி செய்தது; முப்பது கோடிஜனங்களுடையது; இன்றைக்கும் ஜகதீச சந்திரர் முதலியவர்களின் மூலமாக உலகத்தாருக்கு நாகரிகப் பாதையிலே வழி காட்டுவது பூமண்டல சரித்திரத்திலே வீரம் முதலிய ராஜ குணங்களில் நிகரற்றதாகிய இந்தியாவுக்கு விடுதலை எப்போது தரப்போகிறீர்கள்?

## 63. நெல்லிக்காய் கதை

நான் சிறு குழந்தையாக இருக்கும்போது, ஹிந்துக்களைப்போலே ஒற்றுமைக் குறைவான கூட்டத்தார் உலகத்தில் வேறெந்த தேசத்திலும் இல்லையென்றும், ஹிந்துக்கள் நெல்லிக்காய் மூட்டைக்குச் சமானமென்றும் சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். பிறகு, உலகத்திலுள்ள வேறு பல தேசங்களின் பூர்வ சரித்திரத்தையும் தற்கால இயல்பையும், பலவிதங்களில் ஆராய்ச்சி செய்து பார்த்ததில் மேற்படி வார்த்தை தவறு என்று தெரிந்தது. கிழக்கே, மேற்கே, தெற்கே, வடக்கே உலகத்திலுள்ள எந்த ராஜ்யத்தைப் பார்த்போதிலும் அங்கு பணமும் அதிகாரமும் இருக்கும்வரை, மனிதர் பரஸ்பர விரோதங்களையும் பொறாமைகளையும் உள்ளே அடக்கி வைத்துக்கொண்டு

ஒருவிதமான வெளியொற்றுமை பாராட்டித் திரிகிறார்கள். இருந்தாலும், நாலடியாரில் சொல்லியபடி,

"அட்டுற யார்மாட்டும் நில்லாது
செல்வம் சகடக்கால் போலவரும்"

லக்ஷ்மீதேவி எந்த இடத்திலும், ஒரே நிலையாக நிற்பது வழக்கமில்லை. செல்வமும் அதனாலுண்டான பெருமையும், ஒரு கூட்டத்தாருக்கிடையே குறைவுபடும்போது, உட்பொறாமையும் மாற்சரியமும் வெளிப்பட்டுத் தலைதூக்கி ஆடுகின்றன. உலக சரித்திரத்தை அறிவுடன் படித்த புத்திமான்கள் இதனை நன்றாக அறிவார்கள்.

## இந்துக்களின் சிறப்பு

ஆனால், இவ்விஷயத்திலேகூட, மற்ற தேசத்தாரைக் காட்டிலும் ஹிந்துக்கள் மேலென்று எனது விசாரணையில் தென்படுகின்றது. ஏனென்றால் ஹிந்துக்களிடம் தெய்வ பக்தி என்ற சிறந்த குணம், மற்றெல்லா தேசத்தாரைக் காட்டிலும் அதிகமென்பதை மேற்குப் பக்கத்துப் பண்டிதரிலே கூடப் பக்ஷபாதமற்ற பல யோக்கியர் கண்டு பிடித்துச் சொல்லியிருக்கிறார்கள். தெய்வ பக்தியினால் ஜீவதயை உண்டாகிறது.

"எல்லாரும் இன்புற்றி ருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"

என்று தாயுமானவர் தமது தெய்வ பக்தியின் உண்மையை விளக்கினார்.

சென்ற கார்த்திகை மாதம், புயற்காற்றடிப்பதைப் பற்றி, தென்னாற்காடு ஜில்லாவைச் சோதனை செய்த ஸர்க்கார் அதிகாரியான ஓர் ஆங்கிலேயர் தம்முடைய அறிக்கையில், ஹிந்து ஜனங்களுடைய விசேஷ ஜீவதயை

அதிதி ஸத்காரம் என்ற குணங்களை மிகவும் புகழ்ந்து பேசி யிருக்கிறார். காற்றடித்த இரவில் சில வைதிக பிராமணர் தமது வீட்டிற்குள் பறையர் வந்திருக்க இடங் கொடுத்த தாகப் பத்திரிகைகள் கூறின. ஏழைகளாக நம்மைச் சூழ்ந் திருப்போர் சிவனுடைய கணங்கள், நாராயணனுடைய மக்கள், முருகனுக்குத் தோழர், சக்தியின் அவதார ரூபம். பரமசிவன் சண்டாள ரூபத்துடன் சங்கராசார்யாருக்கு ஸமத்துவ ஞானத்தை ஊட்டினார். ஸ்ரீரங்கத்தில் எம்பெரு மான் கடைக்குலத்தவராகிய திருப்பாணாழ்வாரை பரிசாரக வேதியன் முதுகிலே சுமந்துகொண்டு வந்து தனது கர்வ நோயைத் தீர்த்துக் கொள்ளும்படி கட்டளையிட்டருளினார்.

சந்திரனில் ஒரு களங்கம்—
ஆனால் தீர்க்கக் கூடியது.

சந்திரனுக்குள் ஒரு களங்கம் இருப்பதுபோல், இப்போது நம்முடைய கூட்டத்தில் ஒரு களங்கமிருக்கிறது. ஆனால் பூத சந்திரனில் உள்ள களங்கத்தை அது தானே மாற்றிக்கொள்ளாது. ஞான சூரியராகிய ஹிந்துக்கள் தமக்குள்ள குறையை விரைவாக நீக்கி வருகிறார்கள். அந்தக் களங்கமாவது நமது ஜாதிக் கட்டிலுள்ள சில வழக்கங்கள். மறுபடி தெய்வத்தை நம்பி எல்லோரும் இன்புறவேண்டி குண கர்மங்களால் வர்ண நிச்சயம் செய்து கொண்டு, பூமண்டலத்துக்கு ஞானோபதேசம் செய்யும் பொருட்டாக பாரத தேவி தனது பத்மாஸனத்தில் வீற்றிருக்கிறாள். காலம் ஹிந்துக்களின் சார்பில் வேலை செய்கிறது. தேவர்களெல்லோரும் ஹிந்துக்களைக் கை தூக்கிவிடப் புறப்பட்டிருக்கிறார்கள். பரமாத்மா ஒன்று. அவனுக்கு ரிஷிகள் பல பெயர் சொல்லிப் போற்றுகிறார் களென்று வேதம் சொல்லுகிறது.

"பேரானந்தம் பேசி மறையனந்தஞ் சொலும்
பெரிய மௌனத்தின் வைப்பு"

என்று தாயுமானவர் காட்டினர். ராமகிருஷ்ணர் இதையே சொன்னர். இந்த உண்மை ஹிந்துக்களுடைய புத்தியில் வேரூன்றிவிட்டது. எனவே, கலி நீங்கிவிட்டது.

## பலாப்பழம்

நெல்லிக்காய் மூட்டையைப் பற்றி இப்போது யாரும் பேசுவதில்லை. நெல்லிக்காய் கொடுத்தால் எல்லோரும் வாங்கித் தின்கிறார்கள். ஆனால், ஹிந்துக்கள் நெல்லிக் காய் மூட்டை போலென்று சொல்வோனைக் கண்டால் எல்லோரும் கைகொட்டிச் சிரிப்பார்கள். இந்து தேசம் ஒரு தேவலோகத்துப் பலாப்பழத்தைப் போலாகிவிட்டது. இனியென்றும் அழியாத பலாப்பழம். ஒவ்வொரு ஆர்ய னும் அதில் முளைத்தவன். நாம் எல்லோரும் சேர்ந்து அந்தப் பலாப்பழத்தின் மேல் தோல், உள்ளே ஞானச்சுளை. நாக்கு அழிவில்லை. நமக்குள்ளே பிரிவில்லை. நாமொன்று. நாம் எப்போதும் தெய்வத்தை நம்புகிறோம். தெய்வத்தை நம்பி நாம் அறத்தைச் செய்தால், நம்முடைய யோக க்ஷேமங்களை தெய்வம் ஆதரிக்குமென்று பகவத் கீதை சொல்லுகிறது.

## 64. இருள்

வித்யா நகரம் என்ற பட்டணத்தில், எண்ணூறு வருஷத்துக்கு முன், திடசித்தன் என்று ஒரு ராஜா இருந் தான். அவனுடைய பந்துக்களிலே சிலர் விரோதத்தினல் அவனுக்குப் பல தீங்குகள் செய்யலாயினர். ஒரு நாள் அவன் நித்திரை செய்யும்போது எதிரிகள், அரண்மனை வேலைக்காரரிலே சிலரை வசமாக்கி உள்ளே நுழைந்து அவன் கால்களைக் கட்டி எடுத்துக்கொண்டு போய், சமீபத்திலிருந்த மலைச்சாரலில் ஒரு குகைக்குள்ளே

போட்டு வெளியே வர முடியாதபடி ஒரு பாறையால் மூடி வைத்து விட்டார்கள். இவ்வளவுக்குமிடையே அவன் கண் விழிக்காதபடி மூக்கிலே ஒரு மயக்கப் பச்சிலையின் சாற்றைப் பிழிந்துவிட்டார்கள்.

நெடுநேரம் கழிந்த பிறகு, பச்சிலையின் மயக்கம் தெளியவே அரசன் கண்ணை விழித்துப் பார்க்கும்போது, கை கால்கள் கட்டுண்டு, தான் பேரிருளிலே கிடப்பதை உணர்ந்து கொண்டான். "எங்கிருக்கிறோம்?" என்று சிந்தித்தான். இடம் தெரியவில்லை. "நமக்கு யார் இவ்வித மான தீமை செய்திருக்கக் கூடும்?" என்று யோசனை செய்து பார்த்தான். ஒன்றும் தெளிவாக விளங்கவில்லை. எழுந்து நிற்க முயற்சி செய்தான். சாத்தியப்படவில்லை. தாகம் நாக்கை வறட்டிற்று, கண்கள் சுழன்றன. நெஞ்சு படீல் படீலென்று புடைத்துக் கொண்டது. "தெய்வமே, என்னைக் கொல்லவா நிச்சயித்து விட்டாய்?" என்று கூவினான்.

"ஆம்" என்றொரு குரல் கேட்டது.

"ஆமென்கிறாயே, நீ யார்?" என்று வினவினான்.

"நான் காலன். உன் உயிரைக் கொண்டுபோக வந்திருக்கிறேன்" என்று அந்த மறை குரல் சொல்லிற்று.

அப்போது திடசித்தன்: "நான் யௌவனப் பருவத்தில் இருக்கிறேன், அறிவிலும் அன்பிலும் சிறந்த என்து மனைவியையும், சிங்கக் குட்டி போன்ற என் மகனையும் செழிப்பும் புகழும் மிகுந்த என் நாட்டையும் விட்டுவிட்டு உன்னுடன் வருவதில் எனக்கு ஸம்மதமில்லை. இங்கிருந்து போய்விடு" என்றான். மறை குரல் கொல்லென்று சிரித்தது.

"நான் எப்போது கொண்டுபோகப்படுவேன்?" என்று திடசித்தன் கேட்டான்.

"விடியும் ஒரு ஜாமத்திற்குள்ளே" என்று குரல் சொல்லிற்று.

இது கேட்ட மாத்திரத்திலே திடசித்தன் அயர்ந்து போனான். கண்கள் முன்னிலும் அதிகமாகச் சுழன்றன. நெஞ்சு முன்னிலும் விரைவாக அடித்தது. கால்கள் பதற லாயின.

அப்போது அவனுடைய தாய் சொல்லிக்கொண்டிருந்த மந்திரமொன்று நினைப்பு வந்தது. உடனே உச்சரித்தான். தாய் இறந்துபோகும் சமயத்தில் அவனை அழைத்து அந்த மந்திரத்தை அவன் காதிலே உபதேசம் செய்துவிட்டு, "மகனே, உனக்கு எவ்வளவு பெரிய ஆபத்து வந்த சமயத் திலும் நீ இம் மந்திரத்தை உச்சரித்தால் விலகிப் போய் விடும்" என்று சொல்லியிருந்தாள். இப்போது அதனை உச்சரித்தான். "கரோமி" (செய்கிறேன்) என்பதே அம் மந்திரம். "கரோமி கரோமி" என்று மூன்றுதரம் சொன்னான்.

காலிலே ஒரு பாம்பு வந்து கடித்தது.

"தாயே, உன் மந்திரத்தின் பயன் இதுதானா?" என்று அலறினான்.

"அஞ்சாதே, மந்திரத்தைச் சொல்லு, மந்திரத்தைச் சொல்லு, மந்திரத்தைச் சொல்லு" என்று அசரீரி வாக்குப் பிறந்தது.

இந்தப் புதிய வாக்கைக் கேட்கும்போது அவனுடைய தாயின் குரலைப் போலேயிருந்தது.

கரோமி, கரோமி, கரோமி, செய்கிறேன், செய் கிறேன், செய்கிறேன் என்று மறுபடி ஜபிக்கலானான்.

"குரு, குரு, குரு" (செய், செய், செய்) என்றது அசரீரி. உடனே மூச்சை உள்ளே இழுத்து அமானுஷிகமான

வேகத்துடன் கைகளை உதறினன். கைத்தலைகள் படீ ரென்று நீங்கின. உடைவாளையெடுத்தான். "செய். செய், செய்" என்று மறுபடி சத்தம் கேட்டது. பாம்பு கடித்த கால்விரலைப் பளிச்சென்று வெட்டி எறிந்து விட்டான். குரு, குரு, குரு என்ற சத்தம் மீண்டும் கேட்டது.

உடம்பிலிருந்த துணியைக் கிழித்து, மண்ணிலே புரட்டி அதிக ரத்தம் கால் விரலிலிருந்து விழாதபடி சுற்றிக் கொண்டான்.

மறுபடியும் 'செய்' என்ற தொனி பிறந்தது. தலைகளை வாளால் வெட்டிவிட்டான்.

அப்போது அவனுடைய சரீரத்திலே மறுபடியும் ஆயாஸமுண்டாயிற்று. அப்படியே சோர்ந்து விழுந்தான். ஜ்வரம் வந்துவிட்டது. மரணதாகமுண்டாயிற்று.

"ஐயோ தாகம் பொறுக்கவில்லையே, என்ன செய் வேன்?" என்று புலம்பினன்.

"மந்திரத்தை ஜபம் பண்ணு" என்றது அசரீரி.

"கரோமி,கரோமி, கரோமி' என்று தாய் மந்திரத்தை மறுபடி ஜபித்தான்.

"செய்" என்று கட்டளை பிறந்தது.

"என்ன செய்வது?" என்றேங்கினன்.

"சோர்வடையாதே, செய்கை செய்" என்றது தொனி.

"என்ன செய்வது?" என்று பின்னொரு முறை கேட்டான்.

"கல்லிலே முட்டு" என்று கட்டளை பிறந்தது.

எழுந்துவந்து குகையை மூடியிருந்த பாறையிலே போய் முட்டினான். மண்டையுடைந்து செத்தால் பெரிதில்லையென்று துணிவு கொண்டு செய்தான். மண்டை உடையவில்லை. குகையை மூடிச் சென்றவர்கள் அவசரத்தாலே அந்தக் கல்லை மிகவும் சரிவாக வைத்துவிட்டுப் போயிருந்தார்கள். பாறை சரிந்து கீழே விழுந்துவிட்டது. வெளியே வந்து பார்த்தான். சூர்யோதயம் ஆயிற்று. கரோமி, கரோமி, கரோமி, செய்கிறேன், செய்கிறேன், என்று சொல்லிக்கொண்டு தனது ராஜதானி போய்ச் சேர்ந்தான். பிறகு அவனுக்கோர் பகையுமில்லை.

## 65. புதிய கோணங்கி

### (அதாவது குடுகுடுப்பைக்காரன்)

வேதபுரத்தில் ஒரு புதுமாதிரி குடுகுடுப்பைக்காரன் புறப்பட்டிருக்கிறான். உடுக்கைத் தட்டுவதிலே முப்பத்தைந்து தாள பேதங்களும், அவற்றிலே பல விந்நியாசங்களும் காட்டுகிறான். தாள விஷயத்திலே மஹா கெட்டிக்காரன். உடம்பு மேலே துணி மூட்டை சுமந்து கொண்டு போவதில்லை. நல்ல வெள்ளை வேஷ்டி உடுத்தி, வெள்ளைச் சட்டை போட்டுக்கொண்டிருக்கிறான். தலையிலே சிவப்புத் துணியால் வளைந்து வளைந்து பெரிய பாகை கட்டியிருக்கிறான். பாகையைப் பார்த்தால் நெல்லூர் அரிசி மூட்டையிலே பாதி மூட்டையைப் போலிருக்கிறது. நெற்றியிலே பெரிய குங்குமப் பொட்டு, மீசையும் கிருதாவுமாக மிகவும் விரிந்த பெரிய முகத்துக்கும் அவனுடைய சிவப்பு நிறத்துக்கும் அந்தக் குங்குமப் பொட்டு நன்றாகப் பொருந்தியிருக்கிறது. ஆள் நெட்டை, தடியன். காலிலே ஹைதராபாத் ஜோடு மாட்டியிருக்கிறான். நேற்றுக்

*காலையிலே, அவன் நம்முடைய வீதி வழியாக வந்தான். உடுக்கையிலே தாள விஸ்தாரம் நடக்கிறது. பெரிய மிருதங்கக்காரன் வேலை செய்வது போலச் செய்கிறான், நல்ல கெட்டிக்காரன். அவன் சொன்னான்:—*

"குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு;
நல்ல காலம் வருகுது; நல்ல காலம் வருகுது;
ஜாதிகள் சேருது; சண்டைகள் தொலையுது;
சொல்லடி, சொல்லடி, சக்தி மாகாளி,
வேத புரத்தாருக்கு நல்ல குறிசொல்லு;
தரித்திரம் போகுது, செல்வம் வருகுது;
படிப்பு வளருது, பாவம் தொலையுது;
படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்
போவான், போவான்; ஐயோவென்று போவான்,
வேத புரத்திலே வியாபாரம் பெருகுது;
தொழில் பெருகுது; தொழிலாளி வாழ்வான்;
சாத்திரம் வளருது; சூத்திரந் தெரியுது;
மந்திரம் பெருகுது; தந்திரம் வளருது;
மந்திர மெல்லாம் வளருது; வளருது!
குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு,
சொல்லடி, சொல்லடி, மலையாள பகவதீ.
அந்தரி, வீரி, சண்டிகை, சூலி;
குடுகுடு குடுகுடு"

*இப்படி அவன் சொல்லிக் கொண்டு போவதை நான் மெத்தையிலிருந்து கேட்டேன். இதென்னடா புதுமையாக இருக்கிறதென்று ஆச்சரியத்துடன் அவனை நிற்கச் சொன்னேன். நின்றான். கீழே இறங்கிப்போய், அவனை ஸமீபத்தில் அழைத்து "எந்த ஊர்?" என்று கேட்டேன். "சாமி, குடுகுடுக்காரனுக்கு ஊரேது, நாடேது? எங்கேயோ பிறந்தேன், எங்கேயோ வளர்ந்தேன்,*

எங்கெல்லாமோ சுத்திக்கொண்டு வருகிறேன்'' என்ருன். அப்போது நான் சொன்னேன் :—

''உன்னைப் பார்த்தால் புதுமையாகத் தெரிகிறது. சாதாரணக் கோணங்கிகளைப் போலில்லை. உன்னுடைய பூர்வோத்தரங்களைக் கூடியவரையில் ஸவிஸ்தாரமாகச் சொல்லு. உனக்கு நேர்த்தியான சரிகை வேஷ்டி கொடுக்கிறேன்'' என்றேன். அப்போது குடுகுடுக்காரன் சொல்லுகிருன் : ''சாமி, நான் பிறந்த இடந்தெரியாது. என்னுடைய தாயார் முகம் தெரியாது; என்னுடைய தகப்பனுருக்கு இதுவே தொழில். அவர் தெற்குப் பக்கத்தைச் சேர்ந்தவர். 'ஒன்பது கம்பளத்தார்' என்ற ஜாதி. எனக்குப் பத்து வயதாக இருக்கும்போது தஞ்சாவூருக்கு என் தகப்பனுர் என்னை அழைத்துக்கொண்டு போனுர். அங்கே வைசூரி கண்டு செத்துப்போய்விட்டார். பிறகு நான் இதே தொழிலில் ஜீவனம் செய்துகொண்டு பல தேசங்கள் சுற்றி ஹைதராபாத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். அப்போது எனக்கு வயது இருபதிருக்கும். அங்கே ஜான்ஸன் என்ற துரை வந்திருந்தான். நல்ல மனுஷ்யன். அவன் ஒரு 'கம்பெனி' ஏஜண்டு; இந்தியாவிலிருந்து தாசிகள், நட்டுவர், கழைக் கூத்தாடிகள், செப்பிடு வித்தைக்காரர், ஜாலக்காரர் முதலிய பல தொழிலாளிகளைச் சம்பளம் கொடுத்துக் கூட்டிக்கொண்டு போய், வெள்ளைக்காரர் தேசங்களிலே பல இடங்களில் கூடாரமடித்து வேடிக்கை காண்பிப்பது அந்தக் கம்பெனியாரின் தொழில். விதி வசத்தினுல் நான் அந்த ஜான்ஸன் துரை கம்பெனியிலே சேர்ந்தேன். இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய ஐரோப்பிய தேசங்களிலே ஸஞ்சாரம் செய்திருக்கிறேன். அமெரிக்காவுக்குப்போயிருக்கிறேன். இரண்டு வருஷங்களுக்கு முன்பு சண்டை தொடங்கினபோது, மேற்படி 'கம்பெனி' கலைந்து போய்விட்டது. எங்களுக்கெல்லாம் பணம் கொடுத்து

இந்தியாவுக்கு அனுப்பிவிட்டார்கள். உயிருள்ளவரை போஜனத்துக்குப் போதும்படியான பணம் சேர்த்து வைத்திருக்கிறேன். ஆனாலும் பூர்வீகத் தொழிலைக் கைவிடுவது ஞாயமில்லை என்று நினைத்து இங்கு வந்த பின்னும் பல ஊர்களில் சுற்றி, இதே தொழில் செய்துவருகிறேன்.

ஐரோப்பா முதலிய தேசங்களில் சுற்றின காலத்தில் மற்றக் கூத்தாடிகளைப்போல வீண் பொழுது போக்காமல், அவ்விடத்துப் பாஷைகளைக் கொஞ்சம் படித்துவந்தேன். எனக்கு இங்கிலீஷ் நன்ருகத் தெரியும். வேறு சில பாஷைகளும் தெரியும். அநேக புஸ்தகங்கள் வாசித்திருக்கிறேன். இங்கு வந்து பார்க்கையிலே அவ்விடத்து ஜனங்களைக் காட்டிலும் இங்குள்ளவர்கள் பல விஷயங்களிலே குறைவு பட்டிருக்கிருர்கள்.

நம்முடைய பரம்பரைத் தொழிலை வைத்துக்கொண்டே ஊரூராகப் போய் இங்குள்ள ஜனங்களுக்குக் கூடியவரை நியாயங்கள் சொல்லிக்கொண்டு வரலாமென்று புறப் பட்டிருக்கிறேன். இதுதான் என்னுடைய விருத்தாந்தம்'' என்ருன்.

ஒரு ஜரிகை வேஷ்டி எடுத்துக் கொடுக்கப்போனேன். போன தீபாவளிக்கு வாங்கினது; நல்ல வேஷ்டி.

''சாமி வேண்டியதில்லை'' என்று சொல்லி விட்டு அவன் மறுபடி உடுக்கையடித்துக்கொண்டு போய் விட்டான். போகும் போதே சொல்லுகிருன் :—

"குடு குடு, குடு குடு, குடு குடு, குடு குடு
சாமி மார்க்கெல்லாம் தைரியம் வளருது;
தொப்பை சுருங்குது; சுறுசுறுப்பு விளையுது;
எட்டுலட்சுமியும் ஏறி வளருது,
பயந் தொலையுது, பாவந் தொலையுது

சாத்திரம் வளருது, சாதி குறையுது,
நேத்திரம் திறக்குது, நியாயந் தெரியுது;
பழைய பயித்தியம் படீலென்று தெளியுது
வீரம் வருகுது, மேன்மை கிடைக்குது—
சொல்லடீ சக்தி, மலையாள பகவதி
தர்மம் பெருகுது தர்மம் பெருகுது."

என்று சொல்லிக் கொண்டே போனான். அவன் முதுகுப்புறத்தை நோக்கி, தெய்வத்தை நினைத்து, ஒரு கும்பிடு போட்டேன்.

## 66. லார்டு கர்ஸனும் ஹிந்துக்களின் ஒழுக்கமும்

*ஜூலை 7, 1906*

கல்கத்தா யூனிவர்சிடியில் பட்டம் பெறும் இளைஞர்களின் முன்பு லார்டு கர்ஸன் செய்த உபந்நியாசத்தில் ஹிந்துக்களைப் பற்றியும், அவர்களது பிரதான கிரந்தங்களைப் பற்றியும் கூறிய பழிச்சொல் நம்மவர்கள் மனதிலிருந்து ஒருபோதும் நீங்க மாட்டாது. இந்தியர்கள் பெரும்பாலும் அசத்தியவாதிகளென்று அந்த மனிதன் வாய் கூசாமல் பேசினான். கொரியா தேசத்து மந்திரியிடம் தாம் பொய் வார்த்தை சொல்லி ஏமாற்றியதாகத் தமது புஸ்தகத்திலேயே அவர் எழுதி வைத்திருப்பதை உடனே இத்தேசத்துப் பத்திரிகைகள் எடுத்திக் காட்டின. அப்பொழுதே, அவருக்கு நேர்ந்த அவமானத்திற்குக் கணக்கில்லை. இப்போது மறுபடியும், மிஸ்டர் டி. ஸ்மிட்டன் (Donald Smeaton) என்ற ஒரு ஆங்கிலேயர் லார்டு கர்ஸன் யோக்கியத்தைப்பற்றி ஓர் வேடிக்கையான திருஷ்டாந்தம் தெரிவிக்கிறார். இப்போது மிஸ்டர் ஸ்மிட்டன்

(பார்லிமெண்டு) மெம்பராக இருப்பவர். இவர் ஆதியில் பர்மாவிலே உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் அபின் ஏலத்தைக் குறைக்கவேண்டு மென்ற விஷயத்தைப் பற்றி மிஸ்டர் ஸ்மிட்டன் லார்டு கர்ஸனுக்கு எழுதிக் கேட்டுக் கொண்டார். அதற்கு, லார்டு கர்ஸன் தமது கையாலேயே எழுதிய மறுமொழி யில் பின்வருமாறு கூறினர் :— "நீர்தாம் ஒழுங்கையும் மனச்சாக்ஷியையும் அதிகமாகக் கவனிக்கின்றீர். ஆகை யினுல், நீர் ஓர் பிரிட்டிஷ் மாகாணத்தில் உத்தியோகம் பார்க்க உதவமாட்டீர்" என எழுதியிருக்கிறுர். எனவே தர்ம ஒழுங்குள்ளவனும் மனச்சாக்ஷிப்படி நடப்போனும் பிரிட்டிஷ் ஆட்சியில் உத்தியோகம் பார்க்கத் தகுதி யில்லாதவனென்று லார்டு கர்ஸன் எண்ணியிருந்ததாகத் தெளிவுபடுகிறது. வெளிக்கு, பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் எல்லாம் மகாதர்மப் பிரியர்களென்றும், தேவ புருஷர் களென்றும் பேசிக் கொண்டிருந்த லார்டு கர்ஸன் தமது அந்தரங்கத்திலே பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் உத்தியோகம் பார்ப்பவன் சிறிதேனும் தர்ம நெறி அறியாத நீச்சனு யிருக்க வேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டிருக்கிறுர். மிஸ்டர் மார்லி இங்கிலாந்திற் கென்று ஓர் மனச்சாக்ஷியும், இந்தியாவுக் கென்று மற்ற மனச்சாக்ஷியும் வைத்துக் கொண்டிருப்பது போல, லார்டு கர்ஸனும் பிரிட்டிஷ் மாகாணங்களின் அதிகாரங்களைப் பற்றி வெளியில் சொல் வதற்கோர் அபிப்பிராயமும் மனதுக்குள்ளே மற்ற அபிப் பிராயமும் வைத்துக் கொண்டிருக்கிறுர்.

இப்படி ராக்ஷசத்தனமான கொள்கை வைத்திருந்த இந்த மனிதன் இஷ்டப்படி ஆளும்படியாய் முப்பதுகோடி ஜனங்கள் இவருக்குக் கீழே வைக்கப்பட்டிருந்தார்கள் என்பதை நினைக்கும்போதே மனம் பதறுகிறது. இவரு

டைய ஆட்சிக் காலத்தில் இவரைப் பற்றி இந்திய ஜனங்களும் ஜனத்தலைவர்களும் கொண்டிருந்த எண்ணம் பலம் அடைவதற்கு நாள்தோறும் புதிது புதிதாகக் காரணங்களேற்பட்டுக் கொண்டே வருகின்றன.

நன்றி : பாரதி தரிசனம்—முதற் பாகம்

## 67. புதிய வருஷம்

*ஜனவரி 19, 1907*

தமிழர்களாகிய நமக்கு இவ்வாரம்பத்திலேயே புதிய வருஷம் பிறந்திருக்கின்றது. நம் முன்னோரெல்லாம் இப்புதிய வருஷம் எல்லா மங்களமும் கொண்டு வருமாறு ஸர்வமங்கள மூர்த்தியாகிய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். காலசக்கரமானது மேன்மேலும் சுழன்று கொண்டிருக்கின்றது. அதன் ஒரு வட்டத்தை ஒரு வருஷமென்று கொள்ளுகிறோம். இவ்வாறு ஒவ்வொரு வருஷத்திலும் ஜீவகணங்கள் அபிவிருத்தி அடைந்துகொண்டே செல்ல வேண்டுமென்பது தெய்வ சங்கற்பம். எனினும் ஜீவகணங்களிலே ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு தனி உயிரிலும் அதனதன் செய்கை (கர்ம) விளைவிற் கிணங்க மேற்பட்டாயினும் இழிவடைந்தாயினும் போகின்றது. ஜீவ இயற்கையிலே ஒரு விநோதம் என்னவென்றால் மேற்கொண்டு செல்லாதவர்கள் கீழ்ப்பட்டே தீரவேண்டும் மேலும் போகாமல், கீழும் போகாமல் ஒரே நிலைமையில் நிற்பது சாத்தியமில்லை. பெருமையடைய முயலாதவன் வறுமையடைந்தே தீரவேண்டும். நல்வழிப்பட முயலாதவன் தீவழிப்பட்டே தீருவான். மத்திய நிலையில் நிற்க முடியாது.

தமிழர்களாகிய நாம் சென்ற ஒரு வருஷத்திலே எவ்விதமான முயற்சிகளில் இறங்கியிருக்கின்றோம், என்ன

பலனடைந்திருக்கின்றோம், மேற்கொண்டு ஒரு அடி யெடுத்து வைத்திருக்கின்றோமா, பள்ளத்தில் இறங்கி யிருக்கின்றோமா? இதையெல்லாம் சிறிது கவனிப்போம். ஆழ்ந்து பார்க்குமிடத்து தமிழ்நாடு முன்னடி யெடுத்து வைத்திருக்கிறதென்பதாகவே சொல்லவேண்டும். ஏனெனில், தெற்கில் தமிழர்கள் முதலாக வடக்கே காஷ்மீரர்கள் வரை நம்மவருக்கெல்லாம் பொது நாடாகிய பாரத பூமியானது அபிவிருத்தியின் பாரிசமாகச் சிறிது நகர்ச்சி பெற்றிருக்கின்றது.

நாம் எவ்விதமான அபிவிருத்தியைக் குறிப்பிடுகிறோம் என்பதை எல்லோரும் எளிதாக அறிந்துகொள்ளக்கூடும். சர்வ அனுகூலங்களுக்கும் பொருள்களுக்கும் மூலாதார மாகிய ஸ்வராஜ்ய சௌபாக்கியத்தை நாம் அடைந்தே தீரவேண்டும் என்று பரதகண்டத்துப்பிரதிநிதிகளெல்லாம் இந்நாட்டு முக்கிய நகரத்திலே கூடி நிச்சயம் செய்து கொண்டிருக்கிறார்கள். இதுவரை அங்கங்கே தனித்தனி அறிஞர்கள் இருந்து இவ்விஷயமாய் பிரஸ்தாபங்களும், பிரயத்தனங்களும் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் தனித்தனியான மனிதர்கள் எத்தனை பெரியோர்களாய் இருந்தபோதிலும் அதிக அனுகூலம் சாதித்துவிட முடியா தல்லவா? தேசப் பிரதிநிதிகளின் மஹா சபையான காங்கிரஸ் இதுவரை இதைக் கவனியாமலிருந்தது. சென்ற தடவை இதைக் கவனித்ததுமட்டுமேயல்லாமல் ஷ மஹாசபை தெய்வ சாக்ஷியாக சரியான நிச்சயமும் செய்து கொண்டுவிட்டது. "ஸ்வராஜ்யமே நமது நோக்கம்; அதற்கு முதற்படியாக அன்னிய வஸ்து திரஸ்கார பிரதிக்கினையைக் கைக்கொள்ளுகிறோம்" என்று இந்நாட்டு முப்பத்து முக்கோடி ஜனங்களின் பிரதிநிதிகள் விரதம் பூண்டுவிட்டார்கள். இந்த விஷயத்தில் தமிழர்களாகிய நாம் வடநாட்டாரைப்போல அத்தனை பிரயாஸை எடுக்க

வில்லையே என்பது வாஸ்தவமே. எனினும், தந்தை பெற்ற செல்வத்திற்குத் தகுதியற்ற மகனும் பாத்தியதையடைவதுபோல தாய்ப் பூமியில் பொது அபிவிருத்தியிலே நாமும் பாகமடைந்திருக்கிறோம். இவ்விஷயமாக மற்றொருமுறை முழு மனதுடன் நம்மவர்களுக்குப் புது வருஷ வாழ்த்துக் கூறுகின்றோம். வாழ்க பாரதம்! வாழ்கமன் வாழ்க!

நன்றி : பாரதி தரிசனம்—இரண்டாம் பாகம்.